# மலரும் நினைவுகள்



பொன்.சந்திரசேகரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலரும் நினைவுகள்

பொன்.சந்திரசேகரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலரும் நினைவுகள்

சுயசரிதை

எழுதியவர்:
**பொன்.சந்திரசேகரி**
பெரியகுளம், நெடுங்கேணி

முதற்பதிப்பு:
ஆவணி 2011

அச்சுப்பதிப்பு:
வாணி கணினிப் பதிப்பகம்
இல.79, கந்தசாமி கோவில் வீதி, வவுனியா. தொ.பே: 024 2223658

# MALARUM NINAIVUGAL

AUTO BIOGRAPHY

BY:
**PON. SANTHIRASEKARI**
PERIYAKULAM, NEDUNKENI

1ST EDITION
AUGUST 2011

PRINTERS
VAANI PRINTERS
No.79, Kanthasamy kovil road, Vavuniya.
T.P: 024 2223658



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மனைவி செல்லாச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

வன்னிப் பிரதேசத்தில், சிறிதளவேனும் கல்விச் சூழ்நிலை இல்லாத, பெரியகுளம் என்னும் கிராமத்தில் பிறந்து, ஒரு சிறிய திண்ணைப் பள்ளியில், ஓரளவு கல்வியறிவுள்ள ஒரு பெரியாரிடம் ஆரம்பக் கல்வியைப் பெற்று, ஒரு தமிழ் ஆசிரியராக நல்லூர் ஆசிரியர் கலாசாலையில் பயிற்சி பெற்று, தமிழ் ஆசிரியர் என்ற தராதரம் பெற்றமையே எனது கல்வித் தகைமை.

இவ்வாறான தராதரத்தைப் பெற்ற நான், ஆசிரியர் பயிற்சிக் காலத்தில் யாழ் குடாநாட்டையும், ஆசிரியர் சேவைக் காலத்தில் இலங்கையின் பல பாகங்களையும் சுற்றித்திரிந்து, அவ்விடங்களின் சகல வளர்ச்சி நிலைகளையும் அவதானித்துள்ளேன். அந் நிலையில் அவ்வாறு ஏனைய பிரதேசங்கள் வளர்ச்சி பெற்று இருந்த நிலைகளோடு வன்னிப் பிரதேசத்தின் வளர்ச்சி நிலைகளை ஒப்பிட்டுச் சிந்தித்த பொழுது, வன்னிப் பிரதேசமும் சகல நிலைகளிலும் வளர்ச்சி பெற வேண்டும் என்ற உணர்வு என்னை உறுத்திக்கொண்டே இருந்தது. இருக்கிறது.

எனக்கு ஏற்பட்ட இவ்வாறான உணர்வு, வன்னி மக்கள் மத்தியில் ஏற்பட வேண்டும் என்ற உணர்வின் அடிப்படையில்தான் எனது மனதில் மலர்ந்த நினைவுகளை இந்நூலின் வாயிலாக வெளியிட தூண்டப்பட்டுளேன்.

வன்னியின் வளர்ச்சி பற்றிச் சிந்தித்த நான், வன்னிப் பிரதேசத்தின் கடந்தகால வரலாற்றை அறிவதற்குப் பெரு முயற்சி செய்தேன். எழுத்து ரூபத்திலான வரலாற்றுக் குறிப்புகள் எதுவும் கிடைக்கவில்லை. அதனால் வன்னிப் பிரதேசத்தில் வாழ்ந்த முதியோர்கள் பலருடன் கலந்துரையாடிப் பெற்ற தகவல்களின் அடிப்படையிலும், அழிவுற்ற சின்னங்களை ஆராய்ந்த அடிப்படையிலும் எனது கருத்துக்கள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

வன்னிப் பிரதேசம் முழுமையான வளர்ச்சி பெற வேண்டும் என்ற ஆவல் இருந்த போதிலும், நெடுங்கேணியை மையமாகக் கொண்டு இதனைச் சுற்றியுள்ள கிராமங்கள் அனைத்தும் வளர்ச்சி பெறவேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற கருத்தின் அடிப்படையில் முதலில் நெடுங்கேணிப் பாடசாலையை ஒரு மத்திய மகாவித்தியாலயமாக அமைத்து அதில் அயல்புறக் கிராமப் பிள்ளைகள் இணைந்து உயர் தரம்வரை படிக்க வாய்ப்பை ஏற்படுத்தும் நோக்கில் கட்டிட வசதிகளை அதிகரித்து, அந்நோக்குடன் நிறைவு செய்யப்பட்டது. அத்துடன் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், விளை பொருள் அபிவிருத்திச் சங்கம் என்பவற்றில் அங்கம் வகித்து பொதுமக்களின் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டன. ஒரு பிரதேசம் அபிவிருத்தி செய்யப்படுவதற்கு, உணர்ச்சிபூர்வமாக செயற்படும் ஓர் அரசியல் தலைமைத்துவம் அவசியம் என்பதற்கான சிறுமுயற்சிகளும் என்னால் மேற்கொள்ளப் பட்டன.

அக்காலகட்ட பாராளுமன்ற உறுப்பினரின் பாரபட்சமான செயற்பாடுகளால் வெறுப்படைந்த நான், எனது 52வது வயதில் சேவையில் இருந்து ஓய்வுபெற்று அரசியலில் ஈடுபடவேண்டிய நிலைமை ஏற்பட்டது. அத்தேர்தலில் தோல்வி அடைந்தாலும், மக்களுக்குச் சேவை செய்யவேண்டும் என்ற உன்னத கோட்பாட்டின் அடிப்படையில் விடுதலைப் போராட்ட காலத்தில் முல்லைத்தீவு பிரஜைகள் குழுவின் தலைவராக பொறுப்பேற்று, போர் அவலங்களால் இடர்பாடுகளுக்கு உள்ளாகிய மக்களுக்கு வேண்டிய உதவிகள் புரியப்பட்டன. அதே காலகட்டத்தில் மணலாற்றுப் பிரதேசத்தில் பேரினவாதிகள் ஆக்கிரமித்துக் குடியேறியமையை எதிர்த்து அரசுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டன. அமைதிப்படை என்ற பேரில் இலங்கைக்கு வருகைதந்த இந்திய ராணுவம் மேற்கொண்ட அடாவடித் தனங்களை முல்லைத்தீவு பிரஜைகள் குழு கண்டித்து இந்திய மத்திய அரசுக்கு முறையீடுகள் செய்து நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

மேலும் இறுதியாகவும் வன்னிப் பிரதேச மக்களுக்கு அறிவுறுத்திக்கூற விரும்புவது, பிரதேசத்தின் வளர்ச்சியில் அனைவரும் ஒன்றுபட்டு அக்கறையோடு செயற்படவேண்டும் என்பதே ஆகும்.

இந்நூலின் உருவாக்கத்தில் அரும்பாடுபட்ட தமிழறிஞர் அகளங்கன் அவர்களுக்கும், இந் நூலினை எழுத்து ரூபத்தில் தருவதற்கு உதவிய செல்வி.லஜந்தா சோதிலிங்கம் அவர்களுக்கும் வாணி அச்சகத்தினருக்கும் என் நன்றிகள்.

**பொன். சந்திரசேகரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

**கலாநிதி**
**தமிழ்மணி அகளங்கன்**

திரு.பொ.சந்திரசேகரி அவர்களின் மகள் தமிழரசி அவர்கள் யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்தில் இந்து நாகரிகத்துறைச் சிறப்புப் பாட மாணவியாகக் கல்விகற்ற காலத்தில் எனக்கு அவர் மூத்த (Senior) தொகுதி மாணவி.

நாங்கள் இருவரும் வேறுவேறு துறைகளில் கல்வி கற்றுக் கொண்டிருந்தபோதும் அறிமுகம் இருந்தது. அக்காலத்தில் அங்கு கல்வி கற்ற பெரும்பாலான மாணவர்களுக்கு என்னைத் தெரியும். எனக்கும் அவர்களைத் தெரியும். ஏனெனில் நான் தமிழ்மன்றத்தின் தலைவராகப் பிரபல மானவனாக இருந்தேன்.

1977ம் ஆண்டு பொதுத் தேர்தலில் திரு.பொ.சந்திரசேகரி அவர்கள் முல்லை மாவட்டத்தில் திரு.X.M.செல்லத்தம்பு அவர்களுக்கு எதிராக சுயேட்சையாகப் போட்டியிட்டதனால் மிகுந்த பிரபலம் அடைந்தார்.

1977ஆம் ஆண்டு தமிழர் விடுதலைக் கூட்டணியின் எழுச்சியினால் திரு.X.M.செல்லத்தம்பு வெற்றி பெற்றார். மக்கள், கூட்டணி என்ற வகையில்தான் செல்லத்தம்புவை ஆதரித்தனர்.

தமிழர் விடுதலைக்கூட்டணி ஆதரவாளர்களில் பெரும்பாலானோர் செல்லத்தம்பு வெல்வதை விரும்பவில்லை. இருப்பினும் கட்சி என்ற அடிப்படையில் வேறு வழியின்றி வேதனையோடு செல்லத்தம்புவை வெல்லச்செய்தனர்.

இந்த உண்மை எனக்கு நன்றாகத் தெரியும். ஏனெனில் நான் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்தவன். அத்தோடு தமிழர் விடுதலைக்கூட்டணியின் ஆதரவாளன், முல்லைத்தீவு மாவட்டம் தவறி விடுமோ என்ற அளவுக்கு எங்களுக்கு அச்சம் இருந்தது.

திரு.பொ.சந்திரசேகரி அவர்களோடு எனக்கு நேரடியான பழக்கம் ஏற்பட்டது. 2000இன்பின் தான் என்று நினைக்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த மூன்று மாதங்களுக்கு முன் அவர் என்னிடம் வந்து தனது சுயசரிதையை வெளியிடவேண்டும் என்ற தனது விருப்பத்தை வெளியிட்டார்.

சுயசரிதையை எழுதுவதற்குரிய தகுதி இவருக்கு உண்டு என்பதை நான் அறிவேன். இவரது சுயசரிதை இவரது மண்ணோடும் மக்களோடும் பின்னிப்பிணைந்தது என்பதையும் நான் நன்கு அறிந்திருந்தேன். அதனால் அவரது சுயசரிதையை நூலாக்கம் செய்வது நல்லது என ஆலோசனை கூறினேன்.

நுலாக்கும் முயற்சியை என்னிடமே விட்டுவிட்டார். **மலரும் நினைவுகள்** என்ற பெயரில் இவரின் சுயசரிதை உங்கள் கைகளில் தவழ்கிறது.

கலாநிதி முல்லைமணி (வே.சுப்பிரமணியம்,) அவர்களின் "நினைவுச் சரங்கள்" சுயசரிதை நூல், முல்லை மாவட்டம் பற்றிய பல தகவல்களைத் தருவது போல, இம் "மலரும் நினைவுகளும்" நெடுங்கேணி, முல்லைத்தீவுப் பகுதிகள் சம்பந்தமான பல தகவல்களைத் தருகின்றது.

கலாநிதி முல்லைமணி அவர்களும், நிலக்கிளி நாவலாசிரியர் திரு.அ.பாலமனோகரன் அவர்களும் இலக்கியம் மூலமாக வன்னியைப் படம் பிடித்துக்காட்டியுள்ளனர்.

அருணா செல்லத்துரை அவர்களும், முல்லைமணி அவர்களும் வன்னியின் வரலாற்றையும் ஆராய்ந்து எழுதியுள்ளனர்.

J.P. லூயிஸ் அவர்களது Manual of the Vanni districts என்ற வன்னியின் கைநூல் தமிழ் மொழி பெயர்ப்பாக வெளிவரவிருக்கும் இந்நேரத்தில் மலரும் நினைவுகள் பிற்கால வன்னியைக்காட்டும் சிறந்த நூலாக வெளிவருகிறது.

வன்னி மண் ஆக்கிரமிக்கப்பட்டு அபகரிக்கப்படுகின்ற அவல நிலை, ஆதாரங்களோடு இந்நூலில் காட்டப்பட்டுள்ளது. மணலாறும் அதைச் சூழ்ந்த பகுதிகளும் தமிழர் வாழ்விடங்கள் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

பல சமூக அமைப்புக்களில் இந்நூலாசிரியர் பொறுப்பான பதவிகளை வகித்தமையாலும், ஆசிரியராக, அதிபராகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணிபுரிந்ததாலும், இலங்கையின் பல பிரதேசங்களில் கடமையாற்றியதாலும், அவருக்குள் இருந்த மண்பற்று பலசேவைகளைச் செய்யத் தூண்டியிருக்கின்றது.

வன்னி மக்கள் கல்வியிலும், பொருளாதார நிலையிலும் பின்தங்கியமைக்கான காரணிகளை ஆராய்ந்து சீர் செய்ய இவர் அரும்பாடுபட்டிருக்கிறார்.

நல்ல ஆசிரியராக, நல்ல அதிபராக, நல்ல தொழிற்சங்க வாதியாக, நல்ல விவசாயியாக, நல்ல சமூக சேவகனாக, நல்ல அரசியல் வாதியாக அவர் செயற்பட்ட விதம் இங்கே விரிந்து செல்கின்றது.

ஒதியமலை என்னும் கிராமத்தில் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்ட துயரச் சம்பவம் அவரது உள்ளத்தை எப்படி உருக்குலைத்தது என்பதை அறியமுடிகிறது. அதன் துயர வடுவாக முகச்சவரம் செய்வதை விடுத்த மனவுறுதி திகைக்க வைக்கிறது.

17 தடவைகள் அரசியல் பழிவாங்கலாக இடமாற்றங்கள் செய்யப்பட்டமையும், நெடுங்கேணிக் கூட்டுறவு வங்கிக் கொள்ளையும் விரிவாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இவரது தமிழ்ப்பற்று பிள்ளைகளின் பெயர்களில் தெரிகிறது. தமிழ்க் கலாசாரப் பற்று இவரது தேசிய உடையில் தெரிகிறது. இவரது சமூகப்பணி வரலாற்றில் என்றும் நிலைத்திருக்கும்.

மண் பற்றியும், மக்களின் வாழ்க்கை பற்றியும், கல்விபற்றியும் இவர் ஆற்றிய உரைகள் அழகாக இங்கே பதிவு செய்யப்பட்டுள்ளன.

எதிர்காலச் சந்ததிக்கு இந்நூல் ஒரு வரப்பிரசாதம், சமகாலத்தவர்களுக்கு இந்நூல் நினைவூட்டல் சுரங்கம். வன்னியை முன்னேற்ற வேண்டுமென்று உறுதியாக நினைப்பவர்களுக்கு இந்நூல் ஒரு சிறந்த வழிகாட்டி ஆதாரம். வரலாற்று ஆய்வாளர்களுக்கு இந்நூல் ஒரு வரலாற்றுப் பொக்கிசம்.

90 திருநாவற்குளம்
வவுனியா.

அன்புடன்
**அகளங்கன்**

15.08.2011



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னோர்

இலங்கைத்தீவில் வன்னிப்பிரதேசம் என்பது ஆரம்ப வரலாற்றுக்காலத்தில் திருகோணமலையில் இருந்து புத்தளம் வரையுள்ள கடல் சார்ந்தபிரதேசமாக கணிக்கப்பட்டது. ஆனால் தற்போது முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களையே வன்னிப்பிரதேசம் என்று வரையறுத்துக் கூறப்படுகிறது. இப்பிரதேசம் ஆனது நீண்டகால வரலாற்றைக்கொண்டது. ஆனால் இப்பிரதேசத்தில் குடியமர்ந்த வரலாற்றுக்குறிப்புகள் எழுத்துருபத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள ஆவணங்களாக எதுவும் கிடைப்பதாகஇல்லை. இப்பிரதேசத்தில் குடியேறிய மக்களின் உரையாடல், வரலாற்றுக்குறிப்புகள் மூலமும் இப்பிரதேசத்தில் அழிவுற்றுக்கிடக்கின்ற சின்னங்கள் மூலமும் பலதகவல்களைக் கூறக்கூடியதாக இருக்கின்றது.

தென் இந்தியாவில் சேர சோழ பாண்டிய மன்னர்களுடைய ஆட்சிக்காலத்தில் சோழ பாண்டிய மன்னர்கள் இடையிடையே இலங்கையின் வட பகுதியை ஆக்கிரமித்து தங்களின் ஆட்சிக்குஉட்படுத்தியதாக வாய்மொழிவரலாற்றுக் கூற்றின்மூலம் அறியக்கூடியதாக உள்ளது. அவ்வாறு சோழ பாண்டியமன்னர்கள் படையெடுப்புக்கள் நடத்தியபோது அவர்களின் படைப்பிரிவில் தஞ்சைமாவட்ட வடஆர்க்காடு, தென்ஆர்க்காடு பிரதேசங்களில் வாழ்ந்த வன்னியர்என்ற இனமக்கள் போராளிகளாக இப்பிரதேசத்திற்கு அழைத்துவரப்பட்டனர். அவ்வாறு அழைத்துவரப்பட்ட வன்னியர்இன மக்களில் பெரும் பகுதியினர் இலங்கையின் வடபகுதியில் நிரந்தரமாகக் குடியமர்ந்தார்கள். அவ்வாறு வன்னியர் இனமக்கள் இப்பிரதேசத்தில் குடியமர்ந்தமையினால் தான் இப்பிரதேசத்திற்கு வன்னி என்ற பெயரும் ஏற்பட்டதாக ஓர் ஐதீகம் உண்டு.

வன்னிப்பிரதேசத்தின் முழுமையான வரலாற்றை ஆய்வுசெய்து எழுதுவது என்நோக்கமாக இல்லை. வடக்கு கிழக்கு மாகாண எல்லைப்புறமாக அமைந்துள்ள. அக்காலத்தில் [illegible] என அழைக்கப்பட்டதும், தற்போது மணலாற்றுப் [illegible] வெலிஓயாப்பிரதேசம் என சிங்களத்திலும் [illegible]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேசத்தின் சில வரலாற்றுத் தகவல்களைத் தெரிவிக்கவுள்ளேன். இப்பிரதேசத்தில் உள்ள நிலவளம் நெற்செய்கைக்கு மிகவும் பொருத்தமாக அமைந்திருக்கிறது. அதன் காரணமாக இப்பிரதேசத்தில் ஆங்காங்கு கூட்டம் கூட்டமாக குடியேறி இருக்கிறார்கள். அவ்வாறு அவர்கள் குடியேறிய கிராமங்கள் பெரும்பாலும் குளப்பெயர்களை உடையனவாகவும், மலைப்பெயர்களை உடையனவாகவும், ஆற்றுப்பெயர்களை உடையனவாகவும் அமைந்திருப்பதைக் காணலாம். குறிப்பிட்ட இப் பிரதேசத்தில் அமைந்திருக்கும் சில முக்கிய கிராமங்கள் இங்கே குறிப்பிடப்படுகின்றன

❖ **அவையாவன**

| | |
|---|---|
| நவாலயங்குளம் | பாலாத்துக்குளம் |
| சிவாலயங்குளம் | நித்தகைக்குளம் |
| ஆலங்குளம் | கருவேப்பங்குளம் |
| முந்திரிகைக்குளம் | ஆமையன்குளம் |
| காட்டுத்தட்டாமலைக்குளம் | களகளப்பான்குளம் |
| மண்கிண்டிமலை | ஆண்டான்குளம் |
| சகலாத்துவெளி | கிரிமட்டிக்குளம் |
| அரியக்குண்டான்குளம் | காரவாய்க்கால்குளம் |
| சம்மளம்குளம் | பனையமுறிப்புக்குளம் |
| வேப்பங்குளம் | |

என்பன போன்ற இருநூறுக்குமேற்பட்ட குளங்கள் இப்பிரதேசத்தில் அழிவுற்றுஇருக்கின்றன. ஒரு காலகட்டத்தில் இப்பிரதேசத்தில் குடியிருந்தமக்கள் நெற்செய்கையையே பிரதானதொழிலாக கொண்டிருந்தார்கள் என்பதை அங்கு அமைந்துள்ள குளங்கள் மூலம் உறுதிப்படுத்தக்கூடியதாக உள்ளது. அவ்வாறு சீரும் சிறப்புமாக வாழ்ந்தமக்கள் இயற்கை அனர்த்தங்கள் காரணமாகவும் தொற்றுநோய்கள் காரணமாகவும் பேரழிவுக்கு உள்ளான தோடு இடம்பெயர்ந்தும் வெளியேறியுள்ளார்கள். முக்கியமாக இப்பிரதேசத்திற்குத் தெற்கே அமைந்துள்ள அக்காலத்தில் பதிவில்குளம் என்றும் சிங்கள ஆக்கிரமிப்புக்குப் பின்னர் பதவியாக்குளம் என்றும் அழைக்கப்படும் மாபெரும்குளம் பெருவெள்ளம் காரணமாக உடைப்பெடுத்த போதுதான் இப்பிரதேசம் முழுமையாக அழிவுற்றதென கருதப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு அழிவுற்ற பிரதேசத்தை ஆங்கிலஆட்சிக்காலத்தில் புனரமைத்து மக்களைக் குடியமர்த்தும் முயற்சிகள் எதுவும் நடைபெறவில்லை. அதனால் இப்பிரதேசம் முழுவதும் அடர்ந்தகாட்டுப்பிரதேசமாகக் காட்சியளித்தது.

அவ்வாறு அடர்ந்த காட்டுப்பிரதேசமான நிலப்பரப்பை 1960 ஆம் ஆண்டு வரையில் பெரியபணக்கார கம்பனிகளுக்கும், முதலாளிகளுக்கும் 25 வருட குத்தகை அடிப்படையில் கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்தது. சிலோன் தியேட்டர் கம்பனிக்கு 1500 ஏக்கரும், காகாபோட்கம்பனிக்கு 1000 ஏக்கரும், நீதிராஜாகம்பனிக்கு 1000 ஏக்கரும், பாய்கம்பனிக்கு 500 ஏக்கரும், டொலர் கம்பனிக்கு 500 ஏக்கரும், மேலும் 100 ஏக்கர் 50 ஏக்கர் 25 ஏக்கர் என்ற ரீதியில் பல பணம் படைத்தமுதலாளிகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டது. இந் நிலையில் ஓர் முக்கிய குறிப்பைப் பதிவு செய்யவேண்டி இருக்கிறது.

அதாவது மேற்கூறியவாறு பகிர்ந்தளிக்கப்பட்ட நிலப்பிரதேசத்தைப் பெற்றுக் கொண்டவர்கள், காட்டை அழித்து பயிர்செய்யும் நன்நிலமாக அபிவிருத்தி செய்தபின் அப்பிரதேசத்தை ஆக்கிரமித்து அங்கு இருப்போரைவெளியேற்றி விட்டு அப்பிரதேசத்தில் சிங்கள மக்களைக் குடியேற்ற வேண்டும் என்ற கபடநோக்கத்தை அடிப்படையாக வைத்து அக்காணிகளைப் பகிர்ந்தளித்திருக்கிறது. அத்துடன் எண்பதாம் ஆண்டு காலப்பகுதியில் மகாவலிஅபிவிருத்தி சபைக்குரிய(L) எல் வலயப் பிரதேசமென வர்த்தமானி அறிவுறுத்தல் மூலம் பிரகடனப்படுத்தியது. அதன் அடிப்படையில்தான் 83ம் ஆண்டுகலவரத்தின் போது அப் பிரதேசத்தில் குடியேறிஇருந்த பண்ணைக் குடியிருப்பாளர்களை அச்சுறுத்தி அங்கிருந்து வெளியேற்றிவிட்டு சிங்களமக்களை அப்பிரதேசத்தில் அரசு குடியேற்றம் செய்தது. அவ்வாறு ஆக்கிரமித்து சிங்களமக்கள் குடியேற்றப்பட்டதை முல்லைத்தீவு வவுனியாப் பிரதேசத்தில் உள்ள பொது அமைப்புக்கள் எதிர்த்து பலமனுக்களை அரசுதரப்பிற்குகையளித்தன. அவ்வாறுகையளிக்கப்பட்ட மனுக்கள்சார்பில் அரசு எவ்வாறான நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. இவ்விடயம் சார்பாக பின்வரும் தொடரில் விபரமான விளக்கம் தரப்படும்.

************



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. சந்ததி

எமது முன்னோர்கள் வாழ்ந்த பிரதேசத்தை அறிமுகம் செய்யும் நோக்குடன்தான் முன்னோர் என்ற தலைப்பில் விபரம் தரப்பட்டு இருக்கிறது. இந்நிலையில் எனது நேரடி உறவினர்கள்பற்றிய விபரங்கள் ஆரம்பிக்கப்படுகிறது. மேற்கூறப்பட்ட நவாலயம் பிரதேசத்தில்இருந்து மக்கள் இடம்பெயர்ந்த இறுதிக்கட்டத்தில் (பனையமுறிப்புக்குளம்) பனையமுறிப்பு என்ற கிராமத்தில் வேலுப்பிள்ளை என்ற பெயருடைய ஒருவர் குடியிருந்துள்ளார். அடர்ந்தகாட்டுப் பிரதேசத்தில் தனிமையாக வாழ்வது ஆபத்தெனநினைத்து அவர்களும் அங்கிருந்து குடிபெயர்ந்து மக்கள்குடியிருந்த (நெடுங்கேணி) ஒலுமடு என்னும் ஓர் சிறியகிராமத்தில் குடியேறினார். வேலுப்பிள்ளை என்பவருக்கு தாமோதரம்பிள்ளை என்னும் பெயருடைய ஒருமகன் இருந்துள்ளார். அவர்கள் குடியேறிய ஒலுமடுக்கிராமம் ஓர் சிறிய ஊர். ஐந்து ஆறு குடிகள் மாத்திரம் குடியிருந்தனர்.

அக்கிராமத்தில் ஒலுமடுக்குளம் என்ற பெயரில் ஓர்சிறு குளம் அமைந்திருந்தது. அக்கிராமவாசிகள் தொடர்ந்து அக்குளத்தின் கீழ் உள்ள நிலப்பரப்பில் விவசாயம் செய்தே வாழ்க்கையை நடத்திவந்தனர். அந்நிலையில் வேலுப்பிள்ளையின் மகன் தாமோதரம்பிள்ளை வளர்ந்து மணம்செய்யும் வயது எல்லையை அடைந்தார். அவருக்கு யாழ்ப்பாணம் நீர்வேலி என்னும் இடத்தில் வாழ்ந்த சின்னாச்சி என்ற ஓர் பெண்ணை மணம் முடித்துவைத்தனர். அவரின் குடும்பமும் ஒலுமடுக்கிராமத்திலேயே தொடர்ந்து வாழ்ந்துவந்தனர். அவர்களுக்கு பொன்னம்பலம் என்ற ஆண்குழந்தையும் செல்லாச்சி என்ற ஓர் பெண்குழந்தையும் பிறந்தனர். பிள்ளைகள் வளர்ந்து மணம் முடிக்கும் பருவத்தை அடைந்தபோது செல்லாச்சி என்பவருக்கு கோரமோட்டை என்னும் கிராமத்தில் உள்ள முத்தையா என்ற வாலிபனை மணம் செய்துகொடுத்தனர். மகன் பொன்னம்பலம் இளமைப்பருவத்தில் நீர்வேலி என்னும் கிராமத்தில் உறவினர் வீட்டில்நின்று பாடசாலையில்படித்து ஓரளவுகல்வியறிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்று இருந்தார். அவருக்கு ஒலுமடுக்கிராமத்துக்கு அண்மையில்உள்ள பெரியகுளம் என்னும்கிராமத்தில் குடியிருந்த சின்னையா என்னும் தம்பதியினரின்மகளான மீனாட்சி என்பவரை மணம் செய்துவைத்தனர். சின்னையா என்பவர்அப்பிரதேசத்தில் அதிகாரம்செலுத்தும் பெரியாராக வாழ்ந்தார். தனதுகிராமப் பிரச்சனைகளை சமரசம் செய்துவைப்பதோடு அயல் கிராமங்களிலும் அவர்களுடைய செல்வாக்கு இடம்பெற்று இருந்தது. அப் பகுதிக்கிராமமக்கள் அவருக்குமரியாதைசெலுத்தி பயபக்தியோடு வாழ்ந்தனர்.

பொன்னம்பலத்தை மணம்முடித்த மீனாட்சிஎன்பவர் இளம் பிள்ளை வாதம் காரணமாக ஒருகாலும்கையும் வலுஇழந்தவராக இருந்துள்ளார். அந் நிலையில் மீனாட்சியின் குடும்பம் ஓர் புகழ்பெற்ற குடும்பமாக இருந்த காரணத்தால் அவரை பொன்னம்பலம் விரும்பி மணம்முடித்தார். மணம்முடித்து அவர்களும் பெரியகுளம் கிராமத்திலேயே குடியிருந்தனர். பெரியகுளம்கிராமமும் ஒரு பத்து பதினைந்து குடும்பங்கள் குடியிருந்த சிறிய கிராமமேயாகும். அடர்ந்த காட்டுப் பிரதேசத்தின் மத்தியிலேயே கிராமம் அமைந்திருந்தது. கிராமத்தில் பாடசாலையோ அல்லது முன்னேற்றகரமான பொதுஅமைப்புகளோ எதுவும் இருக்கவில்லை.

பெரியகுளம்கிராமம் என்றபெயருக்கு ஏற்ப அக்கிராமத்தின் தெற்குப்புறமாக ஒரு பெரியகுளம் அமைந்திருந்தது. அக்குளம் பெரிய நீர்ப்பாசனக்குளமாக அரசால் பராமரிக்கப்பட்டு வந்தது. அதனால் அக்குளத்தை மேற்பார்வை செய்வதற்கு பொன்னம்பலம் என்பவரை அரசு நியமித்து ஒரு சிறுதொகைப்பணத்தைச் சம்பளமாகக் கொடுத்தது. அக்கிராமவாசிகள் அனைவரும் அக்குளநீரைப் பயன்படுத்தி தங்கள் வயல்களில் இரண்டுபோகநெற்செய்கையில் ஈடுபட்டனர். அதனால் ஓரளவுசிறப்பான வாழ்க்கையை நடத்துவதற்கு வேண்டிய வருமானத்தைப் பெற்றனர். அக்கிராம வீடுகள் அனைத்தும் ஓலைக்குடிசைகளாகவே இருந்தன.

இந்நிலையில் பொன்னம்பலம் தம்பதியினருக்கு 1920ஆம் ஆண்டு ஓர் ஆண்குழந்தை பிறந்தது. அதற்கு சிவசிதம்பரம் என நாமம்இட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து ஐந்து வருடங்களின் பின் 1925ஆம் ஆண்டு ஆவணி மாதம் ஒன்பதாம் திகதி ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அக்குழந்தையாகிய எனக்கு **சந்திரசேகரி** என நாமம் சூட்டினர். மேலும் மூன்று வருடங்களின்பின் 1928ம் ஆண்டில் ஓர் ஆண்குழந்தை பிறந்தது. அக் குழந்தைக்குச் சிவராசா என்று பெயரிட்டனர். ஒரு பெண்குழந்தை பிறக்கவில்லையே என்ற ஆதங்கம் இருந்தாலும் மும்மூர்த்திகளைப் பெற்றெடுத்துள்ளோம் என்ற மனத்திருப்தியோடு பிள்ளைகளை வளர்ப்பதில் அக்கறை காட்டினர்.

இந் நிலையில் அம்மாவால் தெரிவிக்கப்பட்ட ஓர் பயங்கர நிகழ்வைக் குறிப்பிடவேண்டியுள்ளது. அதாவது சந்திரசேகரி ஆகிய நான் பிறந்த மூன்றாவது மாதத்தில் வீட்டுக்குள் கட்டப்பட்ட சேலைஏணைக்குள் என்னை உறங்கச் செய்து விட்டு அம்மா விறகு எடுப்பதற்கு காட்டுக்குள் சென்றுள்ளார். அதேநேரம் அப்பாவும் (ஐயாவும்) வயலுக்குச் சென்றுவிட்டார்: எமதுவீடும் ஓர் ஓலைக்குடிசைதான். சமையல் அடுப்புக்குப் பக்கத்தில் இருந்த ஓலைத்தட்டியில் நெருப்புப்பிடித்து வீட்டின்மேல்கூரைவரை தீப்பிடித்து எரிந்துள்ளது. இந் நிலையில் நான் உறங்கிக்கொண்டிருந்த சேலைத்தொட்டிலும் எரிந்து தொட்டிலோடு நான் தரையில் வீழ்ந்துள்ளேன். வீடு எரிவதைக் கண்ட அயலவர் பலர் வீட்டிற்கு அண்மையில் வந்துள்ளனர். அயல்வீட்டில் விளையாடிக் கொண்டிருந்த அண்ணர் ஓடிவந்து தம்பி தம்பி என்று சத்தமிட்டிருக்கிறார். அவ்வேளை அம்மாவின் தகப்பனார் எரிந்துகொண்டிருந்த குடிசைக்குள் நுழைந்து என்னைத்தூக்கிக்கொண்டு வெளியேவந்துள்ளார். அவருக்கு சிறுசிறு தீக்காயங்கள் ஏற்பட்டன. ஆனால் குழந்தை ஆகிய எனக்கு எவ்வித காயங்களும் ஏற்படவில்லை. இச்சம்பவம் பற்றி கலந்துரையாடியவர்கள் பெரிய ஒரு தத்திலிருந்து நான் தப்பி விட்டதாக பேசிக் கொண்டார்களாம்.

*********



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3 கல்வி வளர்ச்சி

நான் முன்பு குறிப்பிட்டது போல என்னுடைய கிராமத்திலோ அல்லது அயல் கிராமங்களிலோ பாடசாலைகள் அமைந்திருக்கவில்லை. அதனால் எங்கள் கிராமத்தில் ஓரளவு கல்வி அறிவு பெற்ற சின்னையா என்னும் ஓர்பெரியார் அக்கிராமப்பிள்ளைகளை படிப்பிப்பதற்கு ஓர்திண்ணைப்பள்ளி நடத்தினார். அவ்வாறு நடத்தப்பட்ட திண்ணைப்பள்ளியில் நானும் சேர்ந்துபடித்தேன். முதலாம் இரண்டாம் வகுப்புகளுக்குரிய பாடப்புத்தகங்களோடு ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நன்நெறி ஆகியபுத்தகங்களை பயன்படுத்தி பாடங்களை நடத்தினார். 1935ஆம் ஆண்டு எமது கிராமத்திற்கு ஒரு மைல் துாரத்தில் அமைந்திருந்த ஒதியமலை எனும் கிராமத்தில் ஒரு அரசினர் பாடசாலை கட்டப்பட்டது. சாவகச்சேரியை சேர்ந்த சி.வி பொன்னையா என்னும் பெயருடைய ஆசிரியர்ஒருவர் அப் பாடசாலைக்கு நியமனம் பெற்று வந்தார். அப் பாடசாலையில் ஒதியமலைப் பிள்ளைகளோடு பெரியகுளம் கிராமப்பிள்ளைகளும் சேர்ந்துபடித்தோம். ஐந்தாம்வகுப்புவரை அப் பாடசாலையில் படித்தேன். படிப்பில் எனதுதிறமையையும் ஆர்வத்தையும் அவதானித்த ஆசிரியர் எனது பெற்றோரிடம் எனது படிப்பைப்பற்றி வியந்துகூறியபோது என்னை சாவகச்சேரியில் உள்ள பாடசாலைஒன்றில் சேர்த்தால் நான் உயர்வகுப்புவரை படித்து கல்வியில் நிச்சயமாக உயர்ந்த நிலையை அடைவேன் என்று கூறியுள்ளார்.

அதனைச் செவிமடுத்த எனதுபெற்றோர் அவரின் உதவியோடு சாவகச்சேரிசென்று படிக்க அனுமதித்தனர். என்னை அழைத்துச்சென்ற ஆசிரியர் சாவகச்சேரி அமெரிக்கன்மிசன் தமிழ்ப்பாடசாலையில் 1939ம் ஆண்டு மூன்றாம்தவணை ஆரம்பத்தில்சேர்த்தார். அதே ஆண்டு வருடமுடிவில் நடந்தபரீட்சையில் சித்தி அடைந்தமையால் அடுத்த ஆண்டில் ஆறாம்வகுப்பிற்கு சேர்க்கப்பட்டேன். ஆறாம் வகுப்பில் படித்தமாணவர்களுள் மிகத்திறமைசாலிகளாக விளங்கிய என்னையும் சிதம்பரம்பிள்ளை என்ற இன்னொரு மாணவனையும் இரட்டைவகுப்பேற்றம் தந்து அடுத்த ஆண்டு எட்டாம் வகுப்பில் சேர்க்கப்பட்டோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக் காலத்தில் எட்டாம் வகுப்பிற்கும் அரசாங்கப்பரீட்சையே நடைபெற்றது. அப்பரீட்சையிலும் மிகதிறமைச்சித்திபெற்றேன். அடுத்த ஆண்டு சிரேஸ்ரதராதரப்பத்திர (S.S.C) வகுப்பில் சேர்க்கப்பட்டேன். அவ்வகுப்பிலும் திறமைசாலியாகவே கணிக்கப்பட்டேன். அத்துடன் பேச்சுப் போட்டிகள் விளையாட்டுப் போட்டிகள் என்பவற்றிலும் திறமையைவெளிப்படுத்தி பரிசில்கள்பெற்றேன். அப்பாடசாலையின் மாணவர் மன்றத்தில் செயலாளராக தெரிவுசெய்யப்பட்டு மாணவர்மன்றக் கூட்டங்களை சீராகவும் சிறப்பாகவும் நடைமுறைப் படுத்தினேன். அதனால் ஆசிரியர்களும் சகமாணவர்களும் என்னைப்பாராட்டி கௌரவித்தனர். இந்நிலையில் (S.S.C) வகுப்பு பரீட்சையிலும் மிக திறமைச்சித்தியைப்பெற்று பாராட்டப்பட்டேன். அந்நிலையில் ஆங்கிலம் படிக்கவேண்டும் என்ற அவா ஏற்பட்டது. சாவகச்சேரி டிறிபேக்கு ஆங்கில பாடசாலையில் வயதான பிள்ளைகளுக்கு ஆங்கிலம் படிப்பிப்பதற்கு என A.S.C என்ற பெயரில் ஓர் ஆங்கில வகுப்பு ஆரம்பித்தார்கள். தமிழ் S.S.C வகுப்பில் சித்தியடைந்த மாணவர்கள் 30 பேர் வரையில் அவ் வகுப்பில் சேர்ந்து படித்தார்கள். நானும் அவ் வகுப்பில் சேர்ந்து ஓர் ஆண்டு காலம் படித்தேன்.

அவ்வாறு படித்துக்கொண்டு இருக்கும்பொழுது 1946ஆம் ஆண்டு நல்லூரில் ஆரம்பிக்கப்பட்ட ஐக்கிய கிறிஸ்தவ ஆசிரியகலாசாலைக்கு ஆசிரிய பயிலுனர்களை சேர்ப்பதற்கான புகுமுகப்பரீட்சை நடைபெற்றது. அப்பரீட்சையிலும் சித்தியடைந்து ஆசிரிய கலாசாலையில் பயிற்சி பெற்றேன். அப்பயிற்சிக்கலாசாலையில் 50 ஆண்களும் 50 பெண்களுமாக 100பேர் பயிற்சிபெற்றோம். இரண்டாம் உலகமகா யுத்தம் காரணமாக உணவுப்பஞ்சம் நிலவியகாலகட்டம் ஆகையால் விடுதிச்சாப்பாடு மாணவர்களுக்குத் திருப்தியாகக் கிடைக்கவில்லை. அப்படியிருந்தும் படிப்பில் முன்னேற்றம் காணவேண்டும் என்ற காரணத்தால் ஓரளவு பொறுமையாக இருந்துபடித்தோம். முதலாம் ஆண்டில் முக்கியமாக ஆசிரிய தரத்துக்குரிய பாடங்களே படிப்பிக்கப்பட்டன. தவணைப் பரீட்சைகளில் நான் முன்நிலையில் இருந்தேன்.

*********



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4. தென்னிந்தியச் சுற்றுலா

இந் நிலையில் தென்இந்தியாவுக்கு ஓர் சுற்றுலா மேற்கொள்ள வேண்டும் என்ற விருப்பம் ஏற்பட்டது. தனிமையாகப் போவதைப் பெற்றோர் விரும்பாமல் இருந்தும் இறுதியில் அனுமதித்தனர். கலாசாலை மூன்றாம் தவணைப் பரீட்சை முடிவில் விடப்பட்ட விடுமுறையில் இந்தியா போவதற்குப் புறப்பட்டேன். அக் காலத்தில் கப்பலில் இந்தியாவுக்குச் செல்லக்கூடிய பிரயாண வாய்ப்பு இருந்தது. எனது ஊரில் இருந்து புளியங்குளம் புகையிரத நிலையத்திற்குச்சென்று புகையிரத நிலையம்மூலம் தலைமன்னார் சென்று அங்கிருந்து கப்பல் மூலம் ராமேஸ்வரம்சென்று அங்கிருந்து புகையிரதத்தில் சென்னைக்குச் சென்றேன். நான் அவ்வாறு சென்னைக்குச் செல்லும் போது சென்னையில் உள்ள எவரஸ்ற் கொட்டேல்லில் தங்குவதற்கு ஒழுங்குசெய்துவிட்டுச் சென்றேன்.

ஆனால் கொட்டேலுக்கு நான் போனபோது தங்குவதற்கு இடம் இல்லை என்று கூறினர். அதனால் ஒரு ரிக்சோ வண்டியில் ஏறி தங்குவதற்கு ஓர் இடம் தேடி அலைந்துதிரிந்து, கடைசியில் ஓர் மடத்தில் அன்று இரவு தங்கினேன். மறுநாள் மவுன்றோட்டில் உள்ள ஒரு கொட்டேலில் அறை எடுத்துத் தங்கினேன். அவ்வாறு தங்கியிருந்து சென்னை நகரில் முக்கிய ஸ்தலங்களை பேரூந்தில் பிரயாணம் செய்துபார்த்தேன். சென்னை மாநகரிலுள்ள பிரமாண்டமான ஆலயங்களையும் தரிசித்தேன். அக் காலத்தில் தென் இந்தியாவில் தனித்தழிழ் நாடு அமையவேண்டுமென திராவிடக் கட்சிப் பிரசாரக்கூட்டங்கள் ஆங்காங்கு நாள்தோறும் நடைபெற்றன. அவ்வாறு நடைபெற்ற பல கூட்டங்களில் நானும் பார்வையாளனாக கலந்துகொண்டேன்.

பேச்சாளர்களின் அடுக்கு மொழி ஆவேசப்பேச்சுக்கள் மிகக் கவர்ச்சியாக இருந்தன. அவ்வாறு மேடைகளில் நானும் பேசவேண்டும் என்ற எனது அவாநிறைவேறும் வகையில் பிற்காலத்தில் என்னுடைய மேடைப் பேச்சுகளும் அமைந்திருந்தன. அதற்குப் பின் இலங்கையில் பல இடங்களிலும் நான் நிகழ்த்திய மேடைப்பேச்சுக்களைப் பலரும் பாராட்டினர். அதனால் நான் ஒரு மேடைப்பேச்சாளன் என்ற அபிப்பிராயம் மக்கள் மத்தியில் வளர்ந்திருந்தது. அங்கு தங்கியிருந்த பொழுது, திராவிடக்கட்சியின் பகுத்தறிவுப் பிரசாரக் கருத்துக்கள் நிறைந்த பல புத்தகங்களைப் பணம் கொடுத்து வாங்கி இங்கேகொண்டு வந்தேன். அங்கு தங்கியிருந்த குறுகிய காலத்துள் திருச்சி, திருச்செந்தூர், சிதம்பரம் ஆகிய ஆலயங்களுக்கும் சென்று வழிபாடுசெய்தேன்.

*********



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5 விடுமுறைக்குபின் ஆசிரியர் பயிற்சி

சுற்றுலாவை முடித்துக்கொண்டு இலங்கைக்கு வந்து எனது இரண்டாம் ஆண்டு ஆசிரியப்பயிற்சியைத் தொடர்ந்தேன். இரண்டாம் ஆண்டில் பயிற்சிக்குரிய பாடங்களைப்படிப்பதோடு அண்மையில் உள்ள பாடசாலைகளில் படிப்பிக்கும் பயிற்சியையும் பெற்றோம். பாலர் வகுப்புத்தொடக்கம் S.S.C வகுப்புமட்டும் சகல வகுப்புகளுக்கும் படிப்பித்துப் பயிற்சி பெறவேண்டும் என்பதால், சகல பயிலுனர்களும் சகல வகுப்புகளுக்கும் போய்ப் படிப்பித்துப் பயிற்சி பெற்றுவந்தனர். அவ்வாறு படிப்பித்துப் பயிற்சி பெறும் போது எமது விரிவுரையாளர்கள் மேற்பார்வை செய்து எமது படிப்பிக்கும் தகைமையை அவதானிப்பார்கள்.

அவ்வாறு நானும் பாலர் வகுப்பிற்குப் படிப்பித்துப் பயிற்சிபெற வேண்டும் என வற்புறுத்தப்பட்டேன். அதனை ஏற்று பாலர் வகுப்பிற்கு ஒரு முறை சென்றேன். எக்காரணத்தினாலோ வகுப்புச்சிறு பிள்ளைகள் என்னைக்கண்டவுடன் அழுது ஆர்ப்பாட்டம் செய்யத் தொடங்கினர். என்னுடைய தோற்றமும் பார்வையும் பயபீதியை உண்டாக்கும் தன்மை உடையதாக இருந்தமையே மாணவர்கள் பயபீதி அடைவதற்குக் காரணம் என்று விரிவுரையாளர்கள் கணித்தனர். அதனால் என்னை மேல் வகுப்புகளுக்கே படிப்பித்து பயிற்சி பெற அனுப்புவார்கள்.

இரண்டாம் ஆண்டில் மூன்றாம் தவணையில் கலாசாலை ஓர் நாடகவிழா நடத்தவேண்டும். என தீர்மானித்ததோடு பலநிகழ்ச்சிகளோடு **உடையார்மிடுக்கு** என்ற ஓர் நாடகம் அரங்கேற்றப்பட்டது. அந்நாடகத்தில் முக்கிய கதாபாத்திரத்தை நானே ஏற்று நடித்தேன். அவ்விழாவிற்கு பல பாடசாலைகளிலும் கலாசாலைகளிலும் இருந்து ஆசிரியர்கள், பேராசிரியர்கள், மாணவர்கள், மதப்பெரியார்கள் என்போர் பார்வையாளராக வந்திருந்தனர். விழாமுடிவில் நான் மிகத்திறமையாக நடித்தேன் என்று பாராட்டிபரிசளித்தார்கள். தொடர்ந்தும் ஆசிரியப்பயிற்சி பெற்று இறுதிப்பரீட்சைக்கு தோற்றினேன். இறுதியாண்டுப் பரீட்சையையும் திறமையாக எழுதி இருக்கிறேன். என்ற மனத்திருப்தியோடு விடுமுறையில் வீடுசென்றேன்.

*********



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6. ஆங்கிலம் படிப்பதா? ஆசிரியர்பதவி பெறுவதா?

விடுமுறையில் வீடுசென்று தங்கிஇருந்த பொழுது அப்பாவுடன் கமத்துக்குச் சென்று கமவேலைகளில் பங்குபற்றினேன். அக்காலத்தில் உழவு இயந்திரங்கள் எதுவும் கிடையாது. கலப்பையில் கிடாமாடுகளைப் பூட்டித்தான் வயல்களை உழுவார்கள். நானும் தகப்பனாரோடு உழவுவேலையிலும் வரம்பு வெட்டுவதிலும் ஈடுபட்டேன். உழுதவயல்களை சேறடித்து மட்டமாக்கி நெல் விதைப்பர். அவ்வாறு மட்டமாக்கிய பின் வயலில் தேங்கிநிற்கும் நீர் முற்றாக வடிந்து ஓடக்கூடிய வகையில் அழைவைப்பார்கள். அவ் வேலைகளில் எல்லாம் நானும் பங்கெடுப்பேன். அருவி வெட்டும் காலத்தில் நானும் அருவி வெட்டிப்பழகுவேன். அருவி வெட்டில் கெட்டிக்காரனென்று பெயர் எடுத்தேன்.

இவ்வாறு கமத்தொழிலில் ஈடுபட்டிருந்த நேரத்தில் ஆசிரிய பயிற்சியில் பூரணசித்தியடைந்ததாக பரீட்சை முடிவு வெளிவந்தது. அந் நிலையில் ஆங்கிலம் தொடர்ந்து படிக்கவேண்டும் என்ற விருப்பம் இருந்தது. ஆனால் ஆங்கிலம் படிப்பதா ஆசிரிய உத்தியோகம் பெறுவதா? என்ற மனப்போராட்டத்தில் சில காலங்கள் கழிந்தன. பெற்றோர்களின் பொருளாதார நிலை சாதகமாக இல்லாத காரணத்தால் ஆசிரியர் பதவி பெறுவதே நல்லதென முடிவுசெய்தேன். அக்காலத்தில் அரசாங்கப்பாடசாலைகளில் உடனடியாக உத்தியோகம் பெறுவது முடியாதகாரியமாகவே இருந்தது. ஆசிரியப் பயிற்சி பெற்றசிலர் அரசபாடசாலையில் உத்தியோகம் கிடைக்கும் வரை தோட்டப் பாடசாலைகளில் படிப்பித்தனர்.

எனது நண்பர் ஒருவர் அப்புத்தளையில் பிளாக்பூட் எனும் தோட்டப் பாடசாலையில் படிப்பித்துக் கொண்டிருந்தார். அவருடன் தொடர்பு கொண்டபோது அங்கு வருமாறு அழைத்தார். அங்கே தங்கியிருந்து ஏதாவதொரு தோட்டப்பாடசாலையில் ஆசிரிய பதவி பெறுவதற்கு முயற்சிக்கலாம் என்று தெரிவித்திருந்தார். அவருடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைப்பை ஏற்று அங்கே சென்று இருந்தேன். ஆனால் உடனடியாக வேலை கிடைப்பதாக இருக்கவில்லை. அந்நிலையில் இந்து சமயநூல்களைப் படிக்கவேண்டும் என்ற விருப்பம் ஏற்பட்டது. அதனால் ஓர் ஆறுமாத காலம் மௌனவிரதம் இருந்து பகவத்கீதை, பக்தியோகம், கர்மயோகம், ஞானயோகம் போன்ற சமய நூல்களை படித்துக்கொண்டிருந்தேன். ஆறுமாத முடிவில் அவ்விடம் என்னை அழைத்த நண்பருக்கு ஆசிரிய உத்தியோகத்தை விட்டு வீடுசெல்ல வேண்டிய நிலமை ஏற்பட்டது. அதனால் அப்பாடசாலையில் எனக்கு ஆசிரிய நியமனம் கிடைத்தது. அக்காலத்தில் தோட்டப் பாடசாலைகளின் வளர்ச்சிநிலை மிகத்தாழ்ந்த நிலையிலேயே இருந்தது. தோட்டத் தொழிலாளருக்கும் தமது பிள்ளைகளைப் படிப்பித்து உயர்ந்த நிலைக்கு இட்டுச் செல்ல வேண்டும் என்ற அக்கறை குறைவாகவே இருந்தது. தோட்ட நிர்வாகத்தினரும் தோட்டப்பிள்ளைகள் படிப்பில முன்னேறினால் தோட்ட நிர்வாகத்துக் கெதிராகக் கிளர்ச்சி பண்ணுவார்கள். என்ற மாதிரியான மனநிலை உடையவர்களாகவே இருந்தனர். அத்துடன் தோட்டத் தொழிலாளர் தேயிலைத் தோட்டங்களில் வேலைசெய்து மிகக்குறைந்த ஊதியத்தையே பெற்று துன்பச் சூழ்நிலையிலேயே வாழ்ந்தனர். உண்மையாகவே அவர்கள் படும் துன்ப துயரங்களைக் கண்டு மனவேதனைப்பட்டேன். என்னுடைய மனச்சாட்சிக்கு ஏற்ப அங்குபடிப்பித்த நாட்களில் பிள்ளைகளின் முன்னேற்றத்துக்காக அக்கறையோடு செயற்பட்டேன். அவ்வாறு ஏறக்குறைய ஆறுமாதங்கள் அப் பாடசாலையில் படிப்பித்தேன்.

விடுமுறையில் வீட்டுக்குச் சென்று இருந்தேன். அப்பொழுது பசறை அரசினர் தமிழ்பாடசாலையில் தற்காலிகமாக படிப்பிப்பதற்கு கல்விக்கந்தோரில் இருந்து நியமனக்கடிதம் கிடைத்தது. அதனால் தோட்டப்பாடசாலையில் படிப்பித்ததில் இருந்துவிலகி 1948ஆம் ஆண்டு தை மாதம் பசறை பாடசாலையில் தற்காலிக ஆசிரியராக பதவி பெற்று அங்கு படிப்பித்தேன். பசறையில் உள்ள சிங்களப் பாடசாலையும் தமிழ்ப்பாடசாலையும் ஒரே கட்டிடத்தில் நடைபெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனால் சிங்கள தமிழ்ப்பிள்ளைகளும் ஆசிரியர்களும் எவ்வித பாகுபாடும் காட்டாது ஒற்றுமையாக செயற்பட்டனர். பசறைப்பாடசாலையில் தோட்டப் பிள்ளைகளோடு முஸ்லீம் பிள்ளைகளும் கலந்து படித்தார்கள். தமிழ்ப் பாடசாலையில் நான்கு ஆசிரியர்கள் படிப்பித்தோம். தலைமை ஆசிரியரின் வழிநடத்தலோடு அக்கறை எடுத்து எமது கடமையை திருப்திகரமாக செய்தோம். எமது சேவையால் மாணவரும் கல்வி நிலையில் ஓரளவு வளர்ச்சி ஏற்பட்டதை அவதானிக்க முடிந்தது.

அவ்வாறு தற்காலிக ஆசிரியராகப் படிப்பித்துக் கொண்டிருந்த போது நிரந்தர ஆசிரிய நியமனம் பெறுவதற்கு உரிய முயற்சியையும் மேற்கொண்டிருந்தேன். கல்விக் கந்தோரில் ஆசிரிய நியமனம் பெறவதற்கான பதிவுகளை செய்து கொண்டிருந்தேன். பசறையில் படிப்பித்துக்கொண்டிருந்த போது இரண்டாம் தவணை விடுமுறையில் எனது வீட்டிற்கு சென்று தங்கியிருந்தேன். அவ்வாறுதங்கியிருந்த போது கல்விக் கந்தோரில் இருந்து கண்டி மடவள அரசினர் தமிழ் பாடசாலையில் படிப்பிப்பதற்கான நிரந்தர நியமனக் கடிதம் கிடைத்தது. அதனையடுத்து ஒரு சில நாட்களில் யாழ்ப்பாணம் மிருசுவில் தமிழ்ப் பாடசாலையில் படிப்பிப்பதற்குரிய மேலும் ஒரு நியமனக் கடிதம் கிடைத்தது. அவ்வாறு இரண்டு நியமனக் கடிதங்கள் கிடைத்ததால் எந்தப் பாடசாலையை தெரிவு செய்வதென்ற மனப் போராட்டம் ஏற்பட்டது. இறுதியில் கண்டி மடவள பாடசாலைக்குப் போவதே நல்லதென முடிவு செய்தேன். கண்டி நியமனக் கடிதத்தில் குறிப்பிட்டவாறு 04.08.1949 திகதியில் மடவளப் பாடசாலையில் நிரந்தர நியமனத்தை பெற்றுக் கொண்டேன்.

முதல்நாள் பாடசாலைக்குப் போனபொழுது வேறுசில ஆசிரியர்களும் நிரந்தர நியமனம் பெற்று அப் பாடசாலைக்கு படிப்பிப்பதற்கு வந்திருந்தனர். அப்பாடசாலையின் தலைமை ஆசிரியராக திரு ராஜப்பு என்பவர் அப் பாடசாலையில் கடமையாற்றினார். அவரின் கீழ் எட்டுத்தமிழ் ஆண் ஆசிரியர்களும் ஒன்பது ஆண் முஸ்லீம் ஆசிரியர்களும் மூன்று தமிழ் பெண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்களும் சேவையாற்றினோம். ஆரம்பத்தில் ஆசிரியர்கள் அனைவரும் மிக ஒற்றுமையாக பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் அக்கறை எடுத்து செயற்பட்டோம். அவ்வாறு கடமை புரிந்து கொண்டிருந்த காலகட்டத்தில் முஸ்லீம் தமிழ் பாடசாலைகளில் முஸ்லீம் ஆசிரியர்களையே தலைமை ஆசிரியராக நியமனம் செய்யவேண்டும் என முஸ்லீம் அரசியல் வாதிகளால் அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டது. மடவள தமிழ் முஸ்லீம் பாடசாலையில் நூறு வீதமும் முஸ்லீம் பிள்ளைகளே படித்தனர். அதனால் அப்பாடசாலையில் படிப்பித்த முஸ்லீம் ஆசிரியர்களும் முஸ்லீம் பாடசாலைகளுக்கு முஸ்லீம் ஆசிரியர்களையே நியமிக்கவேண்டும் என்ற கொள்கையை ஆதரித்தனர். அதனால் தமிழ் முஸ்லீம் ஆசிரியர் இடையே கருத்து வேறு பாடுகள் ஏற்பட்டன. முஸ்லீம் தமிழ்ப்பாடசாலைகளுக்கு முஸ்லீம்களையே தலைமை ஆசிரியராக நியமிக்க வேண்டும். என்ற முஸ்லீம் அரசியல் வாதிகளின் வேண்டுகோளை அரசு தரப்பு ஏற்று செயற்படுத்துவதாக தெரிவிக்கப்பட்டது.

அக்காலகட்டத்தில் சேவை மூப்புக் கூடியவர்களாக முஸ்லீம் பாடசாலைகளில் தமிழ் ஆசிரியர்களே கடமை புரிந்தனர். அத்துடன் அக்காலகட்டத்தில் முஸ்லீம் ஆசிரியர்கள் மத்தியில் அனேகமானவர்கள் சேவை மூப்பில் குறைந்தவர்களாகவே இருந்தனர். அவ்வாறு முஸ்லீம் பாடசாலைகளுக்கு முஸ்லீம்களையே தலைமை ஆசிரியராக நியமனம் செய்தால் சேவை மூப்பில் கூடிய தமிழ் ஆசிரியர்கள் சேவை மூப்பில் குறைந்த முஸ்லீம் தலைமை ஆசிரியரின் கீழ் உதவி ஆசிரியர்களாக சேவை புரியவேண்டிய சூழ்நிலை உருவாகும். அவ்வாறு நிகழுமானால் அது கல்வி நிர்வாக சட்டதிட்டங்களுக்கு முரண்பாடாக அமையும்.

*********



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7. அகில இலங்கை அரசினர் பாடசாலை தமிழர் ஆசிரியர் சங்கம்

இந்நிலையில் கண்டிப்பகுதியில் படிப்பித்துக்கொண்டிருந்த தமிழ் ஆசிரியர்கள் கண்டி கட்டுக்கலை அரசினர் தமிழ்ப் பாடசாலையில் ஒன்று கூடி மேற்குறிப்பிட்ட தலைமை ஆசிரியர் நியமனம் பற்றிய விடயத்தை ஆய்வு செய்தனர். அக் கூட்டத்தில் அகில இலங்கையிலும் கடமையாற்றும் அரசினர் பாடசாலை தமிழர் ஆசிரியர்கள் அங்கத்துவம். பெறும் வகையில் அகில இலங்கை அரசினர் பாடசாலை தமிழர் ஆசிரியர் சங்கம் என்ற பெயரில் ஓர் சங்கத்தை உருவாக்கி தமிழர் ஆசிரியர்களின் நல உரிமைகளை வென்றெடுக்க முயற்சிக்க வேண்டும் என ஓர் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. அதனை செயற்படுத்துவதற்கு ஓர் செயற் குழு தெரிவு செய்யப்பட்டது. செயற் குழுவிற்கு திரு.முத்துலிங்கம் என்பவர் தலைவராகவும் பொ. சந்திரசேகரி ஆகிய நான் செயலாளர் ஆகவும் மற்றும் சிலர் உறுப்பினர்களாகவும் தெரிவுசெய்யப்பட்டோம்.

மேற்குறிப்பிட்ட செயற்குழு கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, யாழ்ப்பாணம் ஆகிய முக்கிய இடங்களில் தமிழர் ஆசிரியர்களை ஒன்று கூட்டி தமிழர் ஆசிரியர்களின் நல உரிமைகளை வென்றெடுக்க மேற்கூறியவாறு ஓர் சங்கம் அமைக்கவேண்டும். என்ற நிலைமைகள் பற்றி கலந்துரையாடப்பட்டது. சகல கூட்டங்களிலும் அகில இலங்கை அரசினர் பாடசாலை தமிழர் ஆசிரியர் சங்கம் அமைக்கவேண்டும். என்ற முடிவு ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டது. இந்நிலையில் அகில இலங்கை அரசினர்பாடசாலை தமிழர் ஆசிரியர் சங்கத்தை நிறுவுவதற்கான ஆரம்ப பொதுச்சபைக்கூட்டம் 04.04.1950ஆம் திகதியில் யாழ் மத்திய கல்லூரி மண்டபத்தில் கூட்டப்பட்டது. அகில இலங்கையிலும் இருந்து மிக கூடுதலான ஆசிரியர்கள் சமுகம் அளித்தனர். அப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுச்சபைக்கூட்டத்துக்கு பண்டிதர் S.P சாமிநாதன் தலைமை வகித்தார் சந்திரசேகரியாகிய நான் செயலாளராக செயற்பட்டேன். பல ஆசிரியர்கள் சங்கம் அமைக்கவேண்டிய தேவை பற்றி எடுத்துரைத்தார்கள். அந் நிலையில் சங்கத்துக்குரிய யாப்பு விதிகள் சபையின் பரிசீலணைக்குச் சமர்ப்பிக்கப்பட்டது. யாப்பில் செய்யப்படவேண்டிய திருத்தங்கள் பற்றி ஆசிரியர்கள் கருத்துரை வழங்கினர். ஈற்றில் யாப்பு விதிகள் அங்கீகரிக்கப்பட்டு சங்கம் நிறுவுவதற்கான தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

அதனை அடுத்து ஆரம்பநிர்வாக சபை தெரிவுசெய்யப்பட்டது. திரு S.P சாமிநாதன் அவர்கள் தலைவராகவும் சந்திரசேகரி ஆகிய நான் பொதுச்செயலாளராகவும் K.கந்தப்பு என்பவர் பொருளாளராகவும் தெரிவுசெய்யப்பட்டோம். அன்றைய கூட்டத்தில் முஸ்லீம் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்ட விசேட சலுகைகள் ரத்துச்செய்யப்பட்டு சகல தமிழ் முஸ்லீம் ஆசிரியர்களின் சேவை மூப்பு அட்டவணை தயாரிக்கப்பட்டு அதன் அடிப்படையில் தலைமை ஆசிரியர் நியமனங்கள் செய்யப்பட வேண்டும் என்ற தீர்மானம் நிறை வேற்றப்பட்டது. ஆசிரியர் சேவை சார்பான வேறுபல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டு அவை சார்பில் மேற்கொள்ளவேண்டிய முயற்சிகள் செயற்படுத்த வேண்டும். என்ற தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. சங்கம் நிறுவிய பின்னர் மாகாணமட்டத்திலும் மாவட்டமட்டங்களிலும் சங்கத்தின் கிளைகள் அமைக்கப்பட்டு அக்கிளைகள் மூலம் ஆசிரியர்களை அங்கத்தவர்களாக சேர்த்து சங்கச்செயற்பாடுகளை விஸ்தரித்தோம்.

ஆரம்பத்தில் இருந்தே ஆசிரியர்களின் பிரச்சிணையை தீர்ப்பதற்காக தீவிர முயற்சி மேற்கொள்ளப்பட்டது. பல பிரச்சினைகளில் ஆசிரியர்களுக்கு பலன் அளிக்கக்கூடிய முடிவுகளை கல்விப்பகுதி நிறைவேற்றியது. அதனால் சங்கத்தின் செயற்பாடுகளில் திருப்தி அடைந்த ஆசிரிய சமூகம் சங்க வளர்ச்சிக்கு பேராதரவு அளித்தனர். ஆசிரியர்களின் சேவை மூப்பு அட்டவணையொன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயாரிக்கப்பட்டு ஆசிரியர்களின் பதவி உயர்வுகள் செய்யப்பட வேண்டும். என்ற முக்கிய வேண்டுகோளை கல்விப்பகுதி ஏற்று செயற்படுத்துவதாக உறுதி அளித்தது. அதேபோன்று வருடாவருடம் ஆசிரிய சங்கத்தின் வருடாந்த மகாநாடுகளில் தீர்மானிக்கப்படும் தீர்மானங்களை அநேகமாக கல்விப்பகுதி அங்கீகரித்து செயற்படுத்தியது. ஆசிரியர்களின் பிரச்சினைகளுள் முக்கியமான சம்பளப்பிரச்சினை. இடம் மாற்றப் பிரச்சினைகள் போன்ற பிரச்சினைகளில் முக்கிய தீர்மானங்கள் நிறை வேற்றப் பெற்று கல்விப்பகுதிக்கு சமர்ப்பிக்கப்பட்டது. சம்பள உயர்வுப் பிரச்சினையில் அரசாங்கம் தயக்கம் காட்டியேவந்தது. இடம்மாற்றப் பிரச்சினையில் முடிந்தவரையில் ஆசிரியர்களை அவர்களின் சொந்த இடங்களிலேயே உள்ள பாடசாலைகளில் கற்பிப்பதற்கு ஆவன செய்ய வேண்டும் என கல்விப் பகுதியிடம் கோரப்பட்டது.

அதனை முற்றாக செய்யமுடியாத சூழ்நிலையால் சிலருக்கே அந்த வாய்ப்பு அளிக்கப்பட்டது. ஆசிரியர்களுடைய பிரச்சினைபற்றி தமிழ்ப்பாராளு மன்ற உறுப்பினர்களிடம் தெரிவித்தபோதிலும் அவர்கள் அக்கறை காட்டாமலேயே இருந்தனர். காலத்துக்காலம் பல பாகங்களிலும் கிளைச்சங்க கூட்டங்களிற்கு சமூகமளித்து ஆசிரியர்களின் குறைநிறைகளை தெளிவாக அறிந்து அவற்றை நிவர்த்திசெய்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டேன். ஆசிரியர்களுக்கு எதிரான ஒழுங்காற்று விசாரணைகளில் அவர்களுக்கு சார்பாக உதவி புரிந்து அவர்கள் குற்றம் அற்றவர்கள் என்பதை உறுதிப்படுத்தினேன்.

*********



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8. இல்வாழ்வு

1950ம் ஆண்டு என்னை இல்வாழ்வில் இணையவேண்டுமென பெற்றோர் வற்புறுத்தினர். மடவளப்பாடசாலையில் எம்மோடு சேர்ந்து படிப்பித்த யாழ்ப்பாணம் அல்வாய் என்னும் இடத்தைச் சேர்ந்த கார்த்திகேசு செல்லாச்சி என்பவரின் உறவினரான செல்லையா ஆசிரியர் என்று அழைக்கப்படுபவர் என்னோடு தொடர்பு கொண்டு செல்லாச்சியின் தந்தை தாயார் செல்லாச்சியை எனக்கு மணம் முடித்து வைக்கவிரும்புகிறார்கள் என்று கூறினார்.

செல்லாச்சி என்பவர் என்னோடு படிப்பித்த காலத்தில் அவருடைய செயற்பாடுகளையும் குணநலன்களையும் அவதானித்த நான் "அவரை மணம் புரிவதற்கு எதிர்ப்பேதும் இல்லை. ஆனால் பெற்றோருடன் தொடர்பு கொண்டு அவர்கள் அங்கீகரித்தால் அதனை நானும் ஏற்று விவாகம் செய்யலாம்." என்று கூறினேன். அவர்கள் பெற்றோரோடு தொடர்பு கொண்ட போது "மணம் முடித்து வாழவேண்டியவர் எங்கள் மகன் ஆவார். அவரின் பூரண விருப்பப்படி இணக்கம் தெரிவித்தால் திருமணத்தை நடத்தி வைக்கலாம்." என்று ஒப்புக்கொண்டனர். அச் செய்தியை எனக்கும் தெரிவித்தனர். அந்நிலையில் **01.11.1950** ஆம் ஆண்டில் கண்டிக்கச்சேரியில் எனது சக ஆசிரியர்களின் சமுகத்தில் எங்கள் திருமணப் பதிவு நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து **24-11-1950** ஆம் ஆண்டு மணமகள் இல்லத்தில் விவாகம் நடை பெற்றது.

சில நாட்கள் அங்கே தங்கியிருந்து இருவரும் மடவளவிற்குச் சென்று ஓர் வாடகை வீட்டில் குடியிருந்து பாடசாலையில் படிப்பித்தோம். பொதுச்சேவை புரிவதில் எனக்கு இருந்த ஆர்வத்தை எனது மனைவி பூரணமாக அங்கீகரித்து வாழ்நாள் முழுவதும் ஒத்துழைத்தார். இந் நிலையில் 1951ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் எனக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. அக் குழந்தைக்கு **தமிழரசி** என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாமம் சூட்டினோம். அவர் வடமராட்சி இந்துமகளிர் கல்லூரியில் படித்து அவருடைய பெயரிற்கு ஏற்றால் போல் இந்து நாகரிக துறையில் பல்கலைக்கழக படிப்பிற்கு தெரிவாகினார். அக்கால கட்டத்தில் களனி பல்கலைக்கழகத்தில் தான் இந்துநாகரிக துறை இடம் பெற்று இருந்தது. அதனால் களனி பல்கலைக்கழகத்திலேயே அவருடைய படிப்பை ஆரம்பித்தார். யாழ்பாணத்திலே ஒரு தமிழ் பல்கலைக்கழகம் அமைந்திருக்கும் நிலையில் இந்துநாகரிகத் துறையை களனி பல்கலைக்கழகத்தில் நிறுவி இருப்பது ஒரு பொருத்தமான செயல் அல்ல என்பதை பல்கலைக்கழக ஆணைக்குழுவுக்கும் அக் கால கட்டத்தில் யாழ் பல்கலைக்கழகத்தின் தலைவராக இருந்த ஸ்ரீமான் கைலாசபதி அவர்களுக்கும் சுட்டிக் காட்டினேன்.

அவ் விடயம் ஆராயப்பட்டு களனி பல்கலைக்கழகத்தில் நிறுவப்பட்ட இந்துநாகரிகத் துறை யாழ்ப்பாண பல்கலைக்கழகத்துக்கு மாற்றப்பட்டதோடு எனது மகள் தமிழரசியும் யாழ்ப்பாண வளாகத்திற்கு மாற்றப்பட்டார். அங்கு கல்வி கற்ற தமிழரசி இந்துநாகரிகத் துறையில் சிறப்புச் சித்தி பெற்று அவ் வளாகத்திலேயே விரிவுரையாளராகக் கடமை புரிந்தார். அக்கால கட்டத்தில் கொக்குவிலைச் சேர்ந்த பேரம்பலம் ஆசிரியரின் மகனான பட்டதாரியான **அன்பழகன்** என்பவரை மணம்முடித்து வைத்தோம். நாட்டில் ஏற்பட்ட வன்செயல் காரணமாக லண்டன் சென்று அங்கு வாழ்கிறார்கள்.

தமிழரசியோடு எமக்குப் பிறந்த பிள்ளைகள் ஒன்பது பேர். இரண்டாவது பிள்ளையாக ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அவருக்குத் **தமிழ்வாசன்** என்று நாமம் சூட்டினோம். அவர் உயர் தரம் வரை படித்து ஓர் கிராம சேவகராக முல்லைத்தீவு மாவட்டத்தில் பல இடங்களில் கடமையாற்றி ஈற்றில் வவுனியா மாவட்ட செட்டிகுளத்தில் கடமை ஆற்றினார். அவருக்கு மட்டுவில் வாசியான செல்லத்துரை என்பவரின் மகள் **சாந்தநாயகி**யைத் திருமணம் செய்து வைத்தோம். அக் கால கட்டத்தில் அவருக்கு ஏற்பட்ட நீரிழிவு நோய் காரணமாக இயற்கை எய்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரை அடுத்துப் பிறந்ததும் ஓர் ஆண்குழந்தையே. அவருக்குத் **தமிழ்அழகன்** என்ற பெயரிட்டோம். அவர் படிப்பில் ஆர்வமற்றவராக இருந்தமையால் விவசாயத்திலேயே ஈடுபட்டார். ஒரு நாள் உழவு இயந்திரத்தைச் செலுத்திச் செல்லும் போது ஏற்பட்ட விபத்து காரணமாக இயற்கை எய்தினார்.

அடுத்துப் பிறந்த குழந்தையும் ஓர் ஆண்குழந்தையே. அவருக்குத் **தமிழ்ச்செல்வன்** என்று நாமம் இட்டோம். அவர் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் க.பொ.த.சாதாரண தரம் வரை படித்தவர். விடுமுறையில் வீட்டில் தங்கியிருந்த பொழுது அவரும் ஓர் விபத்தில் சிக்கி மரணமடைந்தார்.

அடுத்து ஒரு பெண்குழந்தை பிறந்தது. அதற்குத் **தமிழ்ச்செல்வி** என்று பெயர் சூட்டினோம். அவர் மருதனார் மடம் நுண்கலைக்கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த காலகட்டத்தில் நாவற்குழியைச் சேர்ந்த **நாகராசா தில்லைநாதன்** என்பவரை அவருக்குத் திருமணம் செய்து வைத்தோம்.

அடுத்ததாக ஓர் ஆண்குழந்தை பிறந்தது. அவருக்குத் **தமிழ்வாணன்** எனப் பெயரிட்டோம். அவருக்கு முல்லைமணி வே.சுப்பிரமணியம் அவர்களின் மகள் **சுகந்தி** என்பவரை மணம் முடித்துவைத்தோம்.

அடுத்து ஓர் பெண்குழந்தை பிறந்தது. அவருக்குத் **தமிழ்வாணி** எனப்பெயரிட்டோம். அவர் பயிற்றப்பட்ட ஓர் ஆசிரியர் ஆவார். கொடிகாமத்தை அடுத்துள்ள விடத்தல் பளை என்னும் இடத்திலுள்ள பாலசிங்கம் என்பவரின் மகனான **பாலச்சந்திரன்** என்பவரை திருமணம் செய்துவைத்தோம். அவரும் ஒரு புவியியல் பட்டதாரியாவார்.

வாணியை அடுத்து ஒரு ஆண்குழந்தை பிறந்தது. அவருக்குத் **தமிழ்ஞானன்** என்று நாமம்இட்டோம். அவர் ஒரு பொருளியல் பட்டதாரியாவார். அவருக்கு நெல்லியடியைச்சேர்ந்த திரு.கந்தப்பு என்பவரின் மகள் **வாணி** என்பவரை திருமணம் செய்துவைத்தோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதியாக ஓர் பெண்குழந்தை பிறந்தது. அவருக்குத் **தமிழ்மலர்** என்று பெயரிட்டோம். அவர் கொழும்பு சட்டக்கல்லூரியில் இரண்டாம் ஆண்டு படித்துக் கொண்டிருந்த காலத்தில் குடும்பச்சூழ்நிலை காரணமாகத் தொடர்ந்து படிப்பதை நிறுத்திவிட்டு அவருக்கு நெடுங்கேணி வெடிவைத்தகல்லு எனும் இடத்தைச்சேர்ந்த திரு.செல்லத்துரை என்பவரின் மகனான **கருணாகரன்** என்பவரை மணம்முடித்து வைத்தோம். கருணாகரன் அவர்களும் B.A பட்டதாரியாவார்.

**தமிழரசி, தமிழ்ச்செல்வி, தமிழ்வாணன், தழிழ்ஞானன், தமிழ்மலர்** ஆகியவர்கள் லண்டன் மாநகரிலே வாழ்ந்து கெண்டிருக்கிறார்கள். **தமிழ்வாணி** என்பவர் கனடாவில் வசிக்கிறார். பிள்ளைகளைப்பெற்று வளர்த்து எமது இறுதிக்காலகட்டத்தில் அவர்களின் அரவணைப்பில் மகிழ்வாக வாழலாம் என்று கனவுகண்ட எமது எண்ணங்கள் நாட்டில்நிலவும் வன்முறைகளால் அக் கனவுகள் பகற் கனவாகிவிட்டன.

நான் ஆசிரியர் சங்கத்தில் பொதுச்செயலாளராக இருந்து தமிழ் ஆசிரியர்களின் உரிமைக்காகத் தீவிர முயற்சியினை மேற்கொண்டதனால மடவளப்பாடசாலையில் உள்ள முஸ்லீம் ஆசிரியர்கள் அங்குள்ள தமிழ் ஆசிரியர்களுடன் முரண்பட்டார்கள் அதனால் அங்கு கடமையாற்றிய தமிழ் ஆசிரியர்கள் ஆகிய நாம் கொழும்பு மாவட்டத்துக்கு மாற்றப்பட்டோம்.

**********



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


மகள் தமிழ்மலருடன் கணவர் பிள்ளைகள்



மகள் தமிழ்வாணி குடும்பத்துடன் பிறந்தநாள் விழாவில்


மகள் தமிழ்ச் செல்வி, மருமகன் தில்லைநாதன் பிள்ளைகள்



அன்பழகன், கருணாகரன், தமிழ்வாணன், தமிழ்ஞானன், மலர் பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மகன் வாணனுடன் மருமகள் சுகந்தி பிள்ளைகள்



பிறந்த நாள் விழாவில் மகன் தமிழ்ஞானன் பிள்ளைகள்



அன்பழகன் தமிழரசி குடும்பம்



மருமகள் சாந்தி, பேரன் நாவேந்தன், பூட்டப்பிள்ளைகளுடன் பேரன் சதீஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பேரப்பிள்ளை வவாவுடன் பூட்டப்பிள்ளைகள்



கனடா, நைகரா நீர்வீழ்ச்சி மைதானத்தில்



லண்டன் ராணி மாளிகை காவலாளியுடன்



மகன் தமிழ்ஞனமும் மருமகள் வாணி மற்றும் பேரப்பிள்ளைகளுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9 கொழும்பில் ஆசிரியர் சேவை

கொழும்பில் வெல்லம்பிட்டி என்ற இடத்தில் ஓர் வீட்டை வாடகைக்கு அமர்த்தி அங்கு தங்கியிருந்தோம். நான் மாளிகாகந்த பாடசாலையிலும் மனைவி தெமட்டகொட பாடசாலையிலும் படிப்பித்தோம். அவ்வாறு கொழும்பில் தங்கி இருந்தமையால் சங்கம் சார்பான முயற்சிகளில் தீவிரமாகச் செயற்பட முடிந்தது. நான் படிப்பித்த பாடசாலை மாலைவேளைப் பாடசாலையாக இருந்தமையால் அதிகாரிகளுடன் கலந்துரையாட வாய்ப்பாக இருந்தது. இலங்கையில் பல பாகங்களில் இருந்தும் நாளாந்தம் ஆசிரியர்கள் தங்கள் சொந்தப்பிரச்சனைகள் சார்பாக கல்விக்கந்தோர் அதிகாரிகளைக்காண வருவார்கள். அவர்களைக் கல்விக்கந்தோர் அதிகாரிகளிடம் அழைத்துச் சென்று அவர்களுடைய பிரச்சனைகள் பற்றி அதிகாரிகளுடன் கலந்துரையாடி தீர்வுகாண்பதற்கு உதவி புரிவேன். கொழும்பில் படிப்பித்த காலகட்டத்தில் இலங்கையின் பல பாகங்களிலும் நடைபெறும் கிளைச்சங்கக் கூட்டங்களுக்குச் சமுகமளித்து ஆசிரியர் பிரச்சனைகளை ஆராய்வதற்கு வாய்ப்பாக இருந்தது. தமிழ்ப்பாராளுமன்ற உறுப்பினர்களையும் அடிக்கடி சந்தித்து ஆசிரியர் பிரச்சனையை முறையிடக்கூடியதாக இருந்தது.

இலங்கையின் பல பாகங்களிலும் உள்ள பாடசாலைகளில் கடமை புரியும் ஆசிரியர்களிடையே ஏற்படும் முரண்பாடுகளைத் தீர்த்து வைப்பதற்காகவும் நான் சமூகமளிக்க வேண்டியிருந்தது. அதனால் நான் பாடசாலையில் இருந்த நாட்களைவிட பொதுவேலைகளில் ஈடுபட்ட நாட்களே அதிகமாகும். அவ்வாறு நான் சென்று வருவதற்குச் செயலாளர் என்ற ரீதியில் சலுகையளிக்கப்பட்டது.

கல்வி மந்திரி அவர்களையும் கல்வி இலாகா உயர் அதிகாரிகளையும். கௌரவிக்கும் முகமாக அவர்களுக்கு ஓர் விருந்து உபசாரம் அளிக்கவேண்டும். என சங்கத்தின் சார்பில் தீர்மானிக்கப்பட்டது. அவ் விருந்து உபசாரத்தை கொழும்பு காலிமுகத்திடல் கொட்டேலில் நடத்தவேண்டும் எனவும் ஆலோசனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிவிக்கப்பட்டது. அதற்காக கொட்டேல் முகாமையாளரைக் கண்டு கதைப்பதற்கு நானும் தலைவரும் சென்றோம்.

நூறு ஆசிரியர்களும் கல்வி மந்திரியோடு கல்விலாகா உயர் அதிகாரிகளும் கலந்து கொள்ளும் வகையில் ஓர் விருந்து உபசாரம் நடத்துவதற்கு ஆவன செய்யும்படி கொட்டேல் முகாமையாளரிடம் கேட்டோம். அப்போது தமிழ் ஆசிரியர்கள் எவ்வாறான உடையில் கலந்து கொள்வார்கள் என்று கேட்டார். அக்காலத்தில் தமிழ் ஆசிரியர்கள் அனைவரும் வேட்டி உடுத்து நெஷனல் எனப்படும் மேலங்கி அணிந்து எங்கும் போவார்கள். அந்த உடையில் தான் விருந்திலும் கலந்து கொள்வார்கள் என்று தெரிவித்தோம். அக் காலத்தில் ஆங்கிலேய உடை அணிந்து போகிறவர்களுக்கு மாத்திரம் அக் கொட்டேலில் உணவருந்த முடியும். என்று சம்பிரதாயம் கொட்டேல் நிர்வாகத்தால் கையாளப்பட்டது. ஆனால் அச் சம்பிரதாயத்தை தவிர்த்து சுதேசிகளின் உடையில் விருந்தில்கலந்துகொள்ள ஆவன செய்யவேண்டும். என முகாமையாளரோடு நீண்டநேரம் வாதாடி அனுமதி பெற்றோம். அவ்வாறு ஒழுங்கு செய்யப்பட்ட மதியபோசன விருந்து உபசாரத்தில். கல்விமந்திரி அவர்களும், கல்வி உயர் அதிகாரிகளும் ஆசிரியர்களும் மகிழ்ச்சியோடு பங்குபற்றி சிறப்பித்தார்கள்.

ஆண்டு தோறும் நடைபெறும் வருடாந்த பொதுச்சபைக் கூட்டத்தில் சங்கத்தின் நிர்வாக உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவார்கள். அவ்வாறு நடைபெற்ற ஐந்து வருட பொதுச்சபைக் கூட்டங்களிலும் சந்திரசேகரி ஆகிய என்னையே பொதுச்செயலாளராக தெரிவு செய்தனர். அவ்வாறு ஆசிரியர்கள் என்மேல் வைத்திருந்த பெரும் மதிப்புக்கேற்ப நானும் ஐந்து வருடங்களிலும் ஓய்வின்றி சங்க முயற்சிகளிலேயே ஈடுபட்டேன். 1956ஆம் ஆண்டு சிங்களம் மாத்திரம் அரசாங்க மொழி என்ற சட்டம் அரசாங்கத்தால் நிறைவேற்றப்பட்டது. அதற்கு எதிர்ப்புத்தெரிவிக்கும் வகையில் கொழும்பு விவேகானந்தா வித்தியாலயத்தில் ஆசிரியர்களின் எதிர்ப்புக் கூட்டம் ஒன்று கூட்டப்பட்டது. அக்கூட்டத்துக்கு தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் சமூகமளிக்குமாறு கோரிக்கை விடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக் காலத்தில் இரு பெரும் தமிழ்த் தலைவர்களாக விளங்கிய திருவாளர்கள் G.G பொன்னம்பலமும் தந்தை செல்வநாயகம் அவர்களும் ஒரே மேடையில் சமுகமளிக்கமாட்டார்கள் என்ற கருத்து நிலவியது. ஆனால் சங்க நிர்வாக உறுப்பினர்களின் வற்புறுத்தலின் பெயரில் அக் கூட்டத்துக்கு இருவரும் சமுகமளித்து இருந்தார்கள். தனிச் சிங்களச் சட்டத்தை எதிர்த்து பல ஆசிரியர்களும் காரசாரமாக உரையாற்றினார்கள். அக் கூட்டத்தின்செயலாளராகிய நான் நீண்ட சொற்பொழிவு எதனையும் நிகழ்த்தவில்லை. ஆனால் இரு பெரும் தலைவர்களையும் விழித்து தமிழர்களின் தாய் மொழியான தாய் கிணற்றுக்குள் வீழ்ந்து தாண்டு மிதந்து கொண்டு இருக்கிறாள். சில நிமிடங்களில் தாயை மீட்டெடுக்கத் தவறினால், தாய் மரணம் அடைந்து விடுவாள். ஆகவே கிணற்றுக்குள் தத்தளிக்கும் தாயை எட்டி எட்டிப் பார்க்கும் இரு தலைவர்களும் நீ மீட்பதா? நான் மீட்பதா? என்று போட்டி இடுவார்களாயின் ஈற்றில் தமிழ்த் தாயை இருவரும் இழக்கவேண்டி ஏற்படும். எனவே மொழியின் பெயராலும், இனத்தின் பெயராலும் ஒன்று பட்டு தாயை மீட்டெடுங்கள் என்று கூறி மேடையில் அவர்கள் முன் வீழ்ந்து கும்பிட்டு கேட்டுக்கொண்டேன். ஆனால் மக்கள் எதிர்பார்த்த வேகத்தில் தலைவர்கள் ஒன்றுபட்டதாகத் தெரியவில்லை. இந் நிலையில் ஆறாவது வருடாந்த பொதுக்கூட்டத்தில் என்னைத் தலைவராகவும் திரு. தியாகராஜா என்பவரை செயலாளராகவும் தெரிவு செய்தனர். இந்நிலையில் ஆங்காங்கு நடைபெறும் ஆசிரிய சங்கக்கூட்டங்களில் பங்குபற்றி மேற்கொள்ள வேண்டிய முயற்சிகள் பற்றி வற்புறுத்தி கூறியிருந்தேன்.

சிங்களம் மட்டும் அரசமொழி என்ற சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. அதனை எதிர்த்து தமிழ்ப் பிரதேசத்தில் ஆங்காங்கு எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களும் உண்ணாநோன்பும் தமிழ் மக்களால் மேற்கொள்ளப்பட்டன. இறுதியில் பாராளுமன்றத்துக்கு முன்னால் காலிமுகத்திடலில் தந்தை செல்வாவின் தலைமையில் ஓர் சத்தியாக்கிரகம் நடைபெற்றது. சத்தியாக்கிரகத்தில் தமிழரசுக்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களோடு ஆயிரக்கணக்கான தமிழ்ப் பெரியார்களும் கலந்து கொண்டனர். அச்சத்தியாக்கிரகத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்வையாளராக நானும் உப செயலாளரும் பங்குபற்றினோம். அச்சத்தியாக்கிரகம் நடைபெற்ற பொழுது மறைமுகமாக அரசாங்கத்தால் ஏவப்பட்ட சிங்களத்தீவிரவாதிகள் சத்தியாக் கிரகத்தில் பங்குபற்றியவர்களை மோசமாகத்தாக்கி குழப்பம் இழைத்தனர். அந் நேரம் பார்வையாளராக அங்கு நின்ற எம்மையும் தாக்கினார்கள் நாங்கள் ஒருவாறு சமாளித்துக்கொண்டு அவ்விடத்திலிருந்து அகன்று சென்றோம்.

சத்தியாக்கிரகம் நடைபெற்று முடிந்த சில நாட்களின் பின்னர் கொழும்பில் தந்தை செல்வா அவர்களின் வீட்டில் ஒரு கூட்டம் கூட்டப்பட்டது. அக் கூட்டத்தில் தமிழின உரிமைகளைப்பெறுவதற்கு மேலும் எவ்வாறான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என ஆராயப்பட்டது. அக் கூட்டத்தில் பங்குபற்றிய பிரபல அரசியல் வாதிகள். மீண்டும் சத்தியாக்கிரக அடிப்படையிலே எமது எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென ஆலோசனை தெரிவித்தனர். மற்றும் சிலர் பலவிதமான ஆலோசனைகளைக் கூறினார்கள். நானும் எனது கருத்துக்களைத் தெரிவிக்கும்போது சிங்கள இனம் அகிம்சை வழிப் போராட்டங்களுடைய புனிதத் தன்மையைப் புரிந்து கொள்வதாக இல்லை என்றும், அவர்கள் இனவாத ரீதியில் மனிதாபிமான அடிப்படையில் தமிழர்களுக்கு எவ்வாறான சுய நிர்ணய உரிமைகளையும் வழங்கமுன்வர மாட்டார்கள் என்றும் சிங்கள ஆக்கிரமிப்பை பல வடிவங்களில் முன்னெடுப்பார்கள். ஆகவே எமது உரிமைகளை வென்றெடுக்க அகிம்சைரீதியில் தொடர்ந்தும் நாங்கள் மேற்கொள்ளும் முயற்சிகளால் எவ்விதபயனும் கிடைக்காது. ஆகவே உலக நாடுகளில் ஒடுக்கப்பட்ட மக்கள் தங்களுடைய உரிமைகளை வென்றெடுக்க மேற்கொள்ளும் போராட்ட வடிவங்களை நாங்களும் சிந்தித்து மேற்கொள்வது சிறப்பான வழிமுறையாக அமையும் என எனது கருத்தினைக் கூறினேன்.

************



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10. வன்னியில் சேவை

1957ஆம் ஆண்டு நெடுங்கேணி அரசினர் தமிழ் பாடசாலைக்கு உதவி ஆசிரியராக மாற்றப்பட்டேன். எனது மனைவி 1953ம் ஆண்டிலேயே நெடுங்கேணிக்கு மாற்றப்பட்டிருந்தார். பாடசாலை விடுதியிலேயே தங்கியிருந்து படிப்பித்தோம். எனது சொந்தக்கிராமம் நெடுங்கேணியில் இருந்து மூன்று மைல்களுக்கு அப்பால் உள்ள பெரியகுளம் எனும் கிராமமாகும். சொந்த ஊர் வாசியாகிய நான் நெடுங்கேணிக்கு மாற்றம் பெற்று வந்ததை நெடுங்கேணி பிரதேசவாசிகள் வரவேற்று மகிழ்ந்தனர். எனது இளமை தொடக்கம் எவ்வாறான வளர்ச்சியும் ஏற்படாதநிலையில் இருந்த வன்னிப்பிரதேசத்தைப் பற்றிய எனது உணர்ச்சிபூர்வமான சிந்தனைகள் என் மனதை உறுத்திக் கொண்டே இருந்தன. அதனால் வன்னிப்பிரதேசவளர்ச்சிக்கான முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும் என்ற ஆர்வம் அதிகரித்தது. பாடசாலையில் படிப்பிக்கும் முயற்சியோடு வன்னி வளர்ச்சிக்கான பொதுமுயற்சிகளிலும் அக்கறை செலுத்தினேன். இந்நிலையில் நெடுங்கேணியில் அமைந்திருந்த கூட்டுறவுச்சங்கத்தின் செயலாளராக தெரிவுசெய்யப்பட்டேன். அங்குள்ள கூட்டுறவுச்சங்கம் ஓர் வசதி குறைந்த வாடகைக்கட்டிடத்திலேயே நடைபெற்றுக் கொண்டு இருந்தது. அதனால் சங்கத்துக்கு நெடுங்கேணியில் உள்ள தனியார் வியாபார நிலையங்களுக்கு மத்தியில் அமைந்திருந்த அரச காணித்துண்டு ஒன்றில் சங்கத்தின் விற்பனைநிலையம் ஒன்றை கட்டுவதற்கு சங்கத்தில் தீர்மானிக்கப்பட்டது.

முதலில் அக்காணித்துண்டை சங்கத்துக்குப் பெற்றுக் கொள்வதற்கு வவுனியா அரசஅதிபருக்கு விண்ணப்பித்தோம். அக் காணித்துண்டு கிராமத்தின் கேந்திரநிலையத்தில் அமைந்திருந்ததால் அதனை அரசாங்க பொதுத்தேவைகளுக்கு பயன்படுத்தலாம் என சிலர் தர்க்கம் புரிந்தனர். ஒரு கிராமத்தின் வளர்ச்சிக்கு அக்கிராமத்தில் ஓர் கூட்டுறவுச்சங்கம் அமைவது மிக முக்கியமாகும். என்பதை அரச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிபருக்கு விளக்கி அக்காணித்துண்டு சங்கத்தின் பெயரில் பெறப்பட்டது. அக்காணித்துண்டில் இரண்டு அறைகளைக் கொண்ட விசாலமான கட்டடம் ஒன்று அமைக்கப்பட்டு அக்கட்டிடத்தில் சங்கத்தின் வியாபாரங்கள் நடைபெற்றன. சங்கத்தில் விற்பனை செய்யும் பொருட்களை நேரடியாக கொழும்பில் இருந்து கொள்வனவு செய்து குறைந்த விலையில் மக்களுக்கு விற்பனை செய்யப்பட்டது. அத்துடன் கிராம மக்களால் உற்பத்தி செய்யப்படும் பொருட்களும் கொள்வனவு செய்து சங்கத்தில் வைத்து விற்பனை செய்யப்பட்டது. இவ்வாறு மக்களின் தேவைகள் இலாபகரமாக அமைந்ததால் மக்கள் கூட்டுறவுச் சங்கத்தில் நம்பிக்கை வைத்து இணைந்து செயற்பட்டனர்.

**************

## 11. வன்னி வளர்ச்சிப்பணி

இந் நிலையில் வன்னிப் பிரதேசவளர்ச்சிப்பணிகளில் ஈடுபட ஆரம்பித்தேன். துறைசார்ந்த பொது அமைப்புகளை நிறுவி அவற்றின் மூலம் வளர்ச்சிப்பணிகளை முன்னெடுக்கலாம் என கருதினேன். எவ்வாறான முயற்சிகளை மேற்கொண்டாலும் அதற்கு அரசியல் ரீதியான ஆதரவுமுக்கியமாகும். அக் காலகட்டத்தில் வன்னிப்பிரதேசமக்களின் முன்னேற்றத்திற்கு ஆதரவான அரசியல் செயற்பாடுகள் மிகக்குறைவாகவே இருந்தன. ஆகவே அரசியல் ஆதரவு வலுப்படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். என தீர்மானித்தேன். எனினும் அம் முயற்சி மக்கள் மயப்பட்டதாகவே அமையவேண்டும். அக்காரணங்களால் வன்னியின் வளர்ச்சிக்கான முயற்சிகளை மேற்கொள்வதற்கான ஆலோசனைகளையும் ஆராய்வுகளையும் மேற்கொள்வதற்கு ஓர் ஆலோசனைக்கூட்டத்தை கூட்டுவதற்கு தீர்மானிக்கப்பட்டது. அக் கூட்டத்திற்கு அக் காலகட்டத்தில் வவுனியா மாவட்டத்தில் அமைந்திருந்த உள்ளூராட்சி மன்றத்தலைவர்களையும் புத்திஜீவிகளையும் ஆசிரியர்களையும் அழைப்பதென தீர்மானித்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் அடிப்படையில் அவ் வேளையில் வவுனியா மாவட்டத்தில் அமைந்திருந்த உள்ளூராட்சி மன்ற தலைவர்களை நேரில் சென்று கூட்டம் கூட்டுவதைப்பற்றி கலந்து ஆலோசனை புரிந்தேன். எனது கருத்துக்களை விளங்கிக்கொண்ட தலைவர்கள் கூட்டத்தில் பங்கு பெறுவதற்கு தீவிரமான ஆதரவுதெரிவித்தனர். அதேபோல் பல புத்திஜீவிகளையும். ஆசிரியர்களையும் தனித்தனி சந்தித்து கலந்துரையாடி அவர்களின் விருப்பு நிறைந்த ஆதரவைப்பெற்றேன். அவ்வாறு கூட்டப்படும் கூட்டத்தில் நிச்சயமாக அரசியல் பிரச்சனைகளும் ஆராயப்படவேண்டி இருக்கும். நானும் அக்கூட்டத்தில் பங்குபற்றும் வேறு சிலரும் அரச சேவையில் இணைந்திருந்தமையால் அரசியல் பிரச்சனைகளில் ஈடுபடுவது சட்டவிரோதமாகும். அதனால் அக் கூட்டம் மக்கள் நடமாட்டம் இல்லாத ஓர் இடத்தில் நடத்தப்பட வேண்டும். என எண்ணி நைநாமடு எனும் இடத்தில் உள்ளூராட்சி மன்றத்திற்கு ஓர் மண்டபம் கட்டப்பட்டு திறக்கப்படாமல் இருந்த நிலையில் அக் கட்டடத்தில் அக்கூட்டத்தை நடத்த தீர்மானிக்கப்பட்டது. அதே நேரத்தில் கூட்டத்திற்கு அழைக்கப்பட்டவர்கள் மாத்திரம் பங்குபற்றவேண்டும் என்ற நிபந்தனையும் கடைப்பிடிக்கப்பட்டது.

1959ஆம் ஆண்டு தை மாதத்தில் முன்கூறியவாறு நைனாமடு எனும் இடத்தில் உள்ள உள்ளூராட்சி மண்டபத்தில் கூட்டம் கூட்டப்பட்டது. அக் கூட்டத்திற்கு முன்னர் தீர்மானித்தபடி வவுனியா மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள் ஆசிரியர்கள் வெவ்வேறு சில புத்திஜீவிகள் என்பவர்கள் அழைக்கப்பட்டனர். அழைக்கப்பட்டவர்கள் அனைவரும் ஆர்வத்தோடு சமுகம் அளித்து இருந்தனர் அக் கூட்டத்தில் முதற்கண் நான் உரையாற்றினேன்.

**************



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 12. எனது உரை

மதிப்பு மிக்க வவுனியா மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்களே! ஆசிரியர்களே! ஏனைய புத்திஜீவிகளே! அனைவருக்கும் என் அன்பு வணக்கம். எமது அழைப்பை ஏற்று ஆர்வத்துடன் இங்கு சமுகமளித்திருக்கும் அனைவருக்கும் வன்னி மக்கள் சார்பில் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இக் கூட்டத்தின் நோக்கம் பற்றி முன்பே உங்களுடன் கலந்துரையாடி இருந்தாலும் அதனை சிறிது விரித்துரைக்க விரும்புகிறேன். நான் வன்னிப்பிரதேசத்தில் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ள நெடுங்கேணி பெரியகுளம் எனும் கிராமத்தில் பிறந்து வளர்ந்தேன். ஏதோ பூர்வஜென்ம புண்ணிய வசத்தால் சாவகச்சேரி சென்று படித்து ஓர் தமிழ் ஆசிரியராக தகுதி பெற்றேன். இலங்கையின் சகல பிரதேசங்களையும் சுற்றிப்பார்த்துள்ளேன். அதனால் வன்னிப்பிரதேச நிலைகளை வளர்ச்சியடைந்த பிரதேசநிலைகளோடு ஒப்பிட்டுநோக்கி வேதனைப்படுகிறேன். அந்த வேதனையின்வெளிப்பாடுதான் இக் கூட்டம் ஆகும். வளர்ச்சிகுன்றிய வன்னிப்பிரதேச நிலை பற்றிய உங்கள் உள்ளக்குமுறல்களும் உணர்ச்சி அலைகளும் வன்னிப்பிரதேச வளர்ச்சிக்கு அத்திவாரமாக அமைய வேண்டும். என இறைவனிடம் இரங்கிக்கேட்கிறேன்.

பெரியோர்களே! ஒரு பிரதேசம் வளர்ச்சியடைவதற்கு முதலாவதாகவும் மூலாதாரமாகவும் அப் பிரதேசமக்கள் கல்வித்துறையில் வளர்ச்சி பெறவேண்டும். இது நியதி ஆகும். ஆனால் ஆயிரக்கணக்கான வன்னிக் கிராமங்களில் ஆரம்பக்கல்வியைக்கூட பெறக்கூடிய பாடசாலைகள் எதுவும் அமையவில்லை ஏதோ விரல்விட்டு எண்ணக்கூடிய சில கிராமங்களில் ஐந்தாம் வகுப்புவரை படிக்கக்கூடிய ஆரம்பப் பாடசாலைகள் மாத்திரம் அமைந்திருந்தன. ஆரம்ப காலத்தில் அதற்கு மேல் படிக்கக்கூடிய உயர் கல்வி நிலையங்கள் அனேகமாக அமைந்திருக்கவில்லை. பிற்காலத்தில் வவுனியா நகரத்திலும் முள்ளியவளையிலும் மாத்திரம் உயர் கல்வி பெறக்கூடிய கல்வி நிலையங்கள் உருவாகின. ஆங்கில ஆட்சிக் காலத்தில் இருந்தே வன்னிப்பிரதேசத்தின் கல்வி வளர்ச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குன்றியதாகவே இருந்தது. ஓரளவு பொருளாதார வளம் பெற்று இருந்த ஒரு சில பெற்றோரின் பிள்ளைகள் மாத்திரம் யாழ் மாவட்ட பாடசாலைகளுக்குச் சென்று ஓரளவு கல்விஅறிவைப் பெற்றார்கள். அவ்வாறு பெற்ற மிகக்குறைந்த தொகையினரான வன்னிப்பிள்ளைகள் சிலர் மாத்திரம் அரச உத்தியோகங்களைப் பெற்றனர்.

இந் நிலையில் வன்னிப் பகுதி அரச உத்தியோகஸ்தருள். 99% மானவர்களும் வேறு மாவட்டங்களைச் சேர்ந்தவர்களாகவே இருந்தனர். அதனால் அவர்களாலும் வன்னிப்பிரதேச வளர்ச்சியில் அதிக அக்கறைகாட்டமுடியவில்லை. தமது அரச கடமைகளைப் பூர்த்தி செய்வதில்மாத்திரம் முனைப்பாக இருந்தனர். அதனால் அவர்கள் மக்கள் வளர்ச்சிக்கான பொதுமுயற்சிகளில் ஈடுபாடு கொள்ளவில்லை. அவ்வாறு அவர்கள் செயற்பட்டமையை தவறு என்றும் சொல்ல முடியாது. ஒவ்வொரு மனிதனும் எதனையும் தனக்கு தனக்கு என்று நினைப்பதே இயற்கை நியதியாகும்.

அடுத்து வன்னிப்பகுதியின் சுகாதாரத் துறைபற்றி சிந்திப்போமாயின் மருத்துவ வசதிகள் மிகத்தாழ்ந்த நிலையிலேயே இருந்தன. ஓரளவு வைத்திய வசதிகளோடு வவுனியாவிலும் முல்லைத்தீவிலும் இரண்டுவைத்திய சாலைகள் அமைந்திருந்தன. அவ்வைத்திய சாலையில் கூட சத்திரசிகிச்சை கூடங்கள் ஆரம்பத்தில் அமைந்திருக்க வில்லை. வன்னிப்பிரதேசத்தில் ஆங்காங்கு பல கிராமங்களுக்கு மத்தியில் ஒவ்வொரு டிஸ்பென்சறி மாத்திரம் அமைந்திருந்தது. பிரசவ வைத்தியவசதிகள் கூட கிராமப்புறங்களுக்கு விஸ்தரிக்கப்படவில்லை. கடும் நோய்களால் பீடிக்கப்பட்டவர்களும் சத்திரசிகிச்சை நோயாளர்களும் யாழ்ப்பாணம், கொழும்பு போன்ற இடங்களுக்கே செல்ல வேண்டிய துர்ப்பாக்கிய நிலை தொடர்ந்தே இருந்தது. வன்னிப்பகுதியில் பிரசவங்கள் அனைத்தும் அவர்களின் வீடுகளிலேயே நடைபெற்றன. கிராமத்தில் வயதானபெண்களே மருத்துவிச்சியாக செயற்பட்டனர். இவ்வாறான நிலையால் பலசிசு மரணங்களும் நிகழ்ந்தது உண்டு.

அடுத்து விவசாயத் துறையைப்பற்றி சிந்திப்போம். வன்னிப் பிரதேசத்தில் வாழ்ந்த மக்கள் அனைவரும் பெரும்பாலும் விவசாயத்தையே தமது வாழ்வாதாரமாகக் கொண்டிருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பகாலத்தில் வன்னிப்பிரதேச விவசாயத்துறையில் எந்த விதமான நவீன முறைகளும் இடம் பெறவில்லை. பரம்பரை பரம்பரையாகச் செய்தது போல வயல் நிலங்களை கிடாமாடுகளைப் பயன்படுத்தி கலப்பையினால் உழுது புழுதியாகவும் சேறடித்தும் நெல் விதைத்து வந்தனர். கூடிய விளைச்சல் தரக்கூடியவிதை நெல் வகைகளையோ நோய்தடுப்பு மருந்து வகைகளையோ பீடைநாசினிகளையோ களைநாசினிகளையோ பாவிக்கும்வாய்ப்பு வன்னி விவசாயிகளுக்கு கிடைக்கவில்லை. ஏக்கருக்கு பதினைந்து இருபதுவரையான மூடைநெல் விளையக்கூடிய விதைநெல் வகைகளையே விதைத்து அது விளைந்தவுடன் அறுவடை செய்துசூடுவைத்து கிடாமாடுகளைப்பாவித்தே நிலத்தில்களம் அமைத்து சூடு அடித்து காற்றில் நெல்லைத்தூற்றி எடுத்தனர். அவ்வாறு நிலத்தில் சூடு அடித்ததால் நெல்லில் சிறிதளவு கல் மண் கலந்தே இருந்தது அவ்வாறு கிடைத்த நெல்லை அதிகமாக விவசாயிகள் உடனடியாக விற்பனை செய்வதில்லை. தங்களுடைய வீடுகளிலேயே பட்டறை, கொம்பறை என்று சொல்லப்படும் அமைப்புகளில் நெல்லை சேமித்து தங்களுடைய தேவையை பூர்த்தி செய்து கொள்வர். சில பெரிய நிலச்சுவாந்தர்கள் மாத்திரம் தங்களுடைய தேவைக்கு மிதமிஞ்சிய நெல்லைவெளிமாவட்ட வியாபாரிகளுக்கு விற்பனை செய்வார்கள்.

நான் அறிந்த வரையில் 1935 ஆம் ஆண்டளவில் ஒரு மூடைநெல்லின் விலை 7ரூபா மட்டுமே ஆகும். பல கிராமவாசிகள் நெற்செய்கையோடு குரக்கன், உழுந்து, பயறு போன்ற தானிய வகைகளையும் உற்பத்திசெய்து தமது தேவையை பூர்த்தி செய்வார்கள். தோட்டப்பயிராக மிளகாய், கத்தரி, மரவள்ளி போன்றபயிர்களையும் தமது தேவைக்குத்தக்க அளவு உற்பத்தி செய்வார்கள். தோட்டப்பயிர் அதிகளவு செய்யக்கூடிய நிலப்பரப்பு இருந்தும் வன்னி மக்கள் அவற்றை அதிகமாக செய்யமுற்படுவதில்லை. அதற்கான அடிப்படைக்காரணம் அவ்வாறு அதிகமாக செய்யும் விளைபொருட்களை விற்பனைசெய்யும் சந்தைவாய்ப்பு அறவே இல்லை. ஒரு காலகட்டத்தில் வன்னிப்பிரதேசத்தில் சகல இடங்களிலும் பரவலாகமக்கள் குடியமைந்திருந்த கிராமங்களில். குளங்கள் அமைத்து மழைநீரை தேக்கிவிவசாயத்தைச் செய்தனர். வளர்ச்சி பெற்று இருந்த வன்னிப்பிரதேசம் அழிவுற்ற ஓர்காலகட்டத்தில் அவர்கள் அமைத்திருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயிரக்கணக்கான குளங்கள் முறிப்பெடுத்து பாண்குளங்களாகவே இருக்கின்றன.

வன்னியில் உள்ள பாண்குளங்கள் அனைத்தையும் புனரமைத்து நீரைத்தேக்கி விவசாயம் செய்தால் இலங்கையில் உணவுப்பஞ்சம் என்ற நிலை எக்காலத்திலும் ஏற்படாது என்பது மக்கள் கருத்தாகும். பாவனையில் இருந்த குளங்களைக்கூட அரசாங்கம் வருடாந்தம் பராமரித்து திருத்தவேலைகளைச் செய்யவில்லை. அவ்வாறான சிறிய குளங்களை பெருப்பித்து போதிய அளவு நீரைத்தேக்கினால் இருபோக நெற்செய்கையை மேற்கொண்டு விவசாயிகள் இலாபம் பெற முடியும்.

அடுத்து வன்னிப்பிரதேச வீதியமைப்புகளை ஆராய்வோம். ஒரு பிரதேசத்தின் முன்னேற்றத்திற்கு அப்பிரதேசத்தின் வீதியமைப்புகளும் சிறந்த முறையில் அமைந்திருக்க வேண்டும். வன்னிப்பிரதேசத்தை ஊடறுத்துச் செல்லும் A9 வீதி மாத்திரம் தார்போடப்பட்ட வீதியாக அமைந்து இருந்தது. ஏனையவீதிகள் அனைத்தும் வெறும் தரைப்பாதைகளாகவே அமைந்திருந்தன. கிராமங்களை இணைக்கும் பாதைகள் அனேகமாகஅடர்ந்த காடுகளுக்குஊடாக ஓர் பத்தடிஅகலத்தில் அமைந்திருந்த காட்டுப்பாதைகளாகவே காட்சியளித்தன. அப் பாதைகளை ஊடறுக்கும் ஆறுகள் நீரோட்டங்கள் என்பவற்றிலும் மதகுகளோ, பாலங்களோ அமைக்கப்பட்டு இருக்கவில்லை. அவ்வாறான நிலையில் அடைமழை பெய்யும் காலத்தில் வெள்ளம் காரணமாக பிரயாணம் செய்யமுடியாது. கிராமங்களிலேயே மக்கள் முடங்கிஇருந்தனர். அக் காலத்தில் வன்னிப்பிரதேசத்தில் மோட்டார் வாகனங்கள் எதுவும் பாவனையில் இருக்கவில்லை. பெரும்பாலான மக்களின்பிரயாணம் கால்நடையாகவே நடைபெற்றது. காலம் செல்லச் செல்ல ஒரு சிலர் துவிச்சக்கரவண்டிகளைப் பாவித்தனர். துவிச்சக்கர வண்டியில் கூட மண்பாதைகளில் வேகமாகசெல்லமுடியாமலேயே இருந்தது.

நீண்டதூரப் பிரயாணத்துக்கு அனேகமாக மக்கள் மாட்டுவண்டிகளிலேயே பிரயாணம் செய்தனர். பஸ் வண்டிகளில் பிரயாணம் செய்யவேண்டுமானால் முல்லைத்தீவு மாங்குளம் வீதியில் உள்ள பஸ்தரிப்பிடங்களுக்கே நடந்து செல்லவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவாகவைபவங்கள் நடைபெறும் போதும் கோவில் திருவிழாக்கள் நடைபெறும் போதும். மாட்டுவண்டிகளிலேயே பிரயாணம் செய்வார்கள் புகையிரதத்தில் பிரயாணம் செய்பவர்கள் புகையிரதத்தில் பிரயாணம்செய்யவேண்டும் எனில் கிளிநொச்சி மாங்குளம், புளியங்குளம், ஓமந்தை ஆகிய புகையிரத நிலையங்களுக்கு கால்நடையாகச்சென்று பிரயாணத்தை மேற்கொள்வார்கள். இன்றைய நிலையிலும் கிராமங்களை இணைக்கும் பல பாதைகள் மண் பாதைகளாகவே இருக்கின்றன.

இந் நிலையில் வன்னிப்பிரதேசத்தின் அரச பணிகளும் அரசியல் நிலைமைகளும் எவ்வாறு அமைந்திருந்தன என்பதனை ஆராய்வோம். பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் அரசுக்கு வன்னிப்பிரதேசத்தில் இருந்து மதிப்பிடக்கூடிய பலன்கள் எதுவும் கிடைக்கவில்லை. அதனால் வன்னிப்பிரதேசத்தை அபிவிருத்தி செய்யும் முயற்சியில் பிரித்தானிய அரசு எதனையுமே செய்யவில்லை. அக்காலகட்டத்தில் கிராம மக்களின் தேவைகளைப் பூர்த்திசெய்யும் அரச அதிகாரிகளாக விதானைமாரும், உடையார்மாரும், முதலியார்களுமே கடமை ஆற்றினர். அவ்வாறான உத்தியோகத்தில் அமர்ந்திருந்தஅவர்கள் ஓர் மேட்டுக்குடி மனோபாவத்தோடுதான் அவர்களுடைய சேவைகளை ஆற்றினர். வறுமையில் சிக்கித்தவிக்கும் வன்னி மக்களை அடக்கி ஆள்பவர்களாகவே செயற்பட்டனர். ஏனைய அரசஅதிகாரிகள் அனைவரும் பிற மாவட்ட மக்களாகவே இருந்தனர். அந் நிலையில் அவர்கள் கூட வன்னிப்பிரதேச வளர்ச்சியில் உணர்ச்சிபூர்வமாக செயற்படவில்லை.

அக்காலத்தில் வன்னிப்பிரதேசத்தில் முல்லைத்தீவில் தம்பையா முதலியார் பரம்பரையினர் பிரபல் யமாக இருந்தனர். முல்லைத்தீவுப் பகுதியில் குறி சுடாமல் உள்ள மந்தைகள் அனைத்தும் முதலியார் பரம்பரைக்கு உரியது என்று எழுதப்படாத ஓர் சட்டம் இருந்ததாக மக்கள் பேசிக்கொண் டிருந்தனர். அரசாங்க சபை ஆட்சி நடந்த காலத்தில் ஒரு சில வருடங்கள் தம்பையா முதலியாரின் மகன் T.M சபாரத்தினம் என்பவர் அரசாங்கசபை உறுப்பினராக பதவிவகித்துள்ளார். அவர் ஓர் உள்ளூர்வாசியாக இருந்தும் கூட வன்னிப்பிரதேச வளர்ச்சியில் முக்கியமாக எதனையும் சாதித்துவிடவில்லை. அதன் பின் கொழும்பை வதிவிடமாகக்கொண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரபல்யமான கல்விமான்கள் வன்னிப்பிரதேச அரசசபை உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டு பணியாற்றினர்.

ஸ்ரீமான் பத்மநாதன் ஸ்ரீமான் ஞானமுத்து பொருளாதார நிபுணர் தியாகராஜா ஈற்றில் தலைசிறந்த கணிதப்பேராசிரியரும் சட்டவல்லுனருமான ஸ்ரீமான் சுந்தரலிங்கம் ஆகியோர் சட்டசபை உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டு செயற்பட்டனர். இவ்வாறான கல்விமான்கள் வன்னிப்பிரதேச அரச பிரதிநிதியாக செயற்பட்டும் கூட வன்னிப்பிரதேச வளர்ச்சி மந்தகதியிலேயே நடைபெற்றது. ஆனால் ஸ்ரீமான் சுந்தரலிங்கத்தின் காலத்தில் ஒருசில கல்வி நிலையங்களை நிறுவியதோடும் சில நீர்த்தேக்கங்களையும் அமைத்துள்ளார். பிரதேசத்திற்கு தலைமை தாங்கும் அரசியல் பிரமுகர் அந்தப் பிரதேசத்தில் பிறந்து வளர்ந்து அப்பிரதேச மக்களோடு ஒட்டிஉறவாடி அப்பிரதேசநிலைமைகளை அனுபவரீதியில் அறிந்துஉணர்ச்சிபூர்வமாக அப்பிரதேசவளர்ச்சியில் அக்கறை கொண்டு செயற்படும்பொழுது தான் அப்பிரதேசத்தில் வளர்ச்சி ஏற்படவழிபிறக்கும் என்பதேமக்கள் கருத்தாகும். என்னுடைய பிரதேசம் என்னுடைய மக்கள் என்றமாதிரியான உணர்வு ஒருவருடைய உள்ளத்தில் உறுதியாகும் பொழுதுதான் அவன் வாழும்பிரதேசத்தின் வளர்ச்சியில் அவனுக்கு உணர்ச்சிபூர்வமான ஈடுபாடு ஏற்படும். அவ்வாறான அரசியல் தலைவர்கள் வன்னிப்பிரதேசத்திற்குக் கிடைக்காததுதான் வன்னிப்பிரதேச வளர்ச்சி மந்தகதியில் நடைபெற்றமைக்கு காரணமாகும் என்பது மக்கள் கருத்தாக இருந்தது. இந் நிலையில் இங்குகூடியிருக்கும் யாவரும் மேற்கூறியவாறான பிரச்சனைகளை தெளிவாக சிந்தித்து ஆக்கபூர்வமான முடிவுகளை தீர்மானிக்கவேண்டும். என வன்னிமக்கள் சார்பாக தங்களிடம் கேட்டுக்கொள்கிறேன். என்று கூறி எனது உரையை முடித்துக்கொண்டேன்.

அதனை அடுத்து உள்ளூராட்சி மன்ற தலைவர்கள் சிலரும் சில ஆசிரியர்களும் வேறு சில பெரியோர்களும் எனது கருத்துக்களை ஆதரித்து உரையாற்றினர். அதனையடுத்து வன்னிப்பிரதேசத்தில் சகல துறைகளிலும் வளர்ச்சியை ஏற்படுத்துவதற்கு **வன்னிவளர்ச்சிக் கழகம்** என்ற ஓர் அமைப்பை ஏற்படுத்தி வன்னிமக்களை அக்கழகத்தின் உறுப்பினராக இணைத்துச் செயற்படவேண்டும். என ஓர் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. அத்துடன் வன்னிப்பிரதேச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராளுமன்ற உறுப்பினராக வன்னிப்பிர தேசத்திலேயே பிறந்து வளர்ந்து வன்னிப்பிரதேச நிலைமைகளை அனுபவரீதியில் அறிந்து பொதுச்சேவையில் நாட்டம் கொண்டு செயற்படக்கூடிய ஒருவரையே வன்னிப்பிரதேச பாராளுமன்றப்பிரதிநிதியாக தெரிவுசெய்வதற்கு வன்னிமக்கள் ஒன்றுதிரண்டு செயற்படவேண்டுமென அங்கு கூடியிருந்த அனைவராலும் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. அத்துடன் அன்றைய கூட்டம் இனிதுகலைந்தது.

இந் நிலையில் 1959ஆம் ஆண்டு வன்னிப்பிரதேச பாராளுமன்ற உறுப்பினரான ஸ்ரீமான் சுந்தரலிங்கம் அவர்கள் ஏதோ அரசியல்பிரச்சனை காரணமாக பாராளுமன்றப்பதவியை ராஜினாமா செய்து இடைத்தேர்தலுக்கு வழியை ஏற்படுத்தினார். உள்ளூர் வாசிகளான பெரியார்கள் சிலர்ஒன்று சேர்ந்து ஸ்ரீமான் சுந்தரலிங்கம் அவர்களை நேரில் கண்டு வன்னிப்பிரதேசத்திற்கு வரஇருக்கும் பாராளுமன்ற தேர்தல்களில் வன்னிப்பிரதேசத்தில் பிறந்து வளர்ந்த ஒருவரையே தேர்தலுக்கு நிறுத்தவேண்டும். என்பது வன்னி மக்களின் கருத்தாகும். தயவுகூர்ந்து மக்களின் கருத்தை ஏற்றுநீங்கள் தேர்தலில் போட்டியிடுவதை விலக்கிக்கொள்ள வேண்டுமென கேட்டுக்கொண்டனர். மக்களின் கருத்துசரியானதே என ஒப்புக்கொண்டவர் உடனடியாக தனது கருத்தை தெரிவிக்க மறுத்துவிட்டார். இந் நிலையில் வவுனியாவிலும் முல்லைத்தீவிலும் இருந்த உள்ளூர் வாசிகளான சட்டத்தரணிகளை 1959ல் நடைபெற்ற இடைத்தேர்தலில் போட்டிஇடவருமாறு மக்கள் கோரிக்கைவிடுத்தனர். ஸ்ரீமான் சுந்தரலிங்கம் அவர்கள் தேர்தலுக்கு நிற்க முயற்சித்தால் அவரை எதிர்த்துப் போட்டியிடுவதற்கு தயக்கம் காட்டினார்கள். அதனால் தண்ணீர் ஊற்றைப்பிறப்பிடமாகக் கொண்ட திருவாளர் தா.சிவசிதம்பரம் (V.C.O) அவர்களை அவ் இடைத்தேர்தலில் போட்டியிடுமாறு மக்கள் வற்புறுத்திக் கேட்டுக்கொண்டனர். அதனைஏற்று போட்டியிட்ட திருவாளர் சிவசிதம்பரம் அவர்கள் இடைத்தேர்தலிலும் அதனையடுத்து 1960ஆம் ஆண்டு நடந்த பொதுத்தேர்தலிலும் போட்டியிட்டு வெற்றிபெற்றார்.

அதனால் ஸ்ரீமான் சுந்தரலிங்கம் அவர்கள் அரசியலில் இருந்துவிலகிஇருந்தார். பாராளுமன்ற உறுப்பினராக தெரிவுசெய்யப்பட்ட திருவாளர் சிவசிதம்பரம் அவர்கள் ஆரம்பகாலத்தில் வன்னிப்பிரதேச வளர்ச்சியிலும் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதிலும் நாட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு செயற்பட்டார். கல்வி வசதியற்ற கிராமங்களில் ஆரம்பப் பாடசாலைகளை நிறுவி அவற்றில் வன்னிப்பகுதியில் ஆசிரியர் ஆகக்கூடிய கல்வித்தராதரத்தை உடைய ஆண்பெண் இருபாலரையும் ஆசிரியர்களாக நியமித்து பலர் ஆசிரியராகபதவி பெற ஆவன செய்தார். அவர் ஓர் V.C.O ஆக இருந்த அனுபவத்தால் குளங்களைப்புனரமைத்து விவசாயத்தை ஊக்குவித்தார்.

மேற்கூறியவாறு மறைமுகமாக அரசியல் பிரச்சனைகளில் ஈடுபட்டதால் என்மேல் அதிருப்தி கொண்ட சிலரும் முன்பு நெடுங்கேணிப்பாடசாலையில் தலைமை ஆசிரியராக இருந்து மக்களின் அதிருப்தி காரணமாக அங்கிருந்து மாற்றப்பட்ட தலைமை ஆசிரியர் ஒருவரின் குடும்பமும் சேர்ந்து என்னை நெடுங்கேணிப்பாடசாலையில் இருந்து மாற்றுவதற்குச் சதிசெய்தன. நான் அரசியல் பிரச்சனைகளில் ஈடுபடுகிறேன். என குற்றம் சுமத்தி கல்விலாகாவிற்கு பல மனுக்களை அனுப்பினர். அக்காலகட்டத்தில் கல்வி தலைமையகத்தில் தலைமை அதிகாரியாக இருந்தவர் ஓர் முஸ்லீம் ஆவார். நான் தமிழர் ஆசிரியர் சங்கத்தில் பொதுச்செயலாளர் ஆக இருந்தபொழுது முஸ்லீம் ஆசிரியர்களுக்கு அளிக்கப்பட்ட சலுகைகளை ரத்துச்செய்யவேண்டும் என்று முயற்சித்தமையால் அந்த முஸ்லீம் அதிகாரி என்மேல் அதிருப்தி அடைந்திருந்தார். அக் காரணத்தால் எனக்கு எதிராக அளிக்கப்பட்ட மனுக்கள் அடிப்படையில் என்னை 1961ஆம் ஆண்டு நுவரெலியாப் பகுதியில் உள்ள சூரியகாகப்பத்தனை என்னும் இடத்தில் உள்ள பாடசாலைக்கு மாற்றம் செய்தார். அதனால் அப்பாடசாலையில் கடமை ஏற்று 6மாதங்கள் வரை அங்கு கடமைபுரிந்தேன்.

பாராளுமன்ற உறுப்பினரின் வற்புறுத்தலின் பேரில் 6மாதங்களின் முடிவில் எனதுசொந்தக்கிராமமான பெரியகுளம் பாடசாலைக்கு மாற்றப்பட்டேன். அவ்வாறு பெரியகுளம் பாடசாலையில் கடமை புரிந்தகாலத்தில் எனது விவசாயத்தொழிலில் முக்கிய கவனம் செலுத்தினேன். அரசாங்கத்திடம் இருந்து பெறப்பட்ட 10 ஏக்கர் வயல் நிலத்தை பூரணமாக அபிவிருத்தி செய்து செய்கை பண்ணி போதிய இலாபத்தைப் பெற்றுக்கொண்டேன். தொடர்ந்து சில வருடங்கள் எனது சொந்தத்தொழில்களை சீராகசெய்தமையால் எனது பொருளாதார நிலை ஓரளவு திருப்தியாக இருந்தது.

*********



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 13. மீண்டும் நெடுங்கேணியில்

1968 ஆம் ஆண்டு மீண்டும் நெடுங்கேணி மகா வித்தியாலயத்துக்கு மாற்றப்பட்டேன். அக்காலத்தில் திரு.இராசநாயகம் என்பவர் பாடசாலையில் அதிபராக கடமைபுரிந்தார். நான் அவரின் கீழ் முதலாம் தர தலைமைஆசிரியராக பதவிவகித்தேன். ராசநாயகம் அவர்கள் அதிபராக இருந்தாலும் என்னை உள்ளூர் வாசி என்ற நிலையில் மதித்து பாடசாலை அபிவிருத்தி வேலைகள் அனைத்தையும் என்னை முதன்மைப்படுத்தியே செய்தார். அதனால் நானும் பாடசாலை வளர்ச்சியில் முக்கிய கவனம் செலுத்தி கடமையாற்றினேன். அங்கு கடமைஆற்றிய காலத்தில் இரண்டு மூன்று ஆண்டுகளுக்குள் இரண்டு புதிய வகுப்பறைக்கட்டிடங்கள் புதிதாக கட்டப்பட்டன. நெடுங்கேணிக் கிராமத்தை அடுத்துள்ள கிராமங்களில் இருந்து ஐந்தாம் வகுப்பிற்கு மேற்பட்ட வகுப்புகளில் படிக்கும் மாணவர்கள் நெடுங்கேணி மத்திய பாடசாலைக்கே வருகைதந்தனர். அதனால் பாடசாலைமாணவர் தொகையும் அதிகரித்தது. அதற்கேற்ப ஆசிரியர் தொகையும் அதிகரித்தது. அவ்வாறான நிலையில் சாதாரணதரம் உயர்தரம் வரை வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டன. இந் நிலையில் திரு.இராசநாயகம் அதிபர் அவர்கள் இளைப்பாறிய காரணத்தால் திரு.அந்தோனிமுத்து என்பவர் அவருடைய இடத்துக்கு மாற்றப்பட்டார். அவரும் என்னை முதன்மைப்படுத்தியதால் பாடசாலை வளர்ச்சி முயற்சிகளில் நானும் அவருடன் பூரணமாக ஒத்துழைத்து பாடசாலையின் கல்விநிலைகளை உயர்த்தினோம். ஆசிரியர்களும் அக்கறை எடுத்துச் செயற்பட்டனர்.

இந் நிலையில் எழுபதாம் ஆண்டில் பாராளுமன்ற பொதுத்தேர்தல் நடைபெற்றது. அத் தேர்தலில் தமிழ்ப்பிரதேசம்எங்கும் தமிழரசுக்கட்சி உறுப்பினருக்கே செல்வாக்கு அதிகரித்திருந்தது. அந்நிலையில் திருவாளர். X.M.செல்லத்தம்பு அவர்களை வன்னி தேர்தல் தொகுதிக்கு உறுப்பினராக தமிழரசுக்கட்சி நியமித்தது. அவர் உள்ளூர் வாசியாக இருந்தும் கூட மக்களை மதிக்காதஓர் தலைக்கனம் பிடித்தவராக செயற்பட்டமையால் அவரை விலக்கி வேறுஒருவரை நியமனம் செய்யுமாறு தமிழரசுக்கட்சி பிரமுகர்களை வற்புறுத்தினேன். ஆனால் அவர்கள் திரு.செல்லத்தம்பு அவர்களை நியமனம் செய்தனர். அவரை எதிர்த்து முன்னைய பாராளுமன்ற உறுப்பினர் தா.சிவசிதம்பரம் அவர்கள் தமிழ்காங்கிரசுக்கட்சி சார்பில் தேர்தலுக்கு நியமனமானார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் முன்புகூறியது போல் அரசியல் ரீதியாக தமிழரசுக்கட்சியே பொதுமக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்று இருந்தது. அதே நேரம் முன்னைய பாராளுமன்ற உறுப்பினர் தா.சிவசிதம்பரம் அவர்களும் அவரின் தவறானசெயற்பாடுகளால் பொதுமக்கள் மத்தியில் செல்வாக்கு இழந்தவராக காணப்பட்டார். அதனால் அப்பொதுத்தேர்தலில் திருவாளர்.செல்லத்தம்பு அவர்களே வன்னித்தேர்தல் தொகுதியின் ஓரளவு குறைந்தவாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். அவரின் நியமனத்தை நான் எதிர்த்து வெளியிட்டகருத்துக்களால் அவர் என்மேல் கடும் வெறுப்பு கொண்டவராகவே இருந்தார். அவ்வாறு திருவாளர். செல்லத்தம்பு அவர்கள் என்மேல் வெறுப்புக் கொண்டிருந்த காரணத்தாலும் என்னை நெடுங்கேணிப்பாடசாலையில் இருந்து மாற்றுவிக்கவேண்டும் என்பதை கருத்தில் கொண்டு மாவட்டஅதிகாரிகள் மூலமும் மாகாணகல்வி அதிகாரிகள் மூலமும் பலமுறை மாற்றுவித்தார். நான் ஆசிரியர் தொழிற்சங்கத்தில் நீண்டகாலம் தொடர்ந்து சேவையாற்றியதால் கல்விப் பகுதி உயர் அதிகாரிகள் என்னை மிகவும் நேசித்து மதித்து எனது வேண்டுகோளுக்குச் சார்பான நடவடிக்கைகளை எடுத்தனர். அந் நிலையால் திரு செல்லத்தம்புவின் வேண்டுகோளால் கீழ்மட்ட அதிகாரிகள் செய்யும்மாற்றங்களை எதிர்த்து உயர் அதிகாரிகளுக்கு முறையிடும் போதெல்லாம் அம் மாற்றங்களை ரத்துச்செய்தனர். இவ்வாறு அவருடைய பதவிக்காலத்தில் நெடுங்கேணிப்பாடசாலையில் இருந்து 16 முறை நான் மாற்றப்பட்டு இருக்கிறேன்.

பதினேழாவது முறையாக நான் நெடுங்கேணியில் இருந்து மண்டைதீவுப் பாடசாலைக்கு வடமாகாணக் கல்வி அதிகாரிகளால் மாற்றப்பட்டு இருந்தேன். அம் மாற்றத்தை நிறுத்துமாறு வடமாகாண அதிகாரி அவர்களை நேரில்கண்டு வேண்டிக் கொள்வதற்காக அவருடைய காரியாலயத்துக்குச் சென்று இருந்தேன். அவரை சந்தித்தபொழுது நெடுங்கேணியில் இருந்து மண்டைதீவுக்குப் போய்வருவதில் உள்ள சிக்கல்களைக்கூறி எனது மாற்றத்தை ரத்துச்செய்யுமாறு கேட்டேன். சேவையின் தேவைநோக்கியே உமை மண்டைதீவுப் பாடசாலைக்கு மாற்றியுள்ளேன். அதனால் மாற்றத்தை நிறுத்தமுடியாது எனக் கூறினார்.

மாற்றத்தை நிறுத்துமாறு கல்வி அதிகாரியோடு வாதாடிக் கொண்டிருந்த அதே நேரத்தில் திருவாளர். செல்லத்தம்பு அவர்கள் கல்வி அதிகாரியைக் காண்பதற்காக அவருடைய அறைக்குள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரவேசித்தார். அவரை வரவேற்ற கல்வி அதிகாரியவர்கள் எனக்கு ஆங்கிலம் தெரியாதெனக் கருதிப்போலும் உங்களுடைய வேண்டுகோளை ஏற்று இந்த ஆசிரியரை மண்டைதீவுக்கு மாற்றினேன். ஆனால் அவர் மாற்றத்தை நிறுத்துமாறு வாதிடுகிறார் என்று ஆங்கிலத்தில் கூறினார். அந் நிலையில் கல்வி அதிகாரியாகிய நீங்கள் என்னை சேவையின் தேவைகருதி மாற்றியது என்பது பொய் என்பதையும் பாராளுமன்ற உறுப்பினரின் வற்புறுத்தலின் பேரில் தான் என்னை மாற்றிஇருக்கிறீர்கள் என்றும் தெரிவித்து அரசியல் காரணத்துக்காக என்னை மாற்றியமையை எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ள முடியாதென அதிகாரி அவர்களுக்குத் தெரிவித்தேன். அந் நேரம் குறுக்கிட்ட பாராளுமன்ற உறுப்பினர் மாற்றத்தை ஏற்கமறுத்தால் அவரை வேலையில் இருந்து நீக்கவேண்டியது தானேஎன அதிகாரிக்குக் கூறினார். அதேநேரம் என்னை நெடுங்கேணியில் இருந்து மாற்றவோ? சேவையில் இருந்து நீக்கவோ பாராளுமன்ற உறுப்பினராகிய உங்களால் முடியாது. ஆனால் அடுத்து வரும் பாராளுமன்றத் தேர்தலில் உங்களைத் தோற்கடிக்க ஆவன செய்வேன். என்று நேரில் கூறிவிட்டு கல்விக்கந்தோரில் இருந்து வெளியேறினேன்.

வெளியேறிய நான் நேரடியாகக் கொழும்புக்குச் சென்று கல்விப்பகுதி உயர் அதிகாரிக்கு, இரண்டு மூன்று வருடங்களுக்குள் பதினாறு முறைகள் எனக்கு அனுப்பப்பட்ட இட மாற்றுக்கடிதங்களைக் காண்பித்து பாராளுமன்ற உறுப்பினரின் தூண்டுதலின் பெயரில் தான் இம் மாற்றங்கள் செய்யப்பட்டன என்பதைத் தெளிவுபடுத்திக் கூறினேன் மாற்றத்தை உடனடியாக நிறுத்துமாறு உயர்அதிகாரி உத்தரவு இட்டார். அத்துடன் எனது மாற்றம் பற்றி ஆசிரியர் சங்கத்திடம் முறையிட்டேன். சங்கச் செயலாளர், கல்விமந்திரி அவர்களோடு தொடர்பு கொண்டு அரசியல் காரணமாக நான் மாற்றப்பட்ட பிரச்சனையைத் தெளிவுபடுத்திக் கூறியுள்ளார். அத்துடன் எக் காரணம் கொண்டும் அரசியல் காரணத்துக்காக என்னை நெடுங்கேணிப் பாடசாலையில் இருந்து மாற்றக்கூடாதென தொடர்புடைய கல்வி அதிகாரிகள் அனைவருக்கும் கட்டளை இட்டு கடிதம்அனுப்பப்பட்டது. அத்துடன் எனது மாற்றநாடகம் முடிவுற்றது. நான் நெடுங்கேணிப்பாடசாலையிலேயே கடமையைத்தொடர்ந்தேன்.

**************



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 14. பலநோக்குக் கூட்டுறவுச் சங்கச் சேவை

1973ம் ஆண்டு நெடுங்கேணி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தின் தலைவராக கூட்டுறவு அதிகாரியால் நியமனம் செய்யப்பட்டேன். பாடசாலைக் கடமையோடு சங்கப்பிரச்சினைகளிலும் கவனம் செலுத்தி செயற்பட்டேன். முதலில் சங்கத்தின் நிதிநிலைபற்றிய அறிக்கையைத் தயாரித்துத் தருமாறு சங்கக்கணக்காளரிடம் கேட்டுப்பெற்றேன். அவ் அறிக்கைப்படி சங்கம் ஐம்பதினாயிரம் ரூபாவரை நட்டத்தில் இயங்குவதாக அவ் அறிக்கைமூலம் தெரியவந்தது. சங்க ஊழியர்கள் அனைவரையும் ஒன்று கூட்டி சங்கத்தை இலாபம்பெறும் நிலைக்கு இட்டுச்செல்வதற்கான ஆக்கபூர்வமான ஆலோசனைகள் ஆராயப்பட்டன. சங்கத்தில் எவ்வாறான ஊழல் மோசடிகளோ களவுகளோ இடம் பெறாதவகையில் சங்க நிர்வாகத்தை சங்கஊழியர்கள் அனைவரும் ஒன்றுபட்டு ஒற்றுமையாக செயற்படுத்தவேண்டும் என்ற கருத்தை வற்புறுத்தி அறிவுரைகூறினேன். சங்க வியாபார நிலைகளை விஸ்தரிக்கும் நோக்கில் உள்ளூர் உற்பத்திப் பொருட்களான நெல் மிளகாய், உழுந்து, ஆகிய விளை பொருட்களை விவசாயிகளிடம் இருந்து கொள்வனவு செய்து கொழும்பில் உள்ள வியாபாரகூட்டுத் தாபனத்துக்கும் மொத்தவியாபாரிகளுக்கும் விற்பனைசெய்து இலாபம் பெறும்முயற்சிகள் ஊக்குவிக்கப்பட்டன. அதனால் சங்கத்தின் நிதிநிலை வளர்ச்சி பெறஆரம்பித்தது.

இக்காலகட்டத்தில் விவசாயிகளினுடைய பொருளாதார நிலையை வளர்ப்பதற்கான ஆய்வரங்கு ஒன்று வவுனியாகச்சேரியில் கூட்டப்பட்டது. இதில் பல்துறை அரசதாபனங்களின் தலைவர்களும் மக்கள்வங்கி தலைவர்அவர்களும் பொது அமைப்புத்தலைவர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் கலந்துகொண்டனர். அக்கூட்டத்திற்கு அரசாங்கஅதிபர் தலைமைவகித்தார். ஒவ்வொரு துறைசார்ந்த தலைவர்களும் அத்துறைசார்பாக விவசாயிகளின் வளர்ச்சிக்குரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிமுறைகளை அவர்களின் துறைசார்ந்த நிபுணத்துவஅறிவின் அடிப்படையில் விரிவாகஎடுத்துக்கூறினார்கள். வருடாவருடம் விவசாயிகளுக்கு பலநோக்குகூட்டுறவுச்சங்கம் மூலம் விவசாயக்கடன் கொடுப்பதைப்பற்றி விரித்துரைத்ததோடு பெருந்தொகைப்பணம் மீட்கப்படாது இருப்பதையும் சுட்டிக்காட்டினார்கள்.இந்நிலையில் அதிகாரிகள் கூறிய கருத்துக்கள் சார்பாக சமூகம் தந்திருக்கும் பொதுஅமைப்பு உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களையும் தெரிவிக்கலாம் எனத் தலைமை வகித்த அரச அதிபர் கூறினார்.

அதனை ஏற்று எனது கருத்துக்களைத் தெரிவித்தபோது நான் கூறியதாவது, "இங்கு ஆராயப்பட்ட விடயங்களில் விவசாயிகளின் முன்னேற்றத்திற்காக வங்கிகள் மூலம் உதவப்படும் கடன்கள் அதிகமாக செலுத்தப்படாமல் இருக்கிறது என்பதும் ஒன்றாகும். இவ் விடயம்பற்றி உயர்அதிகாரிகள் மட்டத்தில் ஓர் தெளிவான ஆய்வு மேற்கொள்ளப்படவேண்டும் என்றுகருதுகிறேன். வருடா வருடம் கடன்பெறக்கூடிய வயதெல்லையை அடைந்த விவசாயிகளுக்கு சங்கங்கள் மூலம் பெருந்தொகைப்பணம் விவசாயப்பணமாக கொடுபடுகிறது. விவசாயிகளும் வருடா வருடம் விவசாயத்தைச் செய்துகொண்டே இருக்கிறார்கள். ஆனால் வங்கிகள் கொடுக்கும் விவசாயக்கடன் மீளச்செலுத்தப்படாமலே இருக்கிறது. விவசாயிகள் வேண்டும்என்று விசமத்தனமாக கடனைத் திருப்பிச்செலுத்தாமல் இருக்கிறார்களா? அல்லது தாம்மேற்கொள்ளும் விவசாயத்தொழில்மூலம் கடனைத்திருப்பிசெலுத்தக்கூடிய அளவுக்குத் தமது தொழில்மூலம் வருமானம் கிடைக்காததால் கடனைதிருப்பி செலுத்த தவறிவிடுகிறார்களா? நானும் ஓர் அதிகளவு நெற்செய்கையைத் தொடர்ந்து செய்து வரும் விவசாயிஆவேன். அவ் அனுபவத்தின் மூலம் நான் அவதானித்த ஒரு முக்கியபிரச்சினையை உங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். அதாவது வன்னிப் பிரதேசத்தினுடைய சுவாத்திய நிலைமாற்றங்களால் வருடாவருடம் சமநிலையிலேயோ அல்லது சமகாலத்திலேயோ போதிய மழைவீழ்ச்சி கிடைப்பதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு வருடத்தில் பெருமழை பெய்து விவசாயச் செய்கையை பாதிக்கிறது. ஒரு வருடத்தில் வறட்சி ஏற்பட்டு மழைவீழ்ச்சி குறைவால் நெற்செய்கை பாதிக்கப்படுகிறது. சில வருடங்களில் அரைகுறை விளைச்சலையே விவசாயிகள் பெறுகிறார்கள். இவ்வாறாக ஓர் 6 ஆண்டுநெல் விளைச்சல் நிலைமையை கணக்கிட்டுப்பார்த்தால் அவ்வாண்டுகளில் விவசாயிகள் செலவும் வரவும் ஐம்பதுக்கு ஐம்பதாகவே இருப்பதை அவதானித்துள்ளேன். இவ்வாறான ஓர் மூலகாரணமே விவசாயிகள் விவசாயக்கடனைத் திருப்பிச் செலுத்தாமல் இருப்பதற்கு உரிய காரணங்களுள் முக்கியமானதாக இருக்கும் எனக்கருதலாம்.

அத்துடன் விவசாயத்துறை அதிகாரிகள் காலநிலை மாற்றங்களை அவதானித்து விவசாயிகளுக்குப் போதுமானஅளவு ஆலோசனைகளையும் அறிவுரைகளையும் வழங்காது இருப்பதும் விவசாயத்தொழிலில் இலாபம் காணப்படாமல் இருப்பதற்கு ஒரு காரணமாக இருக்கலாம். அத்துடன் வன்னிப்பிரதேசத்தில் உற்பத்திசெய்யப்படும் விளை பொருட்களை இலாபம் கிடைக்கக்கூடிய விலைக்கு விற்கக்கூடிய சந்தை வாய்ப்பு இல்லாதிருப்பதும் ஓர் காரணமாகலாம். மேலும் வன்னிப்பிரதேசத்தில் பாவனையில் உள்ள குளங்கள் போதியஅளவு நீரைத்தேக்கக்கூடியதாக புனரமைப்புச் செய்யப்படாமையும். விவசாயிகள் நெல் விளைச்சலில் வீழ்ச்சிகாண்பதற்கான காரணமாகலாம். இவ்வாறான நிலையில் விவசாயிகள் வருடாவருடம் ஒரு சமநிலைவிளைச்சலைப்பெறக்கூடிய நிலையே உருவாகவேண்டும் என்பதே என் கருத்தாகும். அதற்காக பாவனையில் உள்ள குளங்களின் நீர் தேங்கும் நிலையை உயர்த்தக்கூடிய அளவுக்கு அபிவிருத்தி செய்தும் வன்னிப்பிரதேசத்தில் அழிந்துகிடக்கும் ஆயிரக்கணக்கான சிறு குளங்களைப்புனரமைத்தும். விவசாயிகள் வருடாவருடம் இரண்டு மூன்று போக நெற்செய்கை மேற்கொள்ள ஆவன செய்யப்பட்டால் விவசாயிகளின் நிலையில் வளர்ச்சி ஏற்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக் கூட்டத்தில் கருத்துரைத்த கூட்டுறவுத்துறை அதிகாரிகளும் வங்கித்துறை அதிகாரிகளும், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகநிலையில் ஊழல்மலிந்திருப்பதாகவும் மோசடிகள் இடம்பெறுவதாகவும் கருத்துரைத்தனர். அவர்களுடைய கருத்தில் உண்மைகள் இருக்கலாம். ஒரு மனிதனுடைய செயற்பாட்டுக்குக் கிடைக்கின்ற கூலி அவனுடைய சாதாரண வாழ்க்கைச் செலவை ஈடுசெய்யப் போதுமானதாக இருக்கவேண்டும். அவ்வாறு இருந்தால்தான் அவருடைய செயற்பாட்டிலும் ஒழுங்கும் பற்றும் இருக்கும். இந்நிலையில் பலநோக்குக்கூட்டுறவுச்சங்க ஊழியர்களின் மாதாந்த வேதனஅளவை அவதானித்தால் அவர்களுடைய வேதனம் அவர்களின் அரைமாதச் செலவுக்கே போதாது இருப்பதைக்கண்டறியலாம். ஆகவே சங்கஊழியர்களின் வருமானத்தை அதிகரிக்க ஆவன செய்யவேண்டும்.

ஊழல்நிகழ்வுகள் கூட்டுறவுத்துறையில் மாத்திரம் நிகழ்வதாகஇல்லை. சகல துறைகளிலும் ஊழல்மோசடிகள் நிகழ்வதாகவே பேசப்படுகிறது. இந்நிலையை இல்லாது ஒழிப்பதற்கு அரசு தரப்பால் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றன. ஆனாலும் நிலைமை சீரடையவில்லை இதுபற்றி ஓர் தமாசான கருத்தைக்கூற விரும்புகிறேன். அதாவது இலங்கையில் வாழ்கின்ற அனைத்து மக்களின் மனங்களிலும் தனக்குதனக்கு என்று சிந்திக்கின்ற உணர்வை அழித்து இவைஅனைத்தும் எமக்கு என்று சிந்திக்கின்ற உணர்வை ஏற்படுத்தக்கூடிய ஊசிமருந்து கிடைக்குமானால் அதனைப்பெற்று சகல மக்களுக்கும் ஏககாலத்தில் செலுத்துவது ஊழலை ஒழிக்கச்சிறந்த வழியாக அமையலாம் எனக் கருதுகிறேன்." என்று எனது உரையைமுடித்தேன்.

**************



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 15. பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கிராமியவங்கிக் கொள்ளை

1974ஆம் ஆண்டு முற்பகுதியில் ஒரு நாள் எனது சொந்தப்பிரச்சனை காரணமாக கொழும்புக்குச் சென்றுஇருந்தேன். கொழும்பில் பார்க்கவேண்டிய கருமங்களை முடித்துக்கொண்டு நெடுங்கேணிக்கு வருவதற்கு ஆயத்தமானேன். கொழும்பில் இருந்து இரவுவேளைப்புகையிரதத்தில் வருவதானால் அப்புகையிரதம் நடுச்சாமத்திற்கு முன்பின்னாகத்தான் புளியங்குளம் புகையிரத நிலையத்தை வந்தடையும். அந்நேரத்தில் புளியங்குளத்தில் இருந்து நெடுங்கேணிக்கு எவ்விதபோக்குவரத்து வசதிகளும் இல்லை. அதனால் நெடுங்கேணியில் உள்ள ஓர் வாடகைக்கார்ச்சாரதிக்கு அன்று இரவு புளியங்குளம் புகையிரத நிலையத்திற்கு என்னை ஏற்றிச்செல்வதற்கு வருமாறு செய்தி தெரிவித்துவிட்டு புகையிரதநிலையத்தில் வந்துஇறங்கினேன். கார்ச் சாரதி என்னை ஏற்றிச்செல்வதற்கு காத்திருந்தார்.

காரில் ஏறிச்செல்லும்போது சிறிது நேரத்தின்பின் கார்ச்சாரதி நெடுங்கேணி கிராமிய வங்கியில் கொள்ளை நடைபெற்ற அதிர்ச்சிதரும் தகவலைக் கூறினார். அச் செய்தியால் உண்மையாகவே மிகுந்தகவலைக்கு உள்ளானேன். அவ் அதிர்ச்சியோடு நேரில் சங்கத்திற்கேபோய் இறங்கினேன். கொள்ளை அன்று இரவு 8.00ல் இருந்து 9.00 மணி வரையில்தான் நடைபெற்றது. கொள்ளை நடைபெற்றசம்பவத்தை சங்க ஊழியர்கள் முல்லைத்தீவு பொலிஸில் முறைப்பாடு செய்ததால் நான் போவதற்குமுன்பே பொலீஸ் உத்தியோகத்தர்கள் சங்கத்துக்கு வந்து விசாரணைகளை ஆரம்பித்திருந்தனர். வங்கியிலுள்ள இரும்புப்பெட்டி திறப்புகளால் திறக்கப்பட்டு கொள்ளை நடைபெற்று இருந்தது. அதனால் பொலிஸ் முதலில் சங்க ஊழியர்களையே சந்தேகம் கொண்டு அவர்களைத் தனித்தனியாக விசாரணை செய்தனர். அவ்வாறு இரவிரவாக விசாரணை நடைபெற்றது. மறுநாள் காலை 10 மணியளவில் உதவி பொலிஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியட்சகரும் நீதிபதியவர்களும் சங்கத்திற்கு வருகைதந்து கொள்ளைச்சம்பவம் சார்பில் மேலோட்டமாக விசாரணைகளைச் செய்தனர்.

அதேநேரம் சங்கத்தலைவராகிய என்னைத் தனிமையான ஓர் இடத்துக்கு அழைத்துச்சென்று "குறிப்பிட்ட கொள்ளைச்சம்பவம் சார்பாக யார்மேலாவது உங்களுக்குச் சந்தேகம் ஏதும் இருக்கிறதா?" என்று கேட்டனர். "உண்மையாகவே எனக்கு குறிப்பிட்ட யார்மேலும் சந்தேகம் இல்லை" என்றுதிட்டவட்டமாக கூறினேன். விசாரணை தொடர்ந்து சில தினங்களாக நடைபெற்றன. எவ்விதமான துப்புகளும் கிடைக்காத நிலையில் சகல ஊழியர்களின் கையடையாளங்களையும் அங்கு கூலிவேலைபுரிந்தவர்களின் கையடையாளங்களையும் எடுத்துச் சென்றனர். அத்துடன் வங்கிஇரும்புப்பெட்டியில் பதிவாகிஇருந்த கைவிரல் அடையாளங்களையும் எடுத்துச்சென்று அவற்றைப் பரிசீலணை செய்து அறிக்கைபெறுவதற்காக கொழும்பிற்கு அனுப்பியிருந்தனர்.

இந்நிலையில் பொலிஸ் அத்தியட்சகர் அவர்கள் பள்ளிக்கூடத்துக்கு வருகைதந்து என்னைக்கண்டு "குறிப்பிட்டகொள்ளை இரும்புப்பெட்டியின் திறப்புகளால் திறக்கப்பட்டு நடைபெற்று இருக்கிறது. அதனால் வங்கிமுகாமையாளரையும் காசாளரையும் முன்னிலையில் வைத்து விசாரணை செய்யவேண்டும்." என வேண்டிக்கொண்டார். அவருடைய வேண்டுகோளை ஏற்று உடனடியாக வங்கி முகாமையாளரையும் காசாளரையும் பாடசாலைக்கு அழைத்து பொலீஸ் அத்தியட்சகரின் விசாரணைக்கு உட்படுத்தினோம். "வங்கிக்கொள்ளை திறப்பினால் வங்கிஇரும்புப்பெட்டி கொள்ளையடிக்கப்பட்டு இருக்கிறது. "ஆகவே வங்கித்திறப்பை சட்டப்படி பாதுகாக்க வங்கிமுகாமையாளரும் காசாளரும் தவறி இருக்கிறார்கள்." என்று கூறியபொலீஸ் அத்தியட்சகர் ஆகவே திறப்புக்கள் கள்ளருடைய கைக்கு எப்படிக் கிடைத்தன என்பதைச்சரியாக அறிந்தால்தான் கொள்ளைபற்றி பொலீஸார் துப்புத்துலக்கமுடியும். ஆகவே முகாமையாளரும் காசாளரும் திறப்புக்கள் எவ்வாறுகையாளப்பட்டன. என்பதை எனக்குச் சரியாகத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிவிக்கவேண்டும்'' என்று முகாமையாளரையும் காசாளரையும் கேட்டுக்கொண்டார்.

முகாமையாளரும் காசாளரும் ''சங்கத்தில் வேலைமுடித்து வீடுதிரும்பியநாங்கள் வங்கித்திறப்புகளை நாங்கள் வழக்கமாகவைக்கும் பெட்டிக்குள்வைத்துப் பூட்டிவிட்டுச் சினிமாப்படம் பார்க்கச் சென்றிருந்தோம் கள்வன் வீட்டுக்கதவை உடைத்து, உட்புகுந்து பெட்டிப்பூட்டுகளையும் உடைத்து, திறப்புகளை எடுத்துச் சென்றுள்ளான்.'' என்று கூறினர். அவர்கள் கூறியதை நம்பாத அத்தியட்சகர் ''நீங்கள் பொய்பேசுகிறீர்கள் திறப்புக்கள் மிகஇலகுவாக கள்வன் கைக்கு எப்படிக் கிட்டியது என்ற உண்மையைச் சரியாகச் சொல்லுங்கள்'' என்று அச்சுறுத்தினார். பெண்களான முகாமையாளரும் காசாளரும் அச்சப்பட்டு அழத்தொடங்கினார்கள். அந்நேரம் குறுக்கிட்ட நான் ''வங்கிச் சட்டப்படி திறப்புகளை உங்களுடைய நேரடிப்பொறுப்பில் வைத்திருக்கத் தவறியதால்தான் கொள்ளை நடைபெற்றிருக்கிறது.'' என்று முகாமையாளருக்கும் காசாளருக்கும் கூறினேன். ''ஆகவே இக்கொள்ளைக்கு நீங்கள் இருவருமே பொறுப்பாளிகள் ஆவீர்கள். நீங்கள் குற்றவாளிகள் அல்ல என்று நிரூபிக்கப்பட வேண்டுமானால் வங்கிக் கொள்ளையை மீட்டாகவேண்டும். அதற்கு நீங்கள் திறப்பைக் கையாண்ட நிலையைச் சரியாக அத்தியட்சகர் அவர்களுக்குக் கூறினால்தான் துப்புத்துலக்கல் நடவடிக்கையைப் பொலீசார் சரியாகச் செய்யமுடியும். ஆகவே நீங்கள் அழுவதால் பயனில்லை. திறப்பை எங்கேவைத்தீர்கள் என்று அத்தியட்சகர் அவர்களுக்குக் கூறியே ஆகவேண்டும்.'' என்று வற்புறுத்தினேன். அந்நிலையில் ''நாங்கள் இருவரும் கையாளும் கைப்பைக்குள் திறப்பைவைத்து அதனை மேசையில் வைத்துவிட்டுப் படம் பார்க்கப் போனோம்.'' எனக்கூறினார்கள். உண்மையைக்கண்டறிய உதவிபுரிந்ததற்காக எனக்கு நன்றி செலுத்திவிட்டு அத்தியட்சகர் வெளியேறினார்.

சில தினங்கள் கடந்தநிலையில் திரு. ஞானேந்திரம் என்ற பொலீஸ் தலைமை அதிகாரியின் தலைமையின் கீழ் காவல்துறையினர் ஆறுபேர் விசேடமாக இந்தக் கொள்ளையைக் கண்டறிவதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெடுங்கேணியிலேயே தங்கியிருந்து செயற்படுமாறு அனுப்பப்பட்டனர். எனது பாடசாலைக்கு முன்புறமாக இருந்த ஒரு வீட்டில் குறிப்பிட்ட பொலீஸ் கும்பல் தங்கியிருந்து விசாரணைகளை மேற்கொண்டது. பொலீசார், சங்க ஊழியர்களே இக்கொள்ளைக்குப் பொறுப்பானவர்கள் என்று சந்தேகம் கொண்டு இருந்தனர். ஆனால் ஆரம்பத்தில் கொள்ளைச் சம்பவத்தில் எனக்கு எவ்விததொடர்பும் இல்லை என்பதை பொலீஸ்அத்தியட்சகர் அறிந்திருக்கிறார் என்பதில் நான் நம்பிக்கை கொண்டிருந்தேன். அவ்வாறானநிலையில் ஒரு நாள் பாராளுமன்ற உறுப்பினரான திரு.செல்லத்தம்பு அவர்கள் நெடுங்கேணிக்கு வருகைதந்து எனது எதிரிகள் என்று நான் கருதியஒரு சிலரோடும் பொலீஸ் தலைமை அதிகாரியோடும் உரையாடிவிட்டுச் சென்றுள்ளார். என்மேல் வெறுப்படைந்திருந்த பாராளுமன்ற உறுப்பினர். இவ் வங்கிக் கொள்ளையில் என்னைத்தொடர்புபடுத்தி எனது செல்வாக்குக்குப் பங்கம் ஏற்படுத்தச் சதிசெய்வார். எனநான் எண்ணியிருந்தேன்.

வங்கிக்கொள்ளையைத் துப்புத்துலக்க வந்த பொலீஸ் தலைமை அதிகாரி, வந்த ஆரம்பத்தில் சங்கத்தின் தலைவர் என்றரீதியில் என்னைக் கண்டு எதுவுமே கேட்காமல் செயற்பட்டார். அதேபோல் நானும் பொலீஸ் தலைமை அதிகாரியைக் கண்டு கதைக்காமலேயே இருந்தேன். திருவாளர் செல்லத்தம்பு வந்து பொலீஸ் அதிகாரியைக்கண்டு கதைத்துவிட்டுப்போன அடுத்தநாள் வங்கிக் கொள்ளையைத் துப்புத்துலக்க வந்திருக்கும் அதிகாரி என்னைக்கண்டு "நான்வந்து சில நாட்கள் கடந்தும் நீங்கள் என்னைக் காண்பதற்கு வராதிருப்பதற்கு என்ன காரணம்" என்று கேட்டார். அதற்குப் பதிலளிக்கும் முகமாக "சங்கத்தில் நடைபெற்ற கொள்ளையை துப்புத் துலக்கவந்த நீங்கள், சங்கத்தின் தலைவராகிய என்னைச் சந்திப்பதில் விருப்பம் கொள்ளாது இருந்தது ஏன் என்பதைக் கூறுவீர்களா?" என்று கேட்டேன். அவர்சிறிது வெறுப்படைந்தவராக விலகிச்சென்றார்.

சில நாட்களின் பின்னர் தினப்பத்திரிகை ஒன்றில் இக் கொள்ளைச்சம்பவம் பற்றி பாராளுமன்ற உறுப்பினர் X.M செல்லத்தம்பு பாராளுமன்றத்தில் கூறிய ஓர் விசேடசெய்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிவந்திருந்தது. அச்செய்தியாவது, "சங்கத்தின் தலைவராக இருப்பவரின் மகள்முறையான ஒருவர் அக்கிராமிய வங்கியில் கடமைபுரிவதாலும், திறப்பால் திறக்கப்பட்டு கொள்ளை நடந்திருப்பதாலும், சங்கத்தின் தலைவருக்கும் கொள்ளைச்சம்பவத்தில் தொடர்பு இருக்கலாம் என பொதுமக்கள் கருதுகின்றனர். ஆகையால் தலைவரையும் தீவிர விசாரணைக்கு உட்படுத்தவேண்டும்." என்று பாராளுமன்றத்தில் பேசியிருந்தார். நான் சந்தேகித்தது போல என்னை அவமானப்படுத்துவதற்குப் பாராளுமன்ற உறுப்பினர் துப்புத்துலக்கும் பொலீஸ் தலைமை அதிகாரியோடு தொடர்பு கொண்டு சதி முயற்சியில் ஈடுபடுகிறார் என்பது தெளிவாகியது. அதனால் நான் உதவிபொலீஸ் அத்தியட்சகரிடம் பாராளுமன்ற உறுப்பினரின் சதிமுயற்சிபற்றிப் புகார்செய்தேன்.

அவர் துரித நடவடிக்கை எடுத்து, துப்புத்துலக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்த திரு.ஞானேந்திரம் என்ற தலைமை பொலீஸ் அதிகாரியை அம்முயற்சியிலிருந்து விலக்கி இடமாற்றம் செய்துவிட்டு திரு.கந்தப்பு என்ற ஓர் தலைமை பொலீஸ் அதிகாரியை அவரின் இடத்திற்கு நியமனம் செய்தார். திரு.கந்தப்பு அவர்கள் துப்பறியும் முயற்சியில் தீவிர ஈடுபாடுகாட்டினார். கொள்ளைச்சம்பவம் சார்பாக சந்தேகமானவர்களிடம் இருந்து எடுக்கப்பட்டு கொழும்புக்கு அனுப்பப்பட்ட கையடையாள அறிக்கை மிக ரகசியமாக திரு கந்தப்பு அவர்களுக்குக் கிடைத்தது. அவ்வறிக்கையின் அடிப்படையில் சங்கத்தில் நாட்டாமையாக கடமைபுரிந்த திரு.தர்மன் என்பவரின் கையடையாளமே வங்கி இரும்புப்பெட்டியில் பதிவாகியிருந்தது. அச்செய்தியை எவருக்கும் கூறாமலேயே குறிப்பிட்ட நபரைகைது செய்யதிட்டமிட்டார்.

குறிப்பிட்ட தர்மன் என்பவர் நெடுங்கேணியில் உள்ள லிங்கம் ஸ்ரோர் என்ற கடையில் கொள்வனவு செய்து குவிக்கப்பட்டிருந்த செத்தல் மிளகாயை சாக்கில் அடைத்துத் தைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்த வேளை தலைமை பொலீஸ் அதிகாரி அவர்கள் திடீரெனக் கடைக்குள் பிரவேசித்து அவனை கைதுசெய்ய முயற்சித்தார். ஆனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் அவரின் பிடியில் சிக்கிக் கொள்ளாமல் தப்பி காட்டுப்பக்கமாக ஓடி மறைந்து விட்டான். சில தினங்களாக காட்டிலேயே மறைந்திருந்த அவனைக் கைதுசெய்ய முடியாமலேயே இருந்தது. அதனால் காட்டில் மறைந்திருப்போரைத் தேடிக்கண்டு பிடிக்கும் பயிற்சி பெற்ற படைப்பிரிவு ஒன்றை வரவழைத்து அவன் மறைந்திருந்த காட்டுப்பகுதியைச் சல்லடைபோட்டுத் தேடத்தொடங்கினார்கள். அதனை அறிந்த கள்வன் ஓர் இரவு ஒரு மரத்தில்ஏறி மறைந்திருந்தான். அவ்வாறு மரத்தில் இருந்தபொழுது நித்திரைதூங்கி நிலத்தில் விழுந்துவிட்டான். அதனால் அவனின் ஒரு காலில் கடுமையான காயம் ஏற்பட்டது. அதனால் அன்று இரவே இரவிரவாக நெடுங்கேணியில் இருந்து ஒட்டுசுட்டான் பாதைவழியாக மாங்குளம் சென்று கொழும்புக்குப் போக முயன்றான்.

காலில் ஏற்பட்ட வலி தாங்கமுடியாமல் அதற்கு வைத்தியம் செய்வதற்காக வவுனியாவை அடுத்துள்ள ஈரப்பெரியகுளம் என்னும் இடத்தில் எலும்பு முறிவு வைத்தியம் செய்யும் ஓர் சிங்கள வைத்தியரிடம் சிகிச்சைபெறச் சென்றிருந்தான். அவன் அங்கு தங்கியிருக்கும் செய்தியை அறிந்த பொலீஸ்தலைமை அதிகாரியவர்கள் ஒரு பொலீஸ் குழுவோடு ஈரப்பெரியகுளம் போய் அவன் தங்கியிருந்த இடத்தைச் சுற்றிவளைத்தனர். தன்னைப் பிடிக்கவே பொலீஸ்குழு வந்திருக்கிறது. என்பதைத் தெரிந்து கொண்ட கள்வன் அங்குள்ள தந்திரிமலைக் காட்டுப்பகுதியை நோக்கி ஓடியிருக்கிறான். அவனைப் பின்தொடர்ந்த பொலீஸ் குழுவால் அவனைப் பிடிக்க முடியவில்லை. ஆனால் அவன் ஓடிய பாதையில் உள்ள ஒரு கற்பாறை இடைவெளிக்குள் ஒரு பிளாஸ்ரிக் போத்தல் இருப்பதைக்கண்டு அதனை எடுத்துத் திறந்து பார்த்தபொழுது அதற்குள் சங்கத்தில் கொள்ளையடித்த பணம் அடைத்து வைக்கப்பட்டிருந்ததைக் கண்டறிந்தனர். அதனால் துப்பறியும் முயற்சியில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்தனர்.

சில நாட்களின் பின்னர் குறிப்பிட்ட கள்வன் A9 வீதியிலுள்ள பணிக்கநீராவி என்ற இடத்தில் அவரின் உறவினர்வீட்டில் இரவுநேரங்களில் தங்கியிருப்பதாக பொலீஸாருக்குத் தகவல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைத்தது. ஒரு நாள் இரவு அந்த வீட்டைப் பொலீஸ்குழு சுற்றிவளைத்து படுக்கையில்வைத்தே அவனைக்கைது செய்தது. அவ்வாறு அவன் படுக்கையில் இருந்தபொழுது பெண்கள் அணியும் சேலை ஒன்றாலேயே தன்னைப்போர்த்துக்கொண்டு படுத்திருந்துள்ளான். கைது செய்த கள்வனிடம் விசாரணை மேற்கொண்ட பொலீஸார் கொள்ளையடிக்கப்பட்ட நகைகளைப்பற்றி விசாரித்த பொழுது நெடுங்கேணியில் உள்ள தனது வீட்டிற்கு அருகாமையில் உள்ள காட்டுக்குள் நிலத்தில் புதைத்து வைத்திருப்பதாகக் கூறியுள்ளான். அவனுக்குக் கைவிலங்கு கால்விலங்கு இட்டு மிகப்பாதுகாப்போடு நெடுங்கேணிக்கு அழைத்துச்சென்று நகைகள் புதைக்கப்பட்டிருந்த இடத்தைக் காண்பிக்குமாறு கேட்டனர். அவன் கூறியபடி நகைபுதைத்துவைத்த இடத்தைச்சரியாகக் காட்டியுள்ளான். அக்கிடங்கைத் தோண்டிய போது ஓர் உரப்பைக்குள் நகைமுழுவதையும் வைத்து சடம்பால் சுற்றிக்கட்டி புதைத்திருந்தான்.

அந்நிலையில் கொள்ளையடிக்கப்பட்ட பணம் நகை என்பவற்றுடன் வவுனியா நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தினர். அவனை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டநீதிபதி தொடர்ந்து விசாரணையை நடத்தி முடிவில், அவனைக் குற்றவாளியாகக் கண்டு பத்துவருட கடுழியச் சிறைத்தண்டனை விதித்தார். நீதிமன்றத்தில் வைக்கப்பட்டிருந்த பணமும் நகையும் நீதிமன்ற உத்தரவின்படி சங்கத்தின் தலைவராகிய என்னையும் பொதுமுகாமையாளரையும் அழைத்து நீதிமன்றத்தில்வைத்து S.N.G நாதன் என்ற பொலீஸ் அதிகாரி மூலம் எம்மிடம் கையளிக்கப்பட்டன. நகைகளில் ஓர் அரைப்பவுண் சங்கிலி மாத்திரம் காணாமல்போய் இருந்தது. அதற்குரிய நட்டஈட்டை உரிமையாளருக்குக் கொடுத்ததோடு ஏனையநகைகள் அனைத்தும் கிராமியவங்கி முகாமையாளரிடம் ஒப்படைக்கப்பட்டன. நகை உரிமையாளர்கள் செலுத்த வேண்டிய பணத்தைச் செலுத்தி நகையை மீட்டனர்.

*************



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 16. பாடசாலை வளர்ச்சி

இந்நிலையில் நெடுங்கேணி மகாவித்தியாலயத்தின் வளர்ச்சிக்கான முயற்சிகளைத் தொய்வின்றிச் செய்துவந்தேன். நெடுங்கேணிக்கிராமத்தை அடுத்துள்ள பல கிராமங்களில் இருந்து ஐந்தாம் வகுப்புக்கு மேற்பட்ட வகுப்புகளில் படிப்பதற்கு பல மாணவர்கள் நெடுங்கேணி மகாவித்தியாலயத்துக்கு வந்து சேர்ந்தனர். அதனால் வகுப்பறைக் கட்டடங்கள் போதாமல் இருந்தன. அதனால் அரசு தரப்போடு தொடர்புகொண்டு புதியவகுப்பறை மண்டபம் கட்டுவதற்கு அனுமதி பெறப்பட்டது. அரசு அனுமதித்த நிதியைக்கொண்டு 100அடி x 20 அடி அளவு கொண்ட ஓர் வகுப்பறை மண்டபம் கட்டப்பட்டது.

அவ்வாறு கட்டப்பட்ட கட்டடத்தை அக்காலத்தில் உதவிக்கல்விமந்திரியாக இருந்த B.Y. துடாவை என்பவரை அழைத்து அவரால்அக்கட்டடத்தை திறந்து வைப்பதற்கு முயற்சிக்கவேண்டும் என பெற்றோர் ஆசிரியர் சங்கத்தால் தீர்மானிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் அவருக்கு அழைப்புக்கடிதம் அனுப்பி முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. ஆரம்பத்தில் உதவிமந்திரி அவர்கள் கோரிக்கையைஏற்று கடிதம் அனுப்பினார். உதவி மந்திரியை அழைத்து கட்டிடம் திறக்க மேற்கொள்ளப்பட்ட முயற்சியை ஏதோஒரு வகையில் அறிந்த வன்னி பாராளுமன்ற உறுப்பினர் திரு.செல்லத்தம்பு உதவிமந்திரி அவர்களை நேரில் கண்டு தன்னுடைய தொகுதிக்குள் நடைபெறும் நிகழ்ச்சிகளில் தன்னுடைய அனுமதி இல்லாமல் கலந்து கொள்ள முடியாதெனக் கண்டிப்பாகக் கூறியுள்ளார்.

அதனால் உதவிமந்திரி அவர்கள் தயக்கம் காட்டி தாமதப்படுத்தினார். உதவி மந்திரி அவர்கள் இலங்கை கம்மியூனுஸ்டு கட்சியின் உறுப்பினராவார். நானும் கம்மியூனுஸ்டு கட்சியில் உறுப்பினராகவே இணைந்து செயற்பட்டேன். அதனால் உதவிமந்திரி அவர்கள் பாடசாலைக் கட்டிடத்தைத் திறந்துவைப்பதற்கு முதலில் ஒப்புதல்அழித்ததையும், திரு.செல்லத்தம்பு அவர்களின் தடை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உத்தரவால் தயக்கம்காட்டியதையும் கம்மியூனிஸ்டு கட்சி மத்தியசபைக்குத் தெரிவித்து உதவி மந்திரி அவர்கள்மூலம் பாடசாலைக்கட்டிடம் திறந்து வைப்பதற்கு ஆவன செய்யுமாறு வற்புறுத்திக்கேட்டிருந்தேன். அதன் அடிப்படையில் மத்திய சபை தடைகள் எதனையும் பொருட்படுத்தாது பாடசாலைக்கட்டிடத்தைத் திறப்பதற்கு ஒப்புதல் அளித்து கட்டிடத்தைத் திறந்து வைக்குமாறு உதவிமந்திரி அவர்களை வற்புறுத்தியுள்ளது. அதனை ஏற்று உதவிமந்திரி அவர்கள் கட்டிடத்தைத் திறப்பதற்குத் திகதி குறிப்பிட்டு அனுமதியளித்தார். அவர் குறிப்பிட்ட திகதியில் திறப்புவிழாவை நடத்துவதற்கு அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டன. குறிப்பிட்டதினத்தில் உதவிக்கல்வி மந்திரி அவர்கள் வவுனியாக் கல்விக்கந்தோருக்கு வருகைதந்து அங்குள்ள பிரதம கல்வியதிகாரியோடு இணைந்து நெடுங்கேணி மகாவித்தியாலயத்துக்கு வருகைதந்தார். அவரை வரவேற்று விழா ஆரம்பமானது.

அதிக எண்ணிக்கையான மாணவர்கள் பெற்றோர்கள் அவ்விழாவில் பங்கேற்றனர். ஆரம்பத்தில் குத்துவிளக்கு ஏற்றப்பட்டு ஆசிரியர் ஒருவரின் வரவேற்புரையுடன் புதியபாடசாலைக்கட்டிடம் உதவி மந்திரி அவர்களால் நாடா வெட்டி திறந்துவைக்கப்பட்டது. திறந்து வைத்த உதவிமந்திரி அவர்கள் தொடர்ந்துஉரையாற்றுகையில் "இவ்வாறான ஒரு கிராமப்புறப் பாடசாலையில் ஒரு வகுப்பறைக் கட்டிடத்தைத் திறந்துவைப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்." என்றுகூறி மேலும் "பாடசாலைக்கான வளர்ச்சிக்குரிய விடயங்களை நிறைவேற்றி வைப்பதற்கு ஆவன செய்வேன்." என்றும் தெரிவித்தார். அதனைத் தொடர்ந்து நான் பாடசாலைத் தேவைகள் பலவற்றைச் சுட்டிக்காட்டி உரையாற்றினேன். அதிபர் உதவி மந்திரி அவர்களுடைய வருகைக்கு நன்றி தெரிவித்து உரையாற்றினார். அதன் பின் நடைபெற்ற மதியபோசன விருந்தில் மந்திரி அவர்களோடு வருகைதந்த கல்வி அதிகாரிகள் ஆசிரியர்கள் பெற்றோர்கள் கலந்துகொண்டனர். சகல நிலைகளிலும் விழா மகிழ்ச்சிகரமாக முடிவுற்றது.

விழா முடிவுற்ற சிலமாதங்களுள் பாடசாலையில் இருந்த ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்திசெய்யும் முகமாக வேறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைகளில் இருந்து நெடுங்கேணி மகாவித்தியாலயத்துக்கு ஐந்து ஆசிரியர் வரையில் இடமாற்றம் செய்யப்பட்டனர். அந்நிலையில் பாடசாலையின் செயற்பாடுகள் திருப்திகரமாகஅமைந்தன. அதனால் சுற்றுப்புறக் கிராமங்களில் இருந்து மாணவர் வருகையும் அதிகரித்தது. பாடசாலைவளர்ச்சியை அவதானித்த பெற்றோர். பாடசாலை வளர்ச்சிக்கான முயற்சிகளில் பூரணஒத்துழைப்பு வழங்கி ஆதரவு அளித்தனர். சில மாதங்களின் பின் 1974ஆம் ஆண்டிலே கல்விப்பகுதியால் எனக்கு அதிபராக பதவி உயர்வு அளித்து கடிதம் அனுப்பப்பட்டு இருந்தது.

அந் நேரம் நெடுங்கேணி மகாவித்தியாலயத்தில் நான் முதல்தர தலைமை ஆசிரியராகவும் திருவாளர். அந்தோனிமுத்து என்பவர் அதிபராகவும் கடமை புரிந்து கொண்டு இருந்தோம். அதனால் என்னை வேறு பாடசாலைக்கு அதிபராக கல்விப்பகுதி மாற்றிவிடுமோ என்று பெற்றோர் ஆதங்கப்பட்டனர். அந் நிலையில் பெற்றோர் ஆசிரியர் சங்க உறுப்பினர்கள் கல்வி அதிகாரிகளைப் பேட்டிகண்டு என்னை நெடுங்கேணிப்பாடசாலைக்கு அதிபராக நியமிக்கவேண்டும் என்று வற்புறுத்தினர். அதன் அடிப்படையில் அவ்வேளை அதிபராக கடமையாற்றிக் கொண்டிருந்த திரு.அந்தோனிமுத்து. என்பவரை குமுழமுனைப் பாடசாலைக்கு மாற்றம் செய்து என்னை நெடுங்கேணிப்பாடசாலைக்கு அதிபராய் கல்விப்பகுதி நியமனம் செய்தது. அந் நிலையில் நான் பாடசாலை அதிபராகவும் பலநோக்குக்கூட்டுறவுச்சங்கத் தலைவராகவும் A.P.C தலைவராகவும் எனது கடமைகளைச் சீராகவும் சிறப்பாகவும் தொடர்ந்து செய்து கொண்டுவந்தேன்.

**************



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 17. விவசாய விளைபொருள் அபிவிருத்தி நிலையம் (A.P.C)

1974ஆம் ஆண்டில் இலங்கை எங்கும் விவசாயத்துறையை சிறந்தமுறையில் அபிவிருத்தி செய்வதற்காக அரசாங்கம் இலங்கையின் சகல பிரதேசங்களிலும் விவசாய விளைபொருள் அபிவிருத்தி நிலையங்களை நிறுவியது. அந்நிலையங்கள் மூலம் விவசாயிகளின் தேவைகளை அந்நிலையங்களுக்கு ஊடாக அபிவிருத்திசெய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது. அதன்போது நெடுங்கேணி கிராமத்திலும் ஓர் APC நிலையம் கட்டப்பட்டு அரசாங்க அதிபரால் திறந்துவைக்கப்பட்டது. அந் நிலையத்தின் ஆரம்பத்தலைவராக அரசாங்கம் என்னை நியமித்தது. எனது தலைமையில் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு பிரதான விவசாயிகள் சிலரை அங்கத்தவராகக் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டது. நெடுங்கேணி கிராமத்தைச் சுற்றியுள்ள பல கிராமங்களில் வாழ்ந்த விவசாயிகளின் வளர்ச்சிக்கான முயற்சிகளை மேற்கொள்வதற்கான பிரச்சினைகள் ஆராயப்பட்டு திட்டமிடப்பட்டன.

அதன் அடிப்படையில் சில விவசாயிகளுக்குத் தேவைப்படக்கூடிய நல்லின விதைநெல் மேட்டு நிலப் பயிர்ச் செய்கைக்குரிய விதைநெல்கள் கொள்வனவு செய்யப்பட்டு, குறைந்த விலையில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன. அத்துடன் கிருமிநாசினிகள் களைகொல்லிகள் ஒவ்வொரு விவசாயிக்கும் தேவைப்படக்கூடிய உரவகைகள் என்பனவும் கொழும்பில் கொள்வனவு செய்யப்பட்டு நியாய விலையில் விவசாயிகளுக்கு வழங்கப்பெற்றது. அவ்வாறான செயற்பாடுகளால் விவசாயத்துறையில் பெருவளர்ச்சி ஏற்பட்டதென்று கருதப்பட்டது. மேலும், விவசாயிகள் மத்தியில் வயல்நிலங்களுக்கு நீர்பாய்ச்சும் பொழுது ஏற்படுகிற பிரச்சினைகள் வயல் நிலங்களுக்கு அமைக்கப்படும் வேலிப்பிரச்சனைகள் என்பனவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுமூகமாக தீர்த்துவைப்பதற்கு உரிய ஆலோசனைகளும் வழங்கப்பட்டன. அத்துடன் நெல்விதைக்கும் காலக்கெடு, சூடடிக்கும் காலக்கெடு என்பனவும் விவசாயக்கூட்டங்களில் தீர்மானிக்கப்பட்டன. A.P.C யால் விவசாயம் சம்பந்தமாக தெரிவிக்கப்படும் கட்டுப்பாடுகளை விவசாயிகள் முழுமையாக ஏற்றுச் செயற்பட்டதால் விவசாயத் துறையில் சுமுகமான நிலை நிலவியது.

அவ்வாறு விவசாயிகளால் உற்பத்திசெய்யப்படும் நெல், உத்தரவாதவிலைப்படி நெடுங்கேணி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தால் கொள்வனவு செய்யப்பட்டது. ஏறக்குறைய தொடர்ந்து மூன்று வருடங்களாக A .P. C தலைவராக இருந்து என்னால் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளை விவசாயிகள் அங்கீகரித்து ஒத்துழைப்பு வழங்கினர். மூன்று வருடங்களாக மேற்கொண்ட வியாபார நடவடிக்கைகளால் மதிப்பிடக்கூடிய இலாபம் A.P.C க்கு கிடைத்தது. A.P.C யின் முயற்சிகளை, வியாபார விடையங்களைச் செயற்படுத்துவதற்கென A.P.C யின் எழுது வினையராக நெடுங்கேணி வாசியான V.குகராசா என்பவரை நியமனம்செய்திருந்தோம். அவரும் ஒரு பெரிய விவசாயியே ஆவார். அதனால் விவசாயிகள் மத்தியில் ஏற்படும் பிரச்சனைகளை அனுபவரீதியாகத் தீர்த்துவைப்பதில் முன்நின்று முயற்சித்தார். அத்துடன் வியாபார நடவடிக்கைகளை நேர்மையாகவும் கட்டுப்பாடாகவும். செய்ததன்மூலம் A.P.C யின் நிதிநிலையை உயர்த்துவதற்கு உதவிசெய்தார். இந் நிலையில் பாடசாலை விடயங்களுக்கும், பலநோக்குக் கூட்டுறவுச் சங்க செயற்பாடுகளுக்கும் A.P.C யின் நடவடிக்கைகளுக்கும் தலைமைதாங்கி செயற்பட்டதால் கிராமவாசிகளின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவனாகக் கணிக்கப்பட்டேன்.

************



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 18. அரசியல் விவகாரங்கள்

மேற்கூறியவாறு நான் அதிபராகக் கடமைபுரிந்து கொண்டிருந்த போது 1977ம் ஆண்டுக்குரிய பொதுத்தேர்தல் சம்பந்தமான முயற்சிகள் அரசு தரப்பால் ஆரம்பிக்கப்பட்டன. முதலில் சில பாராளுமன்றத் தொகுதிகள் பிரித்தமைக்கப்பட்டதோடு சில தொகுதிகளோடு சில பிரதேசங்களும் புதிதாகச் சேர்க்கப்பட்டன. அம்முயற்சியைச் செய்வதற்கு அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட செயற்குழுவில் பாராளுமன்ற உறுப்பினர் திரு.செல்லத்தம்புவும் இணைக்கப்பட்டிருந்தார். அவருடைய ஆலோசனைப்படி வவுனியாத் தொகுதியும் முல்லைத்தீவுத் தொகுதியும் நிறுவப்பட்டதோடு முன்பு வேறு தொகுதிகளோடு இணைக்கப்பட்டிருந்த துணுக்காய் பாண்டியன்குளம் பிரதேசங்கள் முல்லைத்தீவுத் தொகுதியோடு இணைக்கப்பட்டன. அதனால் முல்லைத்தீவுத் தொகுதியின் வாக்காளர் தொகை ஏறக்குறைய 20000 வரையில் இருந்தது.

1977ம் ஆண்டு தேர்தலுக்கு முன்பு வெவ்வேறு கட்சிகளில் தேர்தலில் போட்டியிட்ட தமிழ்ப்பிரதிநிதிகள் அனைவரும் தமிழர் விடுதலைக் கூட்டணி என்ற ஓர் அரசியல் கட்சி அமைப்பை உருவாக்கி அந்த அமைப்பின் தலைமையின் கீழ் வடக்கு கிழக்கு மாகாணத்தில் உள்ள தமிழ் பேசும் மக்களின் தொகுதிகள் அனைத்திலும் தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர் என்ற வகையில் தான் போட்டியிட வேண்டுமென தீர்மானிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் தமிழ்ப் பிரதேச தேர்தல் தொகுதிகளில் 1977ம் ஆண்டு யார்? யாரை? வேட்பாளர்களாக நியமனம் செய்வதென்ற ஆய்வுகளும் ஆலோசனைகளும் தமிழர் விடுதலைக் கூட்டணியால் மேற்கொள்ளப்பட்டன. அந்நிலையில் முல்லைத்தீவு தொகுதிக்கு திருவாளர் செல்லத்தம்பு அவர்களை வேட்பாளராகவும் வவுனியா தொகுதிக்கு முந்திய தேர்தலில் தோல்வியுற்று இருந்த திரு.தா.சிவசிதம்பரம் அவர்களை வேட்பாளராகவும் நியமிப்பதற்கான ஆரம்ப ஆலோசனைகள் நடைபெறுவதாக செய்தி வெளியாகியிருந்தது. அச்செய்தி அறிந்த முல்லைத்தீவு தொகுதி வாக்காளர்களில் பலர் திருவாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லத்தம்புவை வேட்பாளராக நியமனம் செய்வதை ஏற்றுக்கொள்ள முடியாதென கூட்டணித் தலைமைப் பீடத்துக்கு முறையிட்டனர். ஆனால் கூட்டணித் தலைமைப்பீடம் உடனடியாக முடிவேதும் தெரிவிக்காமல் காலம் கடத்தி வந்தது. அந்நிலையில் தா.சிவசிதம்பரம் அவர்களின் சொந்த ஊர் தண்ணீர் ஊற்று கிராமமாகையால் அவரை முல்லைத்தீவுக்கே வேட்பாளராக நியமிக்க வேண்டும் என்று கூட்டணித் தலைமைப் பீடத்தைக் கோரியதோடு திரு. சிவசிதம்பரம் அவர்களையும், முல்லைத்தீவு தொகுதி வாக்காளர்கள் குழுக்களாகச் சென்று பேட்டி கண்டு நீங்கள் முல்லைத்தீவு தொகுதிக்குத் தான் வேட்பாளராக நியமனம் பெறவேண்டும் என்று வற்புறுத்தினர்.

இவ்விடயத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைமை தங்கள் முடிவில் திட்டவட்டமான பதில் கூறாமல் காலம் கடத்தினர். இந்நிலையில் அதிபராக வேலை புரிந்து கொண்டிருந்த நானும் செல்லத்தம்புவை முல்லைத்தீவுத் தொகுதிக்கு வேட்பாளராக நியமிப்பதை ஆட்சேபித்ததோடு திருவாளர் சிவசிதம்பரத்தையும் முல்லைத்தீவு தொகுதிக்கே வேட்பாளராக நியமனம் பெற வேண்டும் என வற்புறுத்தினேன். தேர்தல் நெருங்கிய கட்டத்தில் முல்லைத்தீவு வவுனியாத் தொகுதி வேட்பாளர் தெரிவில் எவ்வித மாற்றங்களும் நிகழாது என்பதை உணர்ந்த முல்லைத்தீவுத் தொகுதி வாக்காளர், திருவாளர் செல்லத்தம்பு அவர்களை எதிர்த்துப் போட்டியிட யாராவது ஒருவரை சுயேட்சை வேட்பாளராக நியமிக்க வேண்டுமென தீவிரமாகச் செயற்பட்டனர். அத்தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர்களையே தமிழ்ப் பிரதேச அனைத்துத் தொகுதிகளிலும் தமிழ் மக்கள் ஆதரிக்க வேண்டுமென்ற ஓர் எழுச்சிக் கருத்து தமிழ் மக்கள் சார்பில் உருவாக்கப்பட்டிருந்தது. அதனால் முல்லைத்தீவுத் தொகுதியில் ஒரு சுயேட்சை வேட்பாளராக ஒருவர் வெற்றி பெற முடியுமா? என்ற ஒரு சந்தேக உணர்வு நிலவியதால் திரு செல்லத்தம்புவை எதிர்த்துப் போட்டியிட ஒருவரும் முனைப்புக் கொள்ளவில்லை.

இந்நிலையில் பெரும்பாலான வாக்காளர்கள் என்னைப் பேட்டி கண்டு 1977ம் ஆண்டு தேர்தலில் முல்லைத்தீவுப் பகுதியில் சுயேட்சை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேட்பாளராகப் போட்டியிடுமாறு வற்புறுத்தினர். முன்பு ஒரு கட்டத்தில் யாழ்ப்பாணம் கல்விக் கந்தோரில் வைத்து அடுத்த தேர்தலில் "உங்களைத் தோற்கடிக்க ஆவன செய்வேன்" என்று திரு செல்லத்தம்பு அவர்களுக்கு நேரில் நான் சவால் விட்ட சம்பவமும் என்னுடைய மனதில் உறுத்திக் கொண்டிருந்தது. அந்நிலையில் ஐம்பத்திரண்டு வயதில் அதிபர் சேவையில் இருந்து விலகி அரசியலில் ஈடுபடுவது என்னை எவ்வாறு பாதிக்கும் என்ற ஓர் ஆதங்கமும் எனது மனதை உறுத்தியது. அந்நிலையில் முல்லைத்தீவு வாக்காளரின் வற்புறுத்தலுக்கு அடிபணிந்து செல்லத்தம்புவை எதிர்த்துப் போட்டியிட முடிவு செய்தேன். அதனால் அதிபர் சேவையில் இருந்து ஓய்வு பெறுவதற்குரிய கடிதத்தை தலைமைக் கல்விக் கந்தோருக்கு அனுப்பி வைத்தேன். கல்வி தலைமைப் பணியகத்தில் இருந்து ஓய்வு பெறுவதற்கான கடிதம் உரிய காலத்தில் கிடைத்தது. அந்நிலையில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திலும் A.P.C யிலும் வகித்த தலைமைப் பதவிகளை ராஜினாமா செய்து விட்டு, தேர்தல் பிரசார நடவடிக்கையில் இறங்கினேன். தண்ணீர் ஊற்றில் திரு. இராசசேகரம் என்பவருடைய வீட்டை தேர்தல் பிரசார தலைமையகமாக அமைத்து அங்கு குடியேறி பிரசார நடவடிக்கைகள் சார்பாக திட்டமிட்டு முயற்சிகளை ஆரம்பித்தேன்.

முல்லைத்தீவுத் தொகுதியின் பரந்த பிரதேசத்தில் ஆங்காங்கு மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றிருந்த பெரியார்கள் பலரை ஒன்று கூட்டி தேர்தல் சம்பந்தமாக பிரகடனப்படுத்தப்படவேண்டிய கொள்கை விளக்கங்களைப் பற்றி கலந்துரையாடப்பட்டது. அதன் அடிப்படையில் ஒரு தேர்தல் விளம்பரம் பிரசுரிக்கப்பட்டது. அவ்விளம்பரத்தில் கூறப்பட்டதாவது, "எனது அன்பிற்கும் மதிப்பிற்கும் உரியவர்களான முல்லைத்தீவுப் பகுதி வாக்காளப் பெருமக்களே! அனைவருக்கும் என் அன்பு வணக்கம். நான் ஓர் ஆசிரியனாக பல வருடங்கள் சேவையாற்றி கடந்த 1974ம் ஆண்டில் தான் அதிபராக பதவி உயர்வு பெற்று மூன்று வருடங்கள் ஆகின்றன. இந்நிலையில் எனது வயது ஐம்பத்திரண்டு ஆகும். ஆகவே மேலும் எட்டுப்பத்து வருடங்கள் அதிபராக சேவையாற்றினால் போதிய சம்பள உயர்வுகளைப் பெற்று மகிழ்ச்சிகரமாக ஓய்வு பெற்று வாழலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நிலையில் எனது சேவையில் இருந்து விலகி அரசியலில் ஈடுபட்டு ஓர் அரசியல் வாதியாக புகழ் பெற வேண்டும். என்ற எந்தவிதமான ஆவலும் எனக்கு இல்லை. ஆனால் கடந்த காலத்தில் எமது பாராளுமன்ற உறுப்பினராக மக்களால் தெரியப்பட்டு சேவையாற்றிய திருவாளர் செல்லத்தம்பு அவர்கள் தன்னைத் தெரிவு செய்த வாக்காளரை மதித்து அன்புடன் அவர்களை அரவணைத்து அவர்களின் ஆலோசனைகளைப் பெற்று தொகுதியின் வளர்ச்சிக்கு வேண்டிய முயற்சிகளை மேற்கொள்ளாமல் தன் இச்சைப்படி தான் செய்வது அனைத்தும் சரி என்ற மாதிரியான தலைக்கனத்தோடு செயற்பட்டமையால் மீண்டும் அவர் தங்கள் பிரதிநிதியாக தெரிவு செய்யப்படக்கூடாது என்று இத்தொகுதியின் பெரும்பாலான வாக்காளர்கள் கருதுகிறார்கள். அதனால் தான் தற்போதைய தேர்தலில் அவர்களுக்கு ஒரு பிரதிநிதியை நியமனம் செய்து மக்களை மதித்து செயற்படும் ஒரு பிரதிநிதியை தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினராக ஆக்கவேண்டும் என்று கொந்தளிக்கிறார்கள்.

இந்நிலையில் அவ்வாறான ஒரு பிரதிநிதியை தொகுதிவாழ் மக்கள் மத்தியில் இருந்து ஒருவரை தெரிவு செய்து வேட்பாளராக நியமிப்பதற்கு மக்கள் மேற்கொண்ட முயற்சியில் வெற்றி பெறுவது சிக்கலாகவே இருந்தது. அதற்கான அடிப்படைக் காரணமாக அமைந்திருந்தது அத்தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளராக நியமிக்கப்படுபவருக்கே சகல தமிழ் தொகுதிகளிலும் தமிழ் வாக்காளப் பெருமக்கள் வாக்களிக்க வேண்டும். என்ற தமிழர் விடுதலைக் கூட்டணியின் கொள்கையாக அமைந்திருந்தமையே ஆகும். அதனால் தொகுதிவாழ் வாக்காளப் பெருமக்கள் பலர் என்னை அணுகி கட்டாயமாக திருவாளர் செல்லத்தம்புவை எதிர்த்துப் போட்டியிட முன்வருமாறு வற்புறுத்தினார்கள். வேண்டுமானால் உங்களை அடுத்த தேர்தலில் தோல்வியுறச் செய்வதற்கு ஆவன செய்வேன் என்று முன்பொருமுறை திருவாளர் செல்லத்தம்புவுக்கு நேரடியாக சவால்விட்ட சம்பவமும் நான் தேர்தலில் வேட்பாளராக நிற்பதற்கு இணக்கம் தெரிவிக்க என்னைத் தூண்டியது. அந்நிலையில் தான் நான் வேட்பாளராக முன் வந்திருக்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிப்பிற்குரிய வாக்காளர்களே! நான் முல்லைத்தீவுத் தொகுதியில் உள்ள ஒரு குக்கிராமத்தில் பிறந்து யாழ்ப்பாணம் சென்று படித்து ஓர் ஆசிரியனாக இலங்கையின் பல பாகங்களிலும் சேவை செய்து இறுதிக் கட்டத்தில் நெடுங்கேணி மகாவித்தியாலயத்தில் அதிபராகக் கடமைபுரிந்து என் சேவையை முடித்திருக்கிறேன். இக்காலகட்டத்தில் எனது பார்வையிற்பட்ட இலங்கையின் ஏனைய பிரதேசங்கள் பெற்றிருந்த வளர்ச்சி நிலைகளை இந்த வன்னிப்பிரதேச வளர்ச்சி நிலைகளோடு ஒப்பிட்டு நோக்கி வன்னிப்பிரதேசம் எவ்வித வளர்ச்சியையும் பெறாமல் இருந்த நிலையால் மாபெரும் வேதனை அடைந்தவன் என்பதை நீங்கள் பூரணமாக நம்புவீர்கள் என்றே கருதுகின்றேன். கடந்த காலத்தில் இத்தொகுதிவாழ் மக்கள் பலரோடு வன்னி நிலைபற்றிக் கலந்துரையாடும் போதெல்லாம் நான் தெரிவித்த கவலையை மறந்திருக்கமாட்டீர்கள் என்றே நம்புகிறேன்.

ஆகவே இன்று நான் வேட்பாளராக முன் நிற்பதற்கு செல்லத்தம்புவைத் தோற்கடிக்க வேண்டும் என்பது மாத்திரம் கருத்தல்ல. இத்தொகுதி மக்களையும் அவர்களினுடைய வாழ்க்கை நிலைகளையும் வளர்ச்சியடைந்த ஏனைய பிரதேச மக்களின் தரத்திற்கு உயர்த்த வேண்டும் என்பதே என் முக்கிய குறிக்கோளாகும். ஒவ்வொரு தேர்தலிலும் வேட்பாளராக முன் வருபவர்கள் தொகுதியின் வளர்ச்சிக்காக ஏதேதோ எல்லாம் செய்வோம் என்று பிரசாரம் செய்வார்கள். வாக்காளர்களின் தேவைகளை எல்லாம் நிறைவேற்றி அவர்களைத் திருப்திப்படுத்துவோம். என்றெல்லாம் முழக்கமிடுவார்கள். இவை எல்லாம் தேர்தல் சம்பிரதாயங்கள் தான். என்னைப் பொறுத்தவரையில் என் இளமைக் காலம் தொடக்கம் வன்னிப்பிரதேச வளர்ச்சி பற்றி சிந்தித்து வேதனைப்பட்ட ஒருவனாகவே உங்கள் முன் நிற்கிறேன். ஆனால் நானும் சம்பிரதாய பூர்வமான பிரசாரத்தில் தான் ஈடுபட்டு இருக்கிறேன். என்று தவறாக யாரும் எண்ணி விடாதீர்கள். என்னுடைய இறுதி மூச்சு இருக்கும் வரை வன்னிப்பிரதேச வளர்ச்சிக்காகவும் மக்களின் நல்வாழ்வுக்காகவும் எனது சக்திக்கு எட்டிய வரையில் என்னென்ன செய்யவேண்டுமோ அவை அத்தனையையும் பற்றுறுதியோடு செய்வேன் என்று ஆத்மரீதியாகவும் உறுதியாகவும் உங்களுக்குக் கூறிக்கொள்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் வாக்காளப் பெருமக்களைக் கௌரவித்து மதித்து அவர்களின் ஆலோசனைகளைப் பெற்றும் நான் செயற்படுவேன். இந்நிலையில் ஒரு முக்கிய பிரச்சினையையும் தெளிவுபடுத்த விரும்புகிறேன். தமிழர் விடுதலைக் கூட்டணியினுடைய, தமிழ் மக்கள் ஏகோபித்து கூட்டணி வேட்பாளருக்கே வாக்களிக்க வேண்டும் என்ற இன ரீதியான அரசியல் கோசத்தை நான் எதிர்க்கவில்லை. அது மாத்திரமல்ல அவர்களினுடைய அக்கொள்கைப் பிரகடனத்தை எனது இளமையில் இருந்து தமிழ் இன நிலைபற்றி எனது உள்ளத்தில் உருவாகிய உணர்வுகளின் அடிப்படையில் தமிழ் இனம் விடிவுபெற தமிழ் மக்கள் ஒன்றுபட்டு செயற்படவேண்டும். என்ற உன்னத கோட்பாட்டை உறுதியாக கடைப்பிடிப்பேன் என்பதையும் உங்களுக்கு தெரியத்தருகிறேன். ஒரு நாடு வளர்ச்சி காண வேண்டுமானால் அந்நாட்டுமக்கள் மத்தியில் கல்வி வளர்ச்சி அதிகரிக்கப்பட வேண்டும்.

இன்றைய நிலையில் வன்னித் தொகுதியில் குறிப்பிடக் கூடிய மத்திய மகாவித்தியாலயங்களே நிறுவப்பட்டு இருக்கின்றன. கிராமப்புறப் பிரதேசங்களில் ஆங்காங்கு பாடசாலைகள் நிறுவப்பட்டு இருந்தாலும் மேல் வகுப்புவரை படிப்பதற்கு உரிய வாய்ப்புக் குறைவாகவே உள்ளது. அதனால் பல கிராமங்களின் மத்தியில் ஆங்காங்கு மகாவித்தியாலயங்கள் உருவாக்கப்பட வேண்டும். அதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட வேண்டும். இத்தொகுதிவாழ் மக்கள் அனைவரும் விவசாயிகளே ஆவர். ஆகவே விவசாயத்துறை சார்ந்த அனைத்து விடயங்களிலும் அபிவிருத்தி காணவேண்டும். தற்பொழுது ஒரு சில நீர்த்தேக்கங்கள் உருவாக்கப்பட்டு இருக்கின்றன. ஆனால் பரந்து விரிந்துள்ள கிராமப்புறக் குளங்கள் அதிக நீரைத்தேக்கக் கூடியளவுக்கு திருத்தியமைக்கப்படவில்லை. அத்துடன் ஆயிரக்கணக்கில் அழி குளங்களாக உள்ள சிறு குளங்களைப் புனரமைத்து நீரைத் தேக்க வேண்டும். அத்துடன் விவசாயச் செயற்பாடுகள் பற்றிய விவசாயிகளின் அறிவு நிலையையும் வளர்த்து அதனால் விவசாயிகள் விவசாயத் தொழிலில் இலாபம் பெற்று வளர்ச்சி பெற ஆவன செய்யப்பட வேண்டும். எத்தனையோ வருடங்களை வரலாறாகக் கொண்டுள்ள வன்னிப்பிரதேச கிராமப்புற பாதைகள் அனைத்துமே மண் பாதைகள் ஆகவே அமைந்திருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பிரதேச வளர்ச்சிக்கு மக்களின் போக்குவரத்துப் பிரச்சினைகள் தீர்க்கப்படவேண்டும் என்ற கருத்து முக்கியமானது. இவ்வாறு எந்தெந்தத் துறைகளை எடுத்து ஆராய்ந்தாலும் அத்துறைகளின் வளர்ச்சி நிலை அடிமட்டத்திலேயே இருக்கிறதை நாம் அறிவோம். வன்னிப்பிரதேச கல்வி வளர்ச்சி நிலை அடிமட்டத்தில் இருந்த காரணத்தால், வன்னிப்பிரதேச மக்கள் தொகைக்கேற்ற விகிதாசாரத்தில் வன்னி மக்கள் மத்தியில் இருந்து அரச சேவைக்கு அரச உத்தியோகத்தர்கள் உள்வாங்கப்படவில்லை. வன்னிப் பிரதேசத்தின் உத்தியோகத்தர்களாகச் சேவை புரிந்தவர்கள் பெரும்பாலானோர் வெளிமாவட்டத்தைச் சேர்ந்தவர்களாகவே இருக்கிறார்கள் என்பதனையும் அனைவரும் அறிவர். மதிப்புக்குரிய வாக்காளர்களே! இந்நிலையில் நான் பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டால் மேற்கூறிய குறைபாடுகள் சார்பாக முக்கிய கவனம் செலுத்தி செயற்படுவேன். என்பதை உங்களுக்கு உறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறேன்."

எனது தேர்தல் விஞ்ஞாபனத்தை ஆதரித்து பல வாக்காளப் பெருமக்கள் பல பிரசுரங்களை மக்கள் மத்தியில் விநியோகித்தனர். அத்தோடு தொகுதி மக்கள் தேர்தல் கூட்டங்களை நடத்துவதற்கேற்ற ஒழுங்குகளை மேற்கொண்டனர். தேர்தல் தொகுதியில் பரவலாக ஆங்காங்கு பிரசாரக் கூட்டங்கள் நடைபெற்றன. அக்கூட்டங்களில் அப்பகுதிவாழ் முக்கியஸ்தர்கள் பங்கு பற்றி என்னை ஆதரித்து உரை நிகழ்த்தினார்கள்.அத்துடன் நானும் வீடு வீடாகச் சென்று ஆதரவு கோரி பிரசாரம் செய்தேன். பிரசாரம் ஆரம்பித்து ஒன்றிரண்டு கிழமைகளுக்குள்ளேயே என் சார்பில் வாக்காளர்களின் ஆதரவு அதிகரித்து இருப்பதாக மக்களால் அபிப்பிராயம் பரிமாறப்பட்டது. என் சார்பாக நடந்த எந்தவொரு தேர்தல் கூட்டத்திலும் கூச்சல் குழப்பங்களோ எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களோ நடைபெறவில்லை. ஆனால் திருவாளர் செல்லத்தம்புவினுடைய தேர்தல் கூட்டங்களில் இடையிடையே சர்ச்சைகள் கிளப்பப்பட்டதாகத் தெரியவந்தது. முள்ளியவளையில் செல்லத்தம்பு சார்பில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பீரங்கிப் பேச்சாளர் என்று வர்ணிக்கப்பட்ட வண்ணை ஆனந்தன் என்பவர் தகாத முறையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னை விமர்சித்துப் பேசியுள்ளார். அக்கூட்டத்தில் பங்கு பற்றிய எனது ஆதரவாளர்கள் அவரை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்யப்போகிறோம் என்றசெய்தியை என்னிடம் வந்து கூறினார்கள். ஆனால் அவர் எவ்வாறு பேசினாலும் நீங்கள் எவ்வாறான நடவடிக்கைகளிலும் ஈடுபடக்கூடாதென வற்புறுத்திக் கூறினேன். என் சார்பான கருத்துக் கணிப்பின் படி வன்னிப்பிரதேசத்தில் புதிதாகக் குடியேற்றப்பட்ட பிரதேச வாக்காளர் மத்தியில் ஓரளவு எனக்குரிய ஆதரவு குறைந்தே காணப்பட்டது. ஆனால் ஏனைய பிரதேசம் முழுவதிலும் எனக்குரிய ஆதரவு அதிகரித்து இருந்ததை எதிர் அணிப்பிரமுகர்கள் தெளிவாகவே தெரிந்திருந்தனர்.

மல்லாவி, வவுனிக்குளம், பாண்டியன்குளம் ஆகிய பகுதிகளில் எமது அணியினரும் நானும் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்த பொழுது சில வாக்காளர் "நாங்கள் திருவாளர் செல்லத்தம்புவுக்கு வாக்களிக்கவில்லை. தமிழர் விடுதலைக் கூட்டணி வெற்றி பெற வேண்டும். என்பதற்காகவே கூட்டணிக்கு வாக்களிக்க வேண்டியுள்ளது" என்று நேரடியாகவே தெரிவித்தனர்.சாதாரணமாக ஒரு பொதுத் தேர்தலில் வேட்பாளராக நிற்பவர் திருப்திகரமான பணவசதி உடையவராக இருப்பது முக்கியமாகும். ஆனால் என்னைப் பொறுத்தவரையில் மிகக் குறைந்த பணவசதியுடன் தான் தேர்தலில் ஈடுபட முன்வந்தேன். ஆனால் என்னை ஆதரித்த மக்கள் கூட்டம் தாங்களாகவே போதியளவு பணத்தைச் சேகரித்து கூட்டங்களையும் பிரசார நடவடிக்கைகளையும் மேற்கொண்டனர். இந்நிலையில் ஒரு தமாசான செய்தியைக் குறிப்பிட வேண்டியுள்ளது. முல்லைத்தீவிலே வசித்த பிரபல பிரமுகர் ஒருவர் என்னைத் தனிமையில் கண்டு "எனக்கும் திரு செல்லத்தம்பு அவர்களுக்கும் இடையில் முக்கிய பிரச்சனை ஒன்றுள்ளது. அவருக்கு எதிராக வெளிப்படையாக நான் உங்களுக்கு ஆதரவு அளித்தால் எனக்குப் பாரதூரமான நஷ்டத்தைத் திரு செல்லத்தம்பு ஏற்படுத்துவார். அதனால் நான் உங்களுக்குச் சார்பாகச் செயற்பட முடியாதிருக்கிறது." என்று கூறி இருபத்தையாயிரம் ரூபா பணத்தை தேர்தல் செலவுக்காக எனக்குத் தர முயற்சித்தார். ஆனால் நான் பணத்தை வாங்க மறுத்து நீங்கள் செல்லத்தம்புவை ஆதரிப்பதால் உங்கள் மேல் எவ்வித வெறுப்பும் கொள்ளமாட்டேன். என்று கூறி அவரை அனுப்பி வைத்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாக்களிக்கும் தினம் அண்மிக்கும் நிலையில் பிரசார முயற்சிகளும் மும்முரமாகவே நடைபெற்றன. சாதகம் பாதகமாக வாக்குகளுக்குக் கணக்கெடுப்புகள் ஆய்வுகள் நடைபெற்றன. அனேகமாக வவுனிக்குளப் பிரதேசத்தில் ஏறக்குறைய ஆறாயிரம் வரையிலான பெயர்வழிகள் வாக்காளராகப் பதியப்பட்டிருந்தனர். ஆனால் உண்மையாகவே அப்பிரதேசத்தில் நிரந்தரமாக வாழ்ந்து கொண்டிருந்தவர்கள் ஏறக்குறைய மூவாயிரத்து ஐந்நூறு வரையாகும். ஏனையோர் குடியேற்றப் பிரதேசத்தில் காணியைப் பெறுவதற்காக வந்து காணிகளைப் பெற்று காணிகளை உரிமையாக்கிக் கொண்டு யாழ்ப்பாணக்குடா நாட்டிலேயே வாழ்ந்தனர். அதனால் வவுனிக்குளத்தில் உள்ள குடியேற்ற வாசிகளில் அதிகமானோர் செல்லத்தம்புவுக்கு வாக்களித்தாலும் ஏனைய பிரதேசங்களில் எனக்கு மிதமான ஆதரவு இருந்ததால் எனக்கு எவ்வாறான பாதிப்பும் ஏற்படாது என்றே கணித்திருந்தேன்.

தேர்தல் தினத்தில் சுறுசுறுப்பாக சகல தேர்தல் நிலையங்களிலும் வாக்களிப்பு நடைபெற்றது. வாக்குப் பெட்டிகள் அனைத்தும் வவுனியாக் கச்சேரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு வாக்குகள் எண்ணப்பட்டன. ஆரம்பத்தில் வவுனிக்குள பிரதேசம் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களின் வாக்குகளே முதல் எண்ணப்பட்டன. அவ்வெண்ணிக்கையின் போது நானே வாக்குப்பலத்தில் முன்னணியில் இருப்பதாக எண்ணுவோர் மத்தியில் இருந்து கருத்துக் கசிந்தது. அதனை அவதானித்த திருவாளர் செல்லத்தம்பு அவர்கள் மிகக் கவலையோடு வாக்கெண்ணும் இடத்தின் அறையின் ஓர் மூலையில் கதிரையில் தலைகுனிந்து இருந்ததை அவதானிக்க முடிந்தது. ஆனால் வவுனிக்குளப் பிரதேச வாக்குப் பெட்டிகளில் உள்ள வாக்குகள் எண்ணப்பட்டு மொத்தம் கணக்கெடுத்த போது ஏறக்குறைய 5000 வரையான வாக்குகள் போடப்பட்டிருந்தன. ஆகவே ஏறக்குறைய 1500க்கு மேற்பட்ட கள்ளவாக்குகள் போடப்பட்டிருப்பது தெளிவாகியது. அதனை அவதானித்த நான் தோ்தலில் தோல்வியடையக் கூடும் என்றே எனது ஆட்களுக்கு முன்கூட்டியே தெரிவித்தேன். அந்நிலையில் மொத்தம் கணக்கெடுக்கப்பட்டு திரு.செல்லத்தம்பு அவர்கள் 1000



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொச்ச வாக்குகளால் வெற்றி பெற்றார் என்ற செய்தி உயர் அதிகாரியால் வெளியிடப்பட்டது.

செய்தி வெளியிடப்பட்டதை அடுத்து கச்சேரியில் ஒரு கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்தில் திரு.செல்லத்தம்பு அவர்கள் தனது வெற்றியைப் புகழ்ந்து உரை நிகழ்த்தினார். நான் உரையாற்றும் பொழுது "செல்லத்தம்பு அவர்கள் வாக்காளரை மதித்து கௌரவித்துச் செயற்படுபவராக இருந்தால் அவரின் நல்முயற்சிகளுக்கு ஆதரவு அளிப்பேன்'' என்றும், ''மீண்டும் கடந்த காலம் போல் செயற்படுவதானால் தேர்தல் காலம் முடிவடைவதற்கு முன்பே வாக்காளரின் எதிர்ப்பு நடவடிக்கைகளால் பாரளுமன்றப் பதவியிலிருந்து விலக நேரிடலாம்'' என்றும் கூறி எனது உரையை முடித்தேன். தேர்தல் முடிந்து சில மாதங்களின் பின் அத்தேர்தலில் கூட்டணி வேட்பாளர்களே வெற்றி பெற வேண்டும் என்ற கோசத்தால் ஈர்க்கப்பட்ட அரச தமிழ் ஊழியர்கள் வாக்குகளை எண்ணிய போது சில தில்லு முல்லுகளைப் புரிந்துள்ளார்கள் என்று செய்திகள் வெளியாகின. நான் தேர்தலில் தோற்று இருந்தாலும் அத்தேர்தலில் வெற்றி பெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர்கள் சில காலத்தின் பின் பட்ட அவலங்களை அவதானித்த பொழுது என்னைக் கடவுள் காப்பாற்றி விட்டார். என்று மக்கள் பேசிக்கொண்டார்கள்.

தேர்தல் முடிந்த இரண்டொரு மாதங்களின் பின் பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் திரு. செல்லத்தம்பு அவர்கள் சமுகமளித்த பொது வைபவங்களில் பொதுமக்கள் பலர் திரு.செல்லத்தம்புவின் பங்களிப்பை எதிர்த்து வெளிநடப்புச் செய்தனர். அத்துடன் முள்ளியவளை தண்ணீர் ஊற்றுப் பிரதேசத்தில் உள்ள பொதுமக்கள் தனக்கு ஏதாவது தீங்கு விளைக்கக் கூடுமென்று அச்சப்பட்டு தனது கொழும்புப் பயணத்திற்கு முல்லைத்தீவு பரந்தன் பாதையைத் தான் பாவித்தார். இந்நிலையில் எதிர்க்கட்சித் தலைவரான திரு.அ.அமிர்தலிங்கம் அவர்கள் தன்னை ஒருமுறை கொழும்பில் சந்திக்குமாறு கடிதம் அனுப்பியிருந்தார். அவரைக் காண்பதற்காக நான் கொழும்பிற்குச் சென்றிருந்தேன். திரு. அமிர்தலிங்கத்தோடு வவுனியா M.P தா.சிவசிதம்பரமும் தலைவர் மு.சிவசிதம்பரமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகமளித்திருந்தனர். என்னை வரவேற்ற திரு அமிர்தலிங்கம் "ஒரு முக்கிய பிரச்சினை பற்றி கதைப்பதற்காகவே உங்களை அழைத்திருக்கிறோம்". என்று கூறியவர் "முல்லைத்தீவுத் தொகுதிக்குத் தெரிவாகியுள்ள திரு. செல்லத்தம்பு அவர்களுக்கு எதிராக பொதுமக்கள் சிலர் கிளர்ச்சி பண்ணுவதாக செய்திகள் வெளியாகி வருகின்றன. உங்களுடைய ஆதரவு ஆட்களே அவ்வாறு செயற்படுவதாக சந்தேகிக்கப்படுகிறது." என்று கூறினார். "பெரும்பாலான பொதுமக்களால் நிராகரிக்கப்பட்ட திரு. செல்லத்தம்பு அவர்களை வேட்பாளராக நியமித்து பல தில்லு முல்லுகளின் அடிப்படையில் அவரை தேர்தலில் வெற்றி பெறவைத்து தேர்தல் முடிந்த பின் பொதுமக்கள் அவரை அச்சுறுத்துகிறார்கள் என்று கூறுகிறீர்கள். அதற்கு அவரை வேட்பாளராக நியமித்த நீங்களே பொறுப்பாளிகள் ஆவீர்கள். நான் ஓர் ஆசிரியன் என்ற ரீதியில் அவருக்கு எதிராக மக்களைத் தூண்டிவிடும் இழிசெயலை எக்காரணம் கொண்டும் செய்யமாட்டேன். பொதுமக்களாக மேற்கொள்ளும் எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு எக்காரணம் கொண்டும் நான் உடந்தையாக இருக்கமாட்டேன். திரு. செல்லத்தம்பு அவர்கள் மக்களை மதித்து கௌரவித்து செயற்படுவாரானால் மக்கள் அமைதிகாப்பர் என்று நம்புகிறேன்" என்று கூறினேன். அத்துடன் "கடந்த தேர்தலில் உங்களை நாங்கள் புறக்கணித்திருந்தது தேர்தல் சூழ்நிலை காரணமாகவே ஆகும். தற்பொழுது உங்களைத் தங்களோடு ஒத்துழைக்குமாறு தமிழர் விடுதலைக் கூட்டணி முடிவு செய்துள்ளது" என்று தெரிவித்தார்.

"காலங்கனியும் பொழுது அதனைப் பரிசீலிக்கலாம்" என்று கூறி வெளியேறினேன். சில நாட்களின் பின் எனது கமத்தில் வேலை செய்து கொண்டிருக்கும் பொழுது திரு. V.N. நவரத்தினம் என்ற சாவகச்சேரி பாராளுமன்ற உறுப்பினர் என்னைச் சந்திப்பதற்காக எனது கமத்துக்கு வந்திருந்தார். நான் சாவகச்சேரியில் படித்த பொழுது திரு. நவரத்தினம் அவர்கள் எனது பாரிய நண்பர்களுள் முக்கியமான ஒருவராக என்னோடு உறவாடியவர் ஆவார். ஆகவே அவரை வரவேற்று உரையாடினேன். அவர் "நான் நண்பர் என்ற தோரணையில் உங்களைக் காண்பதற்கு இன்று வரவில்லை. நான் தமிழர் விடுதலைக் கூட்டணிக் கட்சியின் தூதுவனாக கட்சியில் உங்களை இணைப்பதற்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்திருக்கிறேன்'' என்று கூறினார். அதற்கு நானும் ''நண்பர் என்ற ரீதியில் இவ்விடயம் பற்றி கருத்துக் கூற விரும்பவில்லை. ஒரு கூட்டணித் தூதுவர் என்ற நிலையிலேயேஎனது கருத்தை தெரிவிக்க விரும்புகிறேன். கடந்த தேர்தலின் பொழுது நானும் முல்லைத்தீவு வாக்காளப் பெருமக்கள் பலரும் திரு. செல்லத்தம்புவை வேட்பாளராக நிறுத்த வேண்டாமென கூட்டணித் தலைமையை வற்புறுத்தியமையை கூட்டணி ஏற்றுக் கொள்ளவில்லை'' என்று கூறினேன். அதனை ஏற்றுக் கொண்ட திரு. நவரத்தினம் அவர்கள் "எதிர்காலத்தில் அவ்வாறான தவறு நடைபெறாது" என்று கூறினார். அத்துடன் அடுத்து நடக்கவிருந்த முல்லை மாவட்டசபைத் தேர்தலில் என்னைத் தலைமை வேட்பாளராக நியமனம் செய்யக் கூட்டணி முடிவு செய்திருப்பதாகக் கூறி அதனை ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டிக் கொண்டார்.

"சிங்கள அரசியல் தலைமை தமிழ் இனத்தின் பிரச்சினையைச் சரியாகத் தீர்த்து வைப்பதற்கு விரும்பாது, தட்டிக்களிக்கும் நோக்குடனேயே மாவட்டசபை என்ற ஓர் அரசியல் அலகை தமிழரிடம் திணிக்கவே ஒரு சதி நடவடிக்கையை மேற்கொள்ளுகிறது''. என்று கூறி அதனை என்னால் ஏற்கமுடியாது என்பதை மிகக் கவலையோடு கூறினேன். ''தமிழர் விடுதலைக் கூட்டணியோடு இணைந்து செயற்படுவதற்கு உரிய காலம் கனியும் பொழுது ஆராய்ந்து முடிவு எடுப்பேன் என்று சில நாட்களுக்கு முன் திரு. அமிர்தலிங்கம் அவர்களுக்குக் கூறியுள்ளேன். அதனை தங்களுக்கும் கூறிக் கொள்கிறேன்''. அதன் பின் நண்பர்கள் என்ற ரீதியில் சிறிது நேரம் உரையாடிவிட்டு வெளியேறிச் சென்றார்.

************



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 19. முழுநேர விவசாயமுயற்சி

தீவிரமான அரசியல் முயற்சிகளில் இருந்து விலகி எனது சொந்தப் பொருளாதாரப் பிரச்சினைகளில் சில வருடங்கள் ஈடுபாடுகொண்டேன். தந்தை தாயரால் எனக்குத்தரப்பட்ட காணி பூமிகளை விட மேலும் அரசாங்கத்திடம் இருந்து எனது பெயரிலும் மனைவிபெயரிலும் பிள்ளைகள் பெயரிலும் பெற்றுக்கொண்ட ஏறக்குறைய முப்பது ஏக்கர் விஸ்தீரணமான நிலப்பரப்பை அபிவிருத்தி செய்து பயிர்ச்செய்கையில் ஈடுபட்டேன். அவ்வாறு அரசாங்கத்திடம் இருந்து குத்தகை அடிப்படையில் பனையடிப்பில என்னும் இடத்தில் பெற்றுக் கொண்ட முப்பதுஏக்கர் நிலத்தில் பத்துஏக்கர் நிலப்பரப்பு நெற்பயிர் செய்யும் வயல்நிலமாக அபிவிருத்தி செய்யப்பட்டது. மிகுதியான இருபதுஏக்கர் நிலப்பரப்பும் மேட்டுப்பயிர்ச்செய்கைக்கு உட்படுத்தப்பட்டது. குறிப்பிட்ட நிலப்பரப்பு முழுவதும் காடுகள் வெட்டிஎரிக்கப்பட்டு பயிர்ச்செய்கைக்குப் புதியகாணியாக திருத்தி அமைக்கப்பட்டதால் அந்நிலப்பரப்பில் உற்பத்திசெய்யப்பட்ட பயிரினங்கள் அனைத்தும் செழித்துவளர்ந்து அதிகளவான விளைச்சலைத்தந்தன.

பத்து ஏக்கர் வயல்நிலமும் குளநீர் பாய்ச்சக்கூடிய நிலமாக அமைந்திருந்தமையால் ஏக்கர்ஒன்றுக்கு 30, 40 மூடை வரையான நெல் விளைச்சலை வருடாவருடம் பெறக்கூடியதாக இருந்தது. அத்துடன் வேறு பேர்வழிகளின் வயல் நிலங்களையும் குத்தகை அடிப்படையில் பெற்று நெற்செய்கை விரிவாக மேற்கொள்ளப்பட்டது. மேட்டு நிலத்தில் பத்து ஏக்கர் வரையான நிலப்பரப்பில் மிளகாய்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டது. அக்காலகட்டத்தில் மிளகாய் உற்பத்தி செய்வதன் மூலம் போதியலாபம் கிடைத்தது. மாதத்தில் இரண்டுமுறை லொறிகள் மூலம் செத்தல் மிளகாய் கொழும்புச் சந்தைக்கு அனுப்பி விற்பனைசெய்யப்பட்டது. அக்காலத்தில் வன்னிப்பிரதேசத்தில் காய்கறிப்பயிர்கள் வாழைபோன்ற பயிரினங்களை ஏக்கர் கணக்கில் செய்கைபண்ணுவதில் விவசாயிகள் ஊக்கம் காட்டுவதில்லை. ஆனால் பரீட்சார்த்தமாக மேற்குறிப்பிட்டவாறு ஐந்து ஏக்கர் நிலப்பரப்பில் வாழைத்தோட்டமும் ஒன்று உருவாக்கப்பட்டது. அத்துடன் காய்கறிப்பயிர்களும் செய்கைபண்ணப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வாறான பயிர்களில் கிடைக்கும் விளைபொருட்களை இலாபகரமாக விற்பனை செய்வதற்கு சந்தை வாயப்புகள் போதியளவு இல்லாத காரணத்தால் அப்பயிர்ச் செய்கைக்கு செலவிடப்படும் பணத்தொகைக்கேற்ப வருமானம் கிடைப்பது அரிதாகவே இருந்தது. அதனால் மிளகாய்ச்செய்கையை மாத்திரம் தொடர்ந்து முன்னெடுத்ததோடு வாழை மரக்கறிப்பயிர்களை செய்கை பண்ணுவதை நிறுத்தவேண்டியநிலை ஏற்பட்டது. அதனால் மேட்டு நிலத்தில் மா பலா போன்ற நிரந்தரப்பயிர்கள் உற்பத்தி செய்யப்பட்டன. ஏறக்குறைய 100மா மரங்களும் 50 வரையான பலா மரங்களும் நாட்டப்பட்டன 4,5 வருடங்களில் மா பலா மரங்களில் இருந்து கூடுதலான விளைச்சல் கிடைத்தது. அத்துடன் புகையிலை வெங்காயம் போன்ற பயிர்களும் உற்பத்தி செய்யப்பட்டன. எமது பிரதேசத்தில் எவருமே பம்பாய் வெங்காயச் செய்கையில் ஈடுபடுவதில்லை. முதன் முறையாக நான் இரண்டு ஏக்கர் நிலப்பரப்பில் பம்பாய் வெங்காயப்பயிரை உற்பத்தி செய்து நல்ல விளைச்சலைப்பெற்றேன். சின்ன வெங்காயம், பம்பாய் வெங்காயம் என்பன லொறிகள் மூலம் கொழும்புக்கு அனுப்பும் வாய்ப்பு இருந்ததால் ஓரளவு இலாபம்பெறக்கூடியதாக இருந்தது.

இந்நிலையில் மேலும் ஒரு 10ஏக்கர் காட்டு நிலம் அபிவிருத்திசெய்யப்பட்டு அதில் உழுந்து பயிரிடப்பட்டது. உழுந்துப்பயிரும் செழித்து வளர்ந்து ஏக்கருக்கு 20 மூடைவரையான விளைச்சலைத்தந்தது. இவ்வாறு விவசாயத்துறையில் ஈடுபட்டுஇருந்த காலகட்டத்தில் 1983ஆம் ஆண்டு 60 ஏக்கர். நிலப்பரப்பில் நெற்செய்கையை மேற்கொண்டிருந்தேன். ஆரம்பத்தில் போதிய நீர்வீழ்ச்சி கிடைத்ததால் நெற்பயிர் செழித்து வளர்ந்து அதிக விளைச்சலைத் தரும் என்று கணிக்கப்பட்ட நிலையில் தொடர்ந்து சித்திரை மாதம்வரை பெய்த அடைமழை காரணமாக 60 ஏக்கரில் உற்பத்திசெய்த நெற்செய்கையில் ஒருமூடை நெல்கூட வெட்டி எடுக்க முடியாத பேரழிவு ஏற்பட்டது. அதேபோல பதினைந்து ஏக்கர் நிலப்பரப்பில் உற்பத்திசெய்த உழுந்துப்பயிரும் வெட்டி எடுக்கமுடியாமல் முற்றாக நாசம் அடைந்தது. அதனால் அவ் ஆண்டில் ஏற்பட்ட பெருநட்டத்தால் பொருளாதார நிலையில் சிக்கல் ஏற்பட்டது. ஆனால் தொடர்ந்து மேற்கொண்ட முயற்சிகளின் மூலம் அவ்வாறு ஏற்பட்ட நட்டத்தை ஈடுசெய்யக்கூடியதாக இருந்தது.

*************



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 20. சுயமுயற்சிகள்

இராணுவ நடவடிக்கைகள் காரணமாக எமது சொந்தக் கிராமமான பெரியகுளம் கிராமத்தில் மக்கள் எவரும் தங்கியிருக்க முடியவில்லை. அதனால் நான் எனது குடும்பத்தோடு நெடுங்கேணியில் ஒரு வாடகை வீட்டில் தங்கியிருந்தேன். அக்கால கட்டத்தில் நெடுங்கேணியில் சில தோட்டக் காணிகளை குத்தகைக்கு எடுத்து புகையிலை செய்கையில் ஈடுபட்டேன். வன்னப் பிரதேசத்தில் உற்பத்தி செய்யப்படும் புகையிலையை யாழ்ப்பாண வியாபாரிகள் வழக்கமாக கொள்வனவு செய்து வந்தனர். இராணுவ நடவடிக்கையால் யாழ்ப்பாணத்துக்கும் வன்னிக்கும் இடையில் பிரயாணம் செய்வதில் இடர்பாடுகள் ஏற்பட்டன. அதனால் வன்னியில் செய்கை பண்ணிய புகையிலையோடு ஏனைய சிலரின் புகையிலையையும் கொள்வனவு செய்து கொழும்பு, மட்டக்களப்பு, மாத்தறை போன்ற சுருட்டுத்தொழில் நடைபெறும் நிலையங்களுக்கு ஏற்றிச் சென்று விற்பனை செய்து வந்தேன். உள்ளூர் வாசியாகிய நான் புகையிலை வியாபாரத்தில் ஈடுபட்டிருந்ததால் உள்ளூர் வாசிகளிடம் கடன் அடிப்படையில் போதிய அளவு புகையிலையைக் கொள்வனவு செய்து வியாபாரம் செய்யக் கூடியதாக இருந்தது.

சிலவருடங்கள் தொடர்ந்து புகையிலைச் செய்கையையும், வியாபாரத்தையும் செய்து கொண்டிருந்தேன். அந்நிலையில் மணலாற்றுப்பிரதேச இராணுவ முகாம்களில் இருந்து இடையிடையே நெடுங்கேணிக் கிராமத்தை நோக்கிச் செல்வீச்சு நடைபெற்றது. அதனால் நெடுங்கேணிக் கிராமங்களும் இடையிடையே இடம் பெயர்ந்து சிலநாட்களில் மீண்டும் திரும்பி நெடுங்கேணிக்கு வருவதாக இருந்தன. அந்நிலையில் சுகவீனமுற்று நடக்கமுடியாத நிலையில் இருந்த எனது மனைவியை நெடுங்கேணியில் வைத்துப் பராமரிப்பதில் சிக்கல்கள் ஏற்பட்டன. அதனால் பண்டாரக்குளம் என்ற கிராமத்தில் புதிதாக ஓர் சிறிய வீடு அமைத்து, அதில் அவரைக் குடியமர்த்தி அவரைப் பராமரிப்பதற்கு ஓர் வேலையாளையும் அமர்த்தி அவரைப் பராமரித்து வந்தேன்.

**************



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 21. இராணுவ ஊடறுப்பும் இடப்பெயர்வும்

இலங்கைத் தமிழ் இனத்தின் அரசியல்ப் பிரச்சினைகள் சார்பில் அகிம்சை அடிப்படையில் சாத்வீக முறையில் மேற் கொள்ளப்பட்ட முயற்சிகள் தோல்விகண்டதால் தமிழ் இளைஞர் மத்தியில் உருவாகிய வன்செயல் போராட்ட முயற்சிகள் ஆரம்பமாயின. அக்காலகட்டத்தில் வன்னிப் பெருநிலப்பரப்பின் ஒருபகுதியாகவும், வடக்கு கிழக்கு மாகாண எல்லைப் புறமாகவும் அமைந்திருந்த வெலியோயா (நவாலயம்) பிரதேசத்தில் குடியிருந்த தமிழர்கள் அனைவரையும் ராணுவ அச்சுறுத்தலால் வெளியேற்றிவிட்டு அப்பிரதேசத்தில் சிங்களமக்களைக் குடியேற்றும் முயற்சியில் அரசு ஈடுபட்டது. அவ்வாறு குடியேற்றப்பட்ட சிங்களமக்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்காக சிங்கள ராணுவமையங்கள் அப்பிரதேசத்தில் நிறுவப்பட்டன. அவ்வாறு சிங்களமக்கள் குடியேற்றப்பட்டதால் அப்பிரதேசத்தின் எல்லைப்புறமாக இருந்த தமிழ்க்கிராமமக்களுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டிருந்தது. இடையிடையே சிங்களராணுவம் தமிழ்க்கிராமங்களுக்குள் புகுந்து மக்களை அச்சுறுத்தி வந்தது. அவ்வாறான நிலையில் தமிழ்ப்போராளிகளும் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு இருந்தனர். இடையிடையே அப்பிரதேசத்தில் போராளிகளுக்கும் ராணுவத்துக்கும் இடையே மோதல்களும் நடைபெற்றன. இந்நிலையில் வெலியோயாப் பிரதேசத்தில் ஒரு நாள் ராணுவத்துக்கும் போராளிகளுக்கும் இடையேமோதல் நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து 1984ஆம் ஆண்டு தை மாதம் எங்கள் கிராமத்திற்கு அடுத்துள்ள ஒதியமலைஎனும் கிராமத்துக்குள் பிரவேசித்த ராணுவசிப்பாய்கள் அக்கிராமத்தில் இருந்த ஆண்களில் பலரை அக்கிராமத்தில் உள்ள வாசிகசாலைக்கு ஓர் கூட்டம் நடத்துவதற்கு வரும்படி அழைத்துச்சென்றனர். அவ்வாறு அழைத்துச்சென்று அவர்களை அவ் வாசிகசாலைகட்டிடத்துக்குள் வைத்து ஏறக்குறைய 27பேரை சுட்டுக்கொன்றுவிட்டுச் சென்றனர். அப்படிச்செல்லும் போது வேறுஇரண்டு மூன்று பேரை தங்கள்வாகனத்தில் ஏற்றிச்சென்று காட்டுப்பகுதியில் வைத்துச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுட்டுக்கொலை செய்தனர். அந்நிகழ்வால் எல்லைப்புற தமிழ்க்கிராமங்களில் பெரும்பதட்டம் ஏற்பட்டது. அத்துடன் வெலியோயாவில் முகாமிட்டு இருந்த ராணுவசிப்பாய்கள் எல்லைப்புறத்தில் அமைந்திருந்த தமிழக்கிராமங்களுக்குள் ஊடறுத்துவந்து இடையிடையே மக்களைச் சுட்டுக்கொன்றனர். அவ்வாறான பயங்கர நிலையால் எல்லைப்புறத்தில் அமைந்திருந்த மக்கள் இடம்பெயர்ந்து அயல் கிராமங்களில் தஞ்சமடைந்தனர்.

அவ்வாறு வாசிகசாலையில் வைத்து கொலை செய்யப்பட்ட 27பேரின் சடலங்களும் அவ்வாசிகசாலையில் உள்ளும்புறமும் சிதறிக் கிடந்தன. அவ்விடயம் முல்லைத்தீவு அரசாங்க அதிபருக்குத் தெரிவிக்கப்பட்டதை அடுத்து அரசாங்க அதிபர் திரு.பொன்னம்பலம் அவர்களும் சில உயர்அதிகாரிகளும் அக் கொலைநடந்த ஒதியமலைக் கிராமத்துக்குவந்து இறந்துகிடந்த உடல்களைத் தகனம் செய்வதற்கான முயற்சிகளை மேற்கொண்டனர். அத்துடன் அங்கு சமுகமளித்த மக்கள் மத்தியில் நான் ஓர் இரங்கல்உரை ஆற்றினேன். சோகம் நிறைந்த அச் சம்பவத்தில் கலந்து கொண்டதன் பின்னர் மனதை உருக்கும் நிகழ்வால் அதிர்ச்சியடைந்த நான் அன்றிலிருந்து முகச்சவரம் செய்வதை விலக்கிக்கொண்டேன். அரசஅதிபரின் மேற்பார்வையில் அவ்வாசிகசாலைக்கு அண்மையிலேயே எல்லோரின் உடல்களும் ஒன்று சேர்க்கப்பட்டு தீமூட்டப்பட்டு எரிக்கப்பட்டன.

பெரியகுளம் கிராமத்தில் இருந்தும் மக்கள் இடம்பெயர்ந்து வேறு இடங்களுக்குச் சென்றனர். அந்நிலையில் நானும் வெளியேறி நெடுங்கேணிக்கிராமத்தில் தங்கியிருந்தேன். அத்துடன் கமத்தில் உள்ள முக்கிய தளபாடங்கள் அனைத்தையும் நெடுங்கேணிக்கு எடுத்துச் சென்று பாதுகாப்பாகவைத்தேன். அக் காலகட்டத்தில் எனது குடும்ப உறுப்பினர்கள் நாச்சிமார் கோயிலடியில் ஓர் வீடுவாடகைக்கு அமர்த்தி அங்குதங்கியிருந்த காலகட்டத்தில் வன்னிப் பிரதேசத்தில் பாவனையில் இருந்த உழவு இயந்திரங்கள் அனைத்தையும் ஓர் குறிப்பிட்ட தினத்தில் முல்லைத்தீவு அரசாங்க அதிபர் பணிமனைக்கு முன்பாகஇருந்த முத்தவெளிக்கு கொண்டுவந்து நிறுத்த வேண்டும் என உழவு இயந்திர உரிமையாளர்களுக்கு முல்லைத்தீவு இராணுவ அதிகாரி கட்டளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறப்பித்து இருந்தார். அவ்வாறு உரிமையாளர்கள் உழவு இயந்திரங்களைக் கொண்டுவந்து நிறுத்தத்தவறினால். அவர்களின் உழவு இயந்திரங்கள் பறிமுதல் செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. அதனால் அச்சமடைந்த உழவு இயந்திர உரிமையாளர்கள் தமது உழவு இயந்திரங்களை எடுத்துச்சென்று முல்லைத்தீவு முத்தவெளியில் நிறுத்தினர். நானும் எனது உழவு இயந்திரத்தையும் அங்கு எடுத்துச்சென்று நிறுத்தினேன். அவ்வாறு உழவு இயந்திரங்கள் எடுத்துச்செல்லப்பட்டு நிறுத்தப்பட்ட அன்றைய தினம் ராணுவ தலைமை அதிகாரி அவர்கள் கொழும்புக்குச் சென்று இருந்தார். அதனால் உடனடியாக இராணுவஅதிகாரியோடு தொடர்புகொள்ள முடியவில்லை.

அந் நிலையில் உழவு இயந்திர உரிமையாளர்களுக்கு ஏற்பட்ட அவலநிலை பற்றி முல்லைத்தீவு அரசாங்க அதிபரிடம் முறையிடப்பட்டது. அரசாங்க அதிபர் கொழும்புக்குச் சென்றிருந்த ராணுவ அதிகாரியோடு தொடர்புகொண்டு கதைத்து விட்டு அடுத்த நாள் ராணுவ அதிகாரி வருவார் என்றும், வந்தபின் அவருடன் கலந்துரையாடி ஒரு முடிவு எடுக்கலாம் என்றும் தெரிவித்தார். இந்நிலையில் ராணுவ அதிகாரி அவர்கள் அடுத்தநாள் கொழும்பில் இருந்து வருகைதந்திருந்தார். உழவு இயந்திர உரிமையாளர் சார்பில் இராணுவ அதிகாரியோடு என்னையே பேசவேண்டும் என உழவு இயந்திர உரிமையாளர்கள் வற்புறுத்தினர். அதனால் அரசஅதிகாரிகள் சகிதம் நானும் சில உழவு இயந்திர உரிமையாளர்களும் இராணுவ அதிகாரியைச் சந்தித்தோம். அவ்வேளையில் இராணுவ அதிகாரி கடும்தொனியில் உழவுஇயந்திர உரிமையாளர்கள் புலிகளின் யுத்த நடவடிக்கைக்குத் தங்கள் உழவு இயந்திரங்களைக் கொடுத்து உதவிபுரிகிறார்கள் என்றும், அதனால் உழவு இயந்திரங்கள் அனைத்தையும் பறிமுதல் செய்யவேண்டும் என அரசு தெரிவித்திருப்பதாகவும். அதனால் உழவு இயந்திரங்களைத் திருப்பித் தரமுடியாது எனவும் கூறினர்.

அவ் வேளையில் நான் முல்லைத்தீவு பிரதேச மக்களில் 100வீதமானவர்களும் விவசாயிகள் என்றும், அவர்களுடைய தொழில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுவதற்கும் உழவு இயந்திரத்தையே பாவிக்கிறார்கள் என்றும் அவ்வாறு உழவுஇயந்திரங்களை ராணுவம் பறிமுதல் செய்யுமாயின் பொதுமக்கள் உழைப்புக்கள் எதுவும் இன்றி செத்துமடியும் நிலைதான் ஏற்படும் என்றும் கூறினேன். அத்துடன் உழவுஇயந்திர உரிமையாளர்கள் யுத்தமுயற்சிகளுக்கு ஆதரவு அளிக்கவேண்டும் என்ற விருப்பத்தோடு உழவு இயந்திரங்களை தமிழ்ப்போராளிகளுக்குக் கொடுத்து உதவவில்லை என்றும், போராளிகளின் ஆயுதமிரட்டலுக்கு அஞ்சியே சிலவேளைகளில் உழவு இயந்திரத்தைக் கொடுக்கிறார்கள். அதேபோல் அரசபடையினரின் ஆயுதஅச்சுறுத்தலுக்குப் பயந்தும், உழவு இயந்திரங்களைக் கொடுத்து உதவி இருக்கிறார்கள் என்றும் தெரிவித்தேன்.

இந் நிலையில் இருதரப்பினரதும் ஆயுத அச்சுறுத்தலுக்கு அஞ்சியே பொதுமக்கள் அனைத்து நடவடிக்கைகளிலும் ஈடுபடுகிறார்கள். என்றும் ஆகவே விவசாயிகளின் உழவு இயந்திரங்களை இருதரப்பிற்கும் கொடுத்துஉதவுவதை எவ்வகையிலும் ஓர் குற்றமாகக் கணிப்பது மனிதாபிமான அடிப்படையில் பொருத்தமற்றது என்றும் விளக்கிக்கூறினேன். அத்துடன் இவ்விடயத்தை தீவிரமாகஆலோசித்து விவசாயிகளின் முயற்சிகள் தடைப்படாவண்ணம் சில கட்டுப்பாடுகளை விதித்து உழவு இயந்திரங்களை உரிமையாளர்களிடம் கையளிப்பதே விவசாயிகளுக்கு நீங்கள் செய்யும் பேர்உதவியாக அமையுமென வற்புறுத்தினேன். அந்நிலையில் ராணுவஅதிகாரியும் அரசாங்க அதிபரும் சிறிதுநேரம் கலந்து ஆலோசித்ததன்பின்னர் உழவு இயந்திர உரிமையாளர்களை தமிழ்ப்போராளிகள் அச்சுறுத்தி பெற்றுச்சென்றால் அதனைஉடனடியாக இராணுவஅதிகாரிக்குத் தெரிவிக்கவேண்டும் என்று எழுத்துமூல நிபந்தனையின் அடிப்படையில் சகல உழவு இயந்திர உரிமையாளர்களிடமும் மேற்கூறியவாறான எழுத்து மூலமான ஓர் உடன்படிக்கையைப் பெற்றுக்கொண்டு உழவு இயந்திரங்கள் அரசாங்கஅதிபர் மூலம் உழவு இயந்திரங்களின் உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டன.

****************



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 22. முல்லைத்தீவு மாவட்ட பிரஜைகள் குழு.

மேலும் நான் 1985ம் ஆண்டளவில் எனது சொந்த முயற்சிகளில் முக்கிய கவனமெடுத்து செயற்பட்டுக்கொண்டிருந்த வேளையில் ஒரு நாள் முல்லைமாவட்டத்திலுள்ள சில முக்கிய பிரமுகர்கள் என்னை அணுகி "யுத்தப்பிரச்சனைகளால் அவதியுறும் முல்லைத்தீவு மாவட்டத்தில் மக்களுக்கு உதவி புரிவதற்கு ஒரு பிரஜைகள் குழு அமைக்கவேண்டும்." என்று ஆலோசனை தெரிவித்தனர். அதற்காக தண்ணீரூற்றில் கூட்டப்படும் ஒரு கூட்டத்திற்கு என்னையும் சமுகமளித்து ஆலோசனை தெரிவிக்குமாறு வற்புறுத்தினர். 1977ம் ஆண்டு பொதுத்தேர்தலில் தோல்வியடைந்திருந்தாலும் மக்களுக்குச் சேவை செய்யவேண்டும் என்ற எனது கருத்தில் தளர்ச்சிகள் எதுவும் ஏற்படாதமையினால் அவ்வாறு கூட்டப்பட்ட கூட்டத்தில் நானும் கலந்து கொண்டு ஆலோசனை வழங்கினேன். கூட்டத்தில் கலந்து கொண்டவர்களின் கலந்துரையாடல்களின் பின் பிரஜைகள் குழுவுக்குரிய நிர்வாகிகள் தெரிவுசெய்யப்பட்டனர். அவ்வாறு தெரிவு நடைபெற்றபொழுது பொ.சந்திரசேகரி ஆகிய என்னை தலைவராகவும் திரு.கதிரவேலு ஆசிரியர் என்பவரை செயலாளராகவும் ஏனைய பத்துப்பேரை உறுப்பினர்களாகவும் சபை ஏகமனதாகத் தெரிவு செய்தது. அவ்வாறு தெரிவு செய்யப்பட்ட பிரஜைகள் குழு முல்லைத்தீவு பட்டணத்திலுள்ள ஒரு கட்டடத்தில் ஒரு காரியாலயத்தை அமைத்து. செயற்பாடுகளை ஆரம்பித்தது.

1983, 1984ம் ஆண்டுவரையில் இலங்கை இராணுவத்திற்கும் இலங்கைத் தமிழ்ப் போராளிகளுக்கும் இடையே மோதல்கள் ஆரம்பமாயின. இவ்வாறான மோதல்களின் போது பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு உதவி புரியும் அமைப்புகள் எதுவும் ஆரம்பத்தில் உருவாகி இருக்கவில்லை. அவ்வாறு பாதிக்கப்படும் பொது மக்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிதிஉதவி அளிப்பதற்கான நிதி நிறுவனங்களும் உருவாகி இருக்கவில்லை. அதனால் மோதல்கள் ஆரம்பமான ஆரம்பகட்டத்தில் வாழ்வாதாரங்களை முற்றாக இழந்து, நிரந்தரமாக வசித்த இடங்களில் இருந்து இடம் பெயர்ந்து அலைந்து திரிந்த அகதிகளுக்குத் தங்கியிருப்பதற்கான தங்குமிட வசதிகளையோ, அவர்கள் உயிர்வாழ்வதற்கான வாழ்வாதாரங்களையோ அளித்து அவர்களைப் பாதுகாப்பதற்கான பணஉதவிகளை அளிக்கும் நிறுவனங்கள் இல்லாததால் இடம் பெயர்ந்த அகதிகள் சொல்லமுடியாத துன்பதுயரங்களுக்கு இலக்காகி வேதனைப்பட்டனர்.

அகதிகளின் அவ்வாறான நிலையை அவதானித்த பெரியார்களின் எண்ணக்கருவில் உதித்தது தான் "தமிழர் புனர்வாழ்வுக் கழகம்" அவ்வாறு உருவாகிய தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துக்கு உலகநாடுகள் பலவும், புலம்பெயர்ந்த தமிழ்ப்பெரியார்களும் போதியஅளவு பணஉதவியை அளித்தனர். அவ்வாறு கிடைத்த நிதியை ஆங்காங்கு பாதிக்கப்பட்ட மக்களுக்குக் கையளித்து உதவி புரிவதற்கு மாவட்ட அடிப்படையில் பிரஜைகள் குழுக்கள் உருவாக்கப்பட்டன. ஒவ்வொரு மாவட்டத்திலும் இயங்கும் பிரஜைகள் குழுக்கள். அந்தந்த மாவட்டங்களில் ராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட நபர்களின் பாதிப்புக்கள் பற்றிய அறிக்கைகளைத் தயாரித்து, புனர்வாழ்வுக்கழக தலைவரிடம் கையளித்து அவரால் அனுமதிக்கப்படும் பணத்தொகையைப்பெற்று அவ்வப் பகுதி பிரஜைகள் குழுக் கூட்டங்களில் தீர்மானிக்கப் படுவதற்கமைய பாதிக்கப்பட்டவர்களுக்கு பணத்தை பகிர்ந்தளிக்கும் நடைமுறை மேற்கொள்ளப்பட்டது.

இந் நிலையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள மணலாற்றுப்பிரதேசத்தை இலங்கை ராணுவம் ஆக்கிரமித்த பொழுது அப்பிரதேசத்தில் உள்ள தென்னமரவடி என்ற கிராமத்தில் தலைமுறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமுறையாக குடியிருந்த தமிழ் மக்கள், இலங்கை ராணுவத்தால் அச்சுறுத்தப்பட்டு அக்கிராமத்தில் இருந்து முற்றாக வெளியேற்றப்பட்டனர். அவ்வாறு வெளியேற்றிய மக்கள் வாழ்வாதார உதவிகள் எதுவும் கிடைக்காது மிகவும் அல்லல் பட்டனர். முல்லைதீவு மாவட்ட பிரஜைகள் குழு அவர்களுடைய பிரச்சனைகளைக் கூடி ஆராய்ந்து தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திடம் தெரிவித்து பண உதவி பெறும் முயற்சியை ஆரம்பித்தது. அவ்வாறே தொடர்ந்தும் முல்லைத்தீவு மாவட்டத்தில் ராணுவநடவடிக்கையால் பாதிக்கப்படும் மக்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டு வந்தன. தென்னமரவடி கிராமத்தில் இருந்து இடம் பெயர்ந்த மக்கள் தண்ணீர்ஊற்று முள்ளியவளை ஆகிய கிராமங்களில் அதிகமாக தங்கியிருந்தனர். அவர்களின் தேவைகளை முழுமையாக நிறைவு செய்யமுடியாவிட்டாலும் மாதாமாதம் ஓரளவு வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன. ராணுவத்தால் தாக்கப்பட்டு உயிர் இழந்தவர்களின் மரணச் சடங்குகளுக்கும் ஓரளவு பண உதவி செய்யப்பட்டது. அத்துடன் ராணுவ நடவடிக்கைகளால் காயம் அடைந்தவர்களுக்கும் உதவிகள் செய்யப்பட்டன. இந்நிலையில் முல்லைத்தீவு மாவட்ட பிரஜைகள் குழுவின் செயற்பாடுகளில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் பூரணதிருப்தி அடைந்து உதவி புரிவதில் தயக்கம் காட்டாது செயற்பட்டது.

************



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 23. இந்திய அமைதிப்படை வருகை

இவ்வாறான நிலையில் 1987ம் ஆண்டளவில் அமைதிப்படை என்ற பெயரில் இந்திய இராணுவம் இலங்கையில் தமிழ்ப்பிரதேசம் எங்கும் இராணுவ முகாம்களை அமைத்து செயற்பட்டது. அக்காலகட்டத்தில் இலங்கை இராணுவத்தை ஆங்காங்கு உள்ள இராணுவ முகாம்களில் முடக்கி வைத்தனர். பொதுமக்களின் சகல பிரச்சனைகளிலும் இலங்கை இராணுவத்திற்குப் பதிலாக இந்திய இராணுவமே ஈடுபட்டுச் செயற்பட்டது.

இந்தியராணுவத்தின் வருகையை அடுத்து தமிழ்ப் பிரதேசங்களில் ஏற்பட்ட அமைதி நிலை நீண்ட நாட்கள் நீடிக்கவில்லை. ஏதோ காரணங்களால் இந்திய இராணுவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மோதல்கள் ஆரம்பமாயின. அவ்வாறான மோதல்களால் மக்கள் மத்தியில் பதட்ட நிலை அதிகரித்தது. தமிழ்ப் பொதுமக்களில் பலர்மேல் புலிப் போராளிகளின் ஆதரவாளர்கள் என்று சந்தேகம் கொண்டு இந்திய சிப்பாய்கள் கண் மூடித்தனமாக தாக்குதல்களை நடத்தினர். அவ்வாறு தாக்கப்பட்டவர்களுக்கும் பிரஜைகள் குழு மூலம் உதவிகள் செய்யப்பட்டன. முல்லைத்தீவு நகரத்தில் ஓர் பெரிய இராணுவ முகாம் அமைந்திருந்தது. முகாமில் தங்கியிருந்த இந்திய இராணுவச் சிப்பாய்களின் சுற்றி வளைப்புகளாலும் தடைகளாலும் பொது மக்களின் மத்தியில் பதட்டம் அதிகரித்து இருந்தது. பொது மக்கள் பலரை புலிப்போராளிகள் என சந்தேகித்து தங்களின் ராணுவ முகாங்களுக்கு அழைத்துச் சென்று தடுத்து வைத்தனர். அவ்வாறு தடுத்து வைக்கப்பட்டவர்களை முல்லைத்தீவு பிரஜைகள் குழு விடுவிப்பதற்கு இராணுவ அதிகாரிகளைத் தொடர்பு கொண்டு முயற்சி செய்து விடுவித்தது.

ஒரு நாள் ஆங்காங்கே நடைபெற்ற உலங்கு வானூர்தி தாக்குதலில் இலக்காகி 10 பேர் வரையில் மரணமடைந்தனர். அவ்வாறு மரணமடைந்தவர்களின் இறுதிச் சடங்குகளை நிறைவு செய்வதற்கு வேண்டிய பண உதவியை முல்லைத்தீவு பிரஜைகள் குழு இறந்தவர்களின் உறவினர்களிடம் கொடுத்து உதவியது. இந்நிலையில் ஒரு நாள் நடைபெற்ற பயங்கர நிகழ்வை குறிப்பிட விரும்புகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெடுங்கேணியில் இருந்து அக்காலகட்டத்தில் முல்லைத்தீவுக்குப் போக வேண்டுமானால் வழமையான நேர் பாதைகளுக்கூடாகச் செல்வதாக இருந்தால் இடையிடையே அமைக்கப்பட்டு இருந்த இந்திய இராணுவ காவலரண்களைக் கடந்து செல்ல வேண்டியிருந்தது. அவ்வாறு காவலரண்களைக் கடந்து செல்வதில் மக்களுக்குப் பயப்பீதி இருந்தது. அதனால் தண்டுவானில் இருந்து தண்ணிமுறிப்பு, குமுழமுனை, அளம்பில் ஊடாகச் செல்லும் குறுக்கு வழியால் தான் பிரயாணம் செய்தார்கள். அந்நிலையில் ஒரு நாள் முல்லைத்தீவில் நடைபெற இருந்த பிரஜைகள் குழுக் கூட்டத்தில் பங்கு பற்றுவதற்கு நானும் துவிச்சக்கர வண்டியில் அவ்வழியால்த் தான் முல்லைத்தீவுக்குப் போய் இருந்தேன். பிரஜைகள் குழுக் கூட்டம் நடந்து முடிந்ததும் முல்லைத்தீவில் இருந்து அதே பாதையால் நெடுங்கேணிக்குப் புறப்பட்டு முல்லைத்தீவிலிருந்து அளம்பிலுக்குச் செல்லும் ஓர் ஒற்றையடிப் பாதையால் சென்று கொண்டிருந்தேன். இரண்டு பக்கமும் பனை வடலிகள் நிறைந்திருந்த ஓர் இடத்தில் நான் போய்க் கொண்டிருக்கும் பொழுது எனக்கு முன்புறமாகவும் பின்புறமாகவும் பதுங்கியிருந்த ராணுவச் சிப்பாய்களுக்கும் தமிழ்ப் போராளிகளுக்கும் மோதல் ஏற்பட்டது. இருபகுதியினரும் ஒருவரை ஒருவர் எதிர்த்து பயங்கரமாக துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். அதனால் நடுவில் அகப்பட்டு அதிர்ச்சியடைந்த நான் அவ்வடலிக் கூடலுக்குள் புகுந்து பதுங்கிக் கொண்டேன். அதனால் எவ்வித ஆபத்தும் ஏற்படாமல் தப்பிப்பிளைத்தேன். அவர்களின் மோதல் முடிந்த பின் எனது பயணத்தைத் தொடர்ந்தேன்.

அக்காலகட்டத்தில் வன்னிப் பிரதேசத்தில் இருந்து யாழ்ப்பாணம் பிரயாணம் செய்பவர்கள் புதுக்குடியிருப்புக்கூடாக முரசுமோட்டை சென்று கொம்படிப்பாதைக் கூடாக யக்கச்சிக்குச் சென்று யாழ்ப்பாணம் செல்வார்கள். அவ்வழியால் போவதற்கு வாகன வசதிகள் இல்லை. அதனால் அதிகமானோர் துவிச்சக்கர வண்டிகளையே பாவித்து அவ்வழியால் பிரயாணம் செய்தனர். ஒரு நாள் பிரஜைகள் குழு விடயமாக யாழ்ப்பாணத்தில் உள்ள தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துக்கு துவிச்சக்கர வண்டியில் அவ்வழியாலே பிரயாணம் செய்தேன். கொம்படிப்பாதை அமைந்திருந்த பிரதேசம் ஒரு கடலேரி சதுப்பு நிலம் ஆகும். அதனால் பிரயாணம் செய்பவர்கள் வளைந்து வளைந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் மேட்டு நிலப்பரப்பால் செல்லவேண்டும். தப்பித்தவறி சதுப்பு நிலங்களுக்குள் இறங்கிவிட்டால் பாதைக் குறிப்பைப் பார்த்து வெளியேற முடியாது. அல்லற்பட வேண்டும். நான் யாழ்ப்பாணம் இருந்து திரும்பி வரும் பொழுது கொம்படிப்பாதையை அண்மிக்கும் பொழுது மாலை நேரம் ஆகிவிட்டது. அதனால் உரிய பாதையைத் தவறவிட்டு நானும் மற்றும் இருவரும் துவிச்சக்கர வண்டியோடு சதுப்பு நிலசேற்றுப்பகுதிக்குள் இறங்கிவிட்டோம். பொழுதும் இருண்டு விட்டதால் பாதையைக் குறிப்பிட்டு வெளியேற முடியாமல் ஏறக்குறைய அதிகாலை நான்கு மணிவரை அந்த சேற்றுப் பகுதிக்குள்ளேயே அலைந்து திரிந்து முரசுமோட்டைப் பக்கமாக வெளியேறினோம். அவ்வாறு அந்த இரவு சேற்றுக்குள்ளேயே நடந்து திரிந்ததால் எனக்கு ஒருவித இழுப்பு நோய் ஏற்பட்டது. அவ்வாறான இழுப்பு நோய் பிந்திய நாட்களில் ஆஸ்த்மா நோயாக மாறிவிட்டது.

சில நாட்களின் பின் கூடிய பிரஜைகள் குழுக் கூட்டத்தில் மணலாற்றுப் பிரதேசத்தைச் சிங்கள இராணுவம் ஆக்கிரமித்து அப்பிரதேசத்தில் சிங்கள மக்களைக் குடியேற்றிய விடயத்தை மணலாற்றுப் பிரதேசத்தில் நிலை கொண்டிருந்த உயர் இராணுவ அதிகாரியோடு தொடர்பு கொண்டு பேச்சுவார்த்தை நடாத்தி அப்பிரதேசத்தில் சிங்கள மக்களைக் குடியேற்றுவதைத் தடுக்க வேண்டும் என்று ஏகமனதாக ஒரு தீர்மானம் பிரஜைகள் குழுவால் நிறைவேற்றப்பட்டது. அத்தீர்மானத்தின் அடிப்படையில் அரசாங்க அதிபரின் தலைமையில் இந்திய இராணுவத்தின் பாதுகாப்போடு பிரஜைகள் குழு உறுப்பினரும் பராக்கிரமபுர இராணுவ முகாமிற்குச் சென்று உயர் இராணுவ அதிகாரியோடு குறிப்பிட்ட விடயம் சார்பில் கலந்துரையாடுவதற்கு ஏற்ற ஒழுங்குகள் செய்து திகதியும் நிர்ணயிக்கப்பட்டது. அத்திகதியில் இந்திய இராணுவப் பாதுகாப்போடு அரசாங்க அதிபர், கச்சேரி உயர் அதிகாரிகள் சிலர் உட்பட பிரஜைகள் குழு உறுப்பினர்களும் பராக்கிரமபுர இராணுவ முகாமிற்குச் சென்று உயர் அதிகாரி யோடு மணலாற்றுப் பிரதேசம் பற்றி விவாதிக்கப்பட்டது.

அவ்வேளை பிரஜைகள் குழுத் தலைவராகிய நான் "அண்மையில் மகாவலி L வலையம் என அரசாங்கத்தால் வர்த்தமானி அறிவித்ததன் மூலம் ஆக்கிரமிக்கப்பட்டு இருக்கும் குறிப்பிட்ட மணலாற்றுப் பிரதேசம் முழுவதும் இலங்கையின் வரலாற்றுக் காலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல் தமிழ் மக்கள் குடியேறி வாழ்ந்த பிரதேசமாகும். இந்நிலையில் தற்போது குறிப்பிட்ட பிரதேசத்தில் குடியிருந்த தமிழர்களை ராணுவ அச்சுறுத்தல் மூலம் வெளியேற்றிவிட்டு அப்பகுதியில் சிங்கள மக்களைக் குடியேற்றி இருப்பது முற்று முழுதாக இன ரீதியான ஆக்கிரமிப்பே ஆகும். இப்பிரதேசத்தில் தமிழர்களுக்கு உறுதிகள் மூலம் உரிமையளிக்கப்பட்ட காணி நிலங்கள் உண்டென்பதை அத்தாட்சிப்படுத்தக் கூடிய ஆவணங்கள் உண்டு. அத்துடன் இப்பிரதேசத்தில் சிங்கள மக்கள் குடியிருந்துள்ளார்கள் என்பதை உறுதிப்படுத்தக் கூடிய ஆதாரங்கள் எதுவுமே இல்லை. குறிப்பிட்ட இப்பிரதேசத்தில் சிங்களப் பேரில் ஒரு கிராமமோ ஒரு ஆறோ ஒரு மலையோ இருந்ததாகக் கூட எந்த ஒரு ஆவணமும் இல்லை. ஆகவே இப்பிரதேசத்தில் அத்துமீறி சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டிருப்பது ஓர் ஆக்கிரமிப்பு நடவடிக்கையே ஆகும். சிங்கள மக்களும் தமிழ் மக்களும் சகோதரர்கள் போல் ஒற்றுமையோடு ஒன்றுபட்டு வாழ வேண்டும் என்ற தங்களைப் போன்ற சிங்களப் பெரியாரின் ஆலோசனைகளை மிகச் சரியானதே என நாம் ஏற்றுக் கொள்கிறோம். அந்நிலையில் தமிழர்களின் பாரம்பரிய பிரதேசத்தை சிங்கள மக்கள் ஆக்கிரமித்துக் குடியேறுவது சரியாகுமோ? என்பதை நீங்கள் ஆழமாகச் சிந்திக்க வேண்டும். அவ்வாறு தமிழரும் சிங்களவரும் ஒற்றுமையாக வாழ வேண்டும் என்று நீங்களும் உணர்ச்சி பூர்வமாக உறுதியாக சிந்திப்பது உண்மையானால், அத்துமீறி மேற்கொள்ளப்பட்ட சிங்களக் குடியேற்றத்தை வாபஸ் பெற வேண்டும்" என வற்புறுத்திக் கேட்டுக் கொண்டேன்.

அதற்குப் பதிலளித்த இராணுவத்தளபதி அவர்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கும் சிங்களக் குடியேற்றம் பற்றிய விடயங்கள் எதனோடும் இராணுவத்தரப்புக்கு எவ்வித தொடர்புகளும் இல்லையென்றும், அவை அனைத்துக்கும் அரசாங்கமே பொறுப்பாளியாகும். ஆகவே நீங்கள் அரசாங்க அதிகாரிகளுடன் தான் இவ்விடயம் பற்றிப் பேசவேண்டும் என்றும் கூறினார். அதனால் இராணுவ அதிகாரியோடு தொடர்ந்து பேச முடியாத நிலை ஏற்பட்டது. அந்நிலையில் காணி நில உரிமைகளோடு தொடர்புடைய உயர்மட்ட அரச அதிகாரிகள், நிலஅளவை உத்தியோகத்தர்கள், நீர்ப்பாசன துறை அதிகாரிகள், சிவில் உரிமை அதிகாரிகள் ஆகியோரோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்பு கொண்டு பேச்சுவார்த்தை நடத்துவதற்கு ஏற்ற ஒழுங்குகளை முல்லைத்தீவு அரசாங்க அதிபர் செய்யவேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

மேற்கண்டவாறு தீர்மானிக்கப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் முல்லைத்தீவு அரசாங்க அதிபர் அவர்கள் குறிப்பிட்ட துறை சார்ந்த அதிகாரிகளோடு ஒரு மாத கால இடைவெளியின் பின் பராக்கிரமபுர இராணுவமுகாமிலேயே உயர் அதிகாரிகள் கொண்ட குழுவோடு முல்லைத்தீவு அரச அதிபர், துறைசார்ந்த தலைமை அதிகாரிகள், பிரஜைகள் குழு உறுப்பினர்கள் என்போர் சந்தித்து மேற்குறிப்பிட்ட விடயம் சார்பாக விவாதிப்பதற்கு திகதி குறிப்பிடப்பட்டது. அத்திகதியில் இந்திய இராணுவப் பாதுகாப்போடு மேற்குறிப்பிட்டோர் பராக்கிரமபுர இராணுவ முகாமைச் சென்றடைந்தோம். அங்கு சமூகமளித்திருந்த அரச அதிகாரிகளோடு குறிப்பிட்ட விடயம் சார்பான உரையாடல் ஆரம்பமானது. அதன் போது முதலில் அப்பிரதேசத்தில் தமிழ் மக்களுக்கு உரிமையளிக்கும் காணி உறுதிகள் அதிகாரிகளிடம் சமர்ப்பிக்கப்பட்டன. அத்துடன் அப்பிரதேசத்தில் அமைந்திருந்த கிராமங்களின் ஆறுகள்,மலைகள், வெளிகள் என்பவற்றின் பெயர்ப்பட்டியல் ஒன்றும் அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டன. அப்பட்டியல் இங்கே தரப்படுகிறது.

அரியக்குண்டான், பிலயிருப்புகுளம், ஆள்வெட்டிக்குளம், தனிக்கல்லுகுளம், பனையமுறிப்பு, உடையாமடுவெளி, வீரகண்டமுறிப்பு, கடல் இறாஞ்சிக்குளம், ஆலங்குளம், நவாலயங்குளம், சிவாலயங்குளம், சாம்பான்குளம், கும்பகர்ணன் மலை, முந்திரியைக்குளம், ஆமையன்குளம், காட்டு தட்டாமலைக்குளம், மண்கிண்டிமலை, சிறு பீடையாறு, சகலாத்துவெளி, சூரியனாறு, சம்மளம்குளம், மரையடித்தகுளம், வேப்பங்குளம், இராமன்குளம், ஒலுவாக்கல்லு, பாண்குளம், கொக்கைச்சான்குளம், வேலங்குளம், காரவாய்க்கால்குளம், பாலாற்றுக்குளம், கரியல்குளம், மாவடிக்குளம், தொல்லைப் பிலவு, களகளப்பான்குளம், மான்ஈன்றகுளம், மருதங்குளம், அம்மைச்சி புளியடிக்குளம், முடவன் குடியிருப்புகுளம், செம்பியன்குளம், வண்ணாகரியல்குளம், நித்தகைக்குளம், கருவேப்பங்குளம், சேனப்பன்குளம், கிரிமட்டிக்குளம், பூமடைக்கல்லு, கீரிக்குளம், பொக்கணிக்கல்லு, முரலிமோட்டை, கல்லடியாறு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவற்காய்குளம், பறயனாறு, சலப்பையாறு, வெள்ளைக்கல்லடி, மதவளசிங்கம்குளம், தண்ணிமுறிப்பு குளம், அக்கரைவெளி, புளியமுனை, சிறிவில், குடாத்தரை, வில்லு, வெளிக்குளம், ஆண்டான்குளம், கலிங்கியாறு, செம்பன்மடு, லாம்புதூக்கினகுளம், நெடுங்கேணியா முறிப்பு, காயாமடு, ஒதியமலை, பெரியகுளம், பட்டிக்குடியிருப்பு, கற்குளம், அரியாமடு, மருதோடை, ஊஞ்சால்கட்டி, கோரமோட்டை, வெடிவைத்தகல்லு, புளியங்குளம், காஞ்சூரமோட்டை, காட்டுப் பூவரசங்குளம், பட்டடைபிரித்தகுளம் மேற்கண்டவாறு அப்பிரதேசத்தில் உள்ள காணி உரிமை உறுதிகளையும் அப்பிரதேசத்தில் உள்ள கிராமங்கள் மலைகள், ஆறுகள், வெளிகள் என்பனவற்றின் பெயர்ப்பட்டியலையும் தமிழர்களே அப்பிரதேசத்தில் குடியமைந்து இருந்திருக்கிறார்கள் என்பதை ஆதாரபூர்வமாக அரச அதிகாரிகள் ஆகிய நீங்கள் ஒப்புக் கொள்கிறீகளா? அல்லது சிங்கள மக்கள் அப்பிரதேசத்தில் குடியமைந்து இருந்திருக்கிறார்கள் என்பதை உறுதிப்படுத்துவதற்கான ஆதாரங்கள் எவற்றையாவது முன்வைக்க முடியுமா?" என்று கேள்வியெழுப்பினேன்.

எம்மால் முன்வைக்கப்பட்ட ஆதாரங்களை அறிந்து அதிர்ச்சியடைந்த அதிகாரிகள் மௌனம் சாதித்தனர். மேலும் "குறிப்பிட்ட பிரதேசத்தை மகாவலி L வலயம் என பெயரிட்டு ஆக்கிரமித்து இருக்கிறீர்கள். ஆனால் மகாவலி நீர்த்தேக்கத்தில் இருந்து குறிப்பிட்ட பிரதேசத்திற்கு நீர்வழங்கல் மேற்கொள்வதற்கு நீர்மட்ட அளவீடுகள் எதுவாயினும் மேற்கொள்ளப்பட்டு இருக்கிறதா? அப்படி எதுவும் நடைபெற்றதாக நான் அறியவில்லை. மேலும் அவ்வாறு எதிர்காலத்தில் மகாவலித் திட்டத்தில் இருந்து இப்பிரதேசத்துக்கு நீர் வழங்கலை மேற்கொள்ளக் கூடிய நீர்மட்ட உயர் அளவு நிலையில் இப்பிரதேசம் அமைந்து இருக்கிறதா? " என்றும் கேள்வி எழுப்பினேன். இவ்வாறான நிலையில் அரச அதிகாரிகள் எவரும் இப்பிரதேசத்தில் வரலாற்றுக் காலத்தில் அங்கு சிங்கள மக்கள் குடியிருந்துள்ளார்கள் என்பதை நிருபிக்கக் கூடிய ஆதாரங்கள் எவற்றையும் முன்வைக்கவில்லை. ஆகவே விவாதத்தின் முடிவில் "அரசாங்கத்தில் உயர்மட்டத்துடன் இவ்விடயம் பற்றிக் கலந்துரையாடியபின் உங்களுக்கு பதில் தரப்படும்" என்று மாத்திரம் கூறினார்கள். அத்துடன் கலந்துரையாடுவதற்குச் சென்றிருந்த எங்கள் அனைவருக்கும் வந்திருந்த அரச அதிகாரிகளுக்கும் ராணுவ முகாமில் மதிய விருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளிக்கப்பட்டது. விருந்தை முடித்துக் கொண்டு முல்லைத்தீவை வந்தடைந்தோம்.

இந்நிலையில் சில நாட்களின் பின் கூடிய பிரஜைகள் குழுக் கூட்டத்தில் இந்திய இராணுவத்தின் அடாவடித்தனங்கள் பற்றி பொதுமக்களால் தெரிவிக்கப்பட்ட முறையீடுகள் ஆலோசனைக்கு எடுக்கப்பட்டன. முறையீடுகளை ஆராய்ந்த பிரஜைகள் குழு இந்திய இராணுவத்தின் நடவடிக்கைகளுக்குக் கண்டனம் தெரிவிக்கும் முகமாக முல்லைத்தீவு மாவட்ட மக்கள் அனைவரும் பங்கு பற்றக்கூடியதாக ஒரு பொதுக்கூட்டம் நடாத்த வேண்டும் என ஏகமனதாக தீர்மானித்தது. அதன் அடிப்படையில் முல்லைத்தீவு கடற்கரையில் கூட்டம் நடைபெறும் என்றும், அதில் முல்லைத்தீவு மாவட்ட மக்கள் அனைவரும் பங்கு கொள்ள வேண்டுமென்றும் பிரசாரம் செய்யப்பட்டது. குறிப்பிட்ட திகதியன்று முல்லைத்தீவு மாவட்டத்தின் பல்லாயிரக்கணக்கான மக்கள் பங்கு கொண்டனர். அக்கூட்டத்துக்கு தலைமைவகித்து உரையாற்றிய பொழுது இந்திய ராணுவத்தின் அடாவடித்தனங்கள் பற்றி இந்திய மத்திய அரசுக்கு அனுப்புவதற்கு தயாரிக்கப்பட்டிருந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டிருந்த அம்சங்களைத் தெளிவுபடுத்தி உரையாற்றினேன்.

அதாவது இலங்கையில் நடைபெற்ற விடுதலைப் போராட்டத்தினால் மக்கள் அனுபவித்த துன்ப துயரங்களில் இருந்து விடுபடுவதற்கு உதவியாக இந்திய அரசால் மேற்கொள்ளப்பட்ட சமாதான நடவடிக்கையால் இலங்கைத் தமிழருக்கு விடுதலையும் அமைதியும் கிடைக்கும் என கருதப்பட்டது. அதன் அடிப்படையில் அமைதிப்படை என்ற பெயரில் இந்திய இராணுவத்தின் வருகையை தமிழ் மக்கள் இருகரம் கூப்பி வரவேற்றார்கள். இந்திய ராணுவ அதிகாரிகளுக்கு மாலை சூட்டி மகிழ்ந்தார்கள். அவ்வாறு தமிழ் மக்கள் அடைந்த மகிழ்ச்சி நீண்ட நாட்களுக்கு நிலைக்கவேயில்லை. சிறிது கால எல்லைக்குள் விடுதலைப் புலிகளுக்கும் இந்திய ராணுவத்துக்கும் இடையில் மோதல்கள் உருவாகின. தமிழ்ப் பிரதேசம் முழுவதிலும் ஆங்காங்கு இந்திய ராணுவத்தின் தடைமுகாம்கள் அமைக்கப்பட்டன. ஆங்காங்கு இந்திய இராணுவத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே மோதல்கள் நடைபெற்றன. உண்மையாகவே இந்திய இராணுவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே மோதல் உருவாகியமைக்கு உரிய அடிப்படைக் காரணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னவென்பது பொதுமக்களுக்குத் தெளிவாகத் தெரிவிக்கப் படவில்லை. தமிழர்களைப் பாதுகாக்கவெனவந்த இந்திய ராணுவம் புலிகளின் ஆதரவாளர்கள் என்று சந்தேகித்த தமிழ் மக்களை வேட்டையாட ஆரம்பித்தது.

பல்வேறு துன்ப துயரங்களையும் அடாவடித்தனங்களையும் மேற்கொள்வதை முல்லைத்தீவு பிரஜைகள் குழு வன்மையாகக் கண்டிப்பதோடு அவ்வாறான நடவடிக்கைகளைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று இந்திய மத்திய அரசைக் கேட்டுக் கொள்வதாக அம்மகஜரில் தெரிவிக்கப்பட்டது. என்னைத் தொடர்ந்து மற்றும் சில பிரஜைகள் குழு உறுப்பினர்களும் பெரியார்கள் சிலரும் உரையாற்றினர். இவ்வாறான கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளை முல்லைத்தீவில் நிலை கொண்டிருந்த இந்திய இராணுவ வீரர்கள் கூட்டம் நடைபெற்ற இடத்தின் சுற்றுப் புறங்களில் மறைந்து நின்று அவதானித்துக் கொண்டிருந்தனர். சில நாட்களின் பின்னர் வடமாகாணத்தில் உள்ள பிரஜைகள் குழுக்களின் ஒன்றியக் கூட்டம் ஒன்று யாழ்ப்பாணத்தில் கூட்டப்படுவதாகவும் அக்கூட்டத்திற்கு முல்லைத்தீவு பிரஜைகள் குழுவின் சார்பில் ஒருவரை அனுப்புமாறும் ஓர் அழைப்புக் கடிதம் கிடைத்தது. அதன் அடிப்படையில் குழுவின் தலைவராகிய என்னையே ஒன்றியக் கூட்டத்தில் பங்கெடுக்க முல்லைத்தீவு பிரஜைகள் குழு அனுமதித்தது. அவ்வாறு யாழ்ப்பாணத்தில் கூட்டப்பட்ட கூட்டத்தில் நானும் கலந்து கொண்டேன். கூட்டத்தில் சமுகமளித்திருந்த பிரதிநிதிகள் அனைவரும் இந்திய ராணுவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே மோதல்கள் நடப்பதால் தமிழ் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல்கள் பற்றியும் துன்ப துயரங்களையும் விலாவாரியாக விளக்கி உரை நிகழ்த்தினர்.

அவ்வாறான நிலையில் இந்திய ராணுவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடைபெறும் மோதல்களை முடிவுக்குக் கொண்டுவரும் வகையில் அவர்களிடையே ஒரு சமரசப் பேச்சுவார்த்தைக்கு ஆவன செய்ய வேண்டுமென ஒன்றியக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. அத்தீர்மானத்தை யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்த இந்திய ராணுவத் தளபதி திரு கல்கட் அவர்களுக்கு அனுப்பி அவரை பிரஜைகள் குழுக்களின் ஒன்றியப் பிரதிநிதிகள் சந்திப்பதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுமதி பெறுவதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இரண்டொரு தினங்களிலேயே அவரை சந்திப்பதற்கான அனுமதி கிடைத்தது. யாழ்ப்பாண பிரஜைகள் குழுத்தலைவர் வைத்திய கலாநிதி திரு. நச்சினார்க்கினியர் தலைமையில் ஒன்றியப் பிரதிநிதிகள் திரு. கல்கட் அவர்களை அவரின் காரியாலயத்தில் சந்தித்து இந்திய ராணுவத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே நடைபெறும் மோதல்களால் இலங்கைத் தமிழர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள இன்னல்களையும், உயிர்ச்சேதங்களையும் அவமான நிகழ்வுகளையும் மிகத் தெளிவாக திரு.கல்கட் அவர்களுக்கு விளக்கிக் கூறப்பட்டது. தமிழ் மக்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கும் அவலநிலைகளை தவிர்க்கும் முகமாக இந்திய ராணுவத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே மோதல்களை தவிர்க்கும் முகமாக ஒரு சமரச முயற்சியை மேற்கொள்ள வேண்டுமென திரு.கல்கட் அவர்களிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டது

அக்கூட்டத்தில் திரு.கல்கட் அவர்கள் ஒன்றியப் பிரதிநிதிகள் கேட்டுக் கொண்டது போல் தங்களுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே நடைபெறும் மோதல்களை தடுத்து நிறுத்தும் முகமாக ஒரு பேச்சுவார்த்தை மேசைக்கு விடுதலைப் புலிகளை வருமாறு தாங்கள் ஒரு வேண்டுகோள் விடுத்ததாகவும் அதனை ஏற்று அவர்கள் பதில் தரவில்லை எனவும் விளக்கமாகக் கூறினார். அவ்வேளையில் குறிப்பிட்ட விடயம் பற்றி முன்கூட்டியே அறிந்திருந்த ஒன்றியப்பிரதிநிதி ஒருவர், பேச்சு வார்த்தைக்கு வருமாறு தாங்கள் கடிதம் அனுப்பியதாகக் கூறிய விடயம் பற்றி புலிகள் இயக்கப் பொறுப்பாளர்கள் சிலர் "தாங்கள் அனுப்பியதாக கூறிய கடிதம் தங்களுக்கு கிடைக்கவில்லை" என கருத்துத் தெரிவித்தார்கள் என்று கூறினார். ஆகவே தாங்கள் அனுப்பிய கடிதத்தின் பிரதி ஒன்றை எங்களிடம் கையளித்தால் அதனை புலிகள் பொறுப்பாளர்களிடம் நேரில் கையளித்து சமரச நடவடிக்கையை முன்னெடுக்கலாம் என ஒன்றியப் பிரதிநிதிகள் தெரிவித்தனர். அதனை ஏற்றுக் கொண்ட திரு.கல்கட் அவர்கள் அவ்வாறான அழைப்புக் கடிதம் இலங்கையில் உள்ள இந்தியத் தூதுவர் திரு டிக்சிற் அவர்கள் மூலம் தான் அனுப்பப்பட்டது எனவும் அவரை நேரில் கண்டு ஒன்றியப் பிரதிநிதிகள் பேசவிரும்பினால் அதற்கான ஒழுங்கை உடனடியாகச் செய்து இன்றைக்கே உங்களை உலங்கு வானூர்தி மூலம் திரு.டிக்சிற் அவர்களைக் காண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்புக்கு அனுப்பி வைக்கலாம் என திரு கல்கட் அவர்கள் தெரிவித்தார்.

அதனை ஏற்றுக் கொண்ட ஒன்றியப் பிரதிநிதிகள் அன்று மதியமே கொழும்புக்குச் செல்வதற்காக ஆயத்தமாகினர். திரு கல்கட் அவர்கள் ஒன்றியப் பிரதிநிதிகளை ஓர் இராணுவ வாகனத்தில் ஏற்றி மண்டான் என்ற இடத்துக்கு அழைத்துச் சென்று அங்கு தரித்து நின்ற உலங்கு வானூர்தியில் இரத்மலான விமான நிலையத்துக்கு அனுப்பி வைத்தார். எம்மை இந்திய தூதுவர் இல்லத்துக்கு அழைத்துச் செல்வதற்கு இந்திய தூதுவர் ஆலய வாகனம் ஒன்று இரத்மலானைக்கு வந்திருந்தது. அவ்வாகனத்தில் இந்திய தூதுவர் ஆலயத்தை சென்றடைந்தோம். நாம் அங்கு சென்றடைந்து சிறிது நேரம் ஓய்வெடுத்தபின் கனம் டிக்சிற் அவர்கள் சமூகமளித்து பேச்சுவார்த்தை ஆரம்பித்தார். விடுதலைப் புலிகளுக்கும் இந்திய ராணுவத்திற்கும் இடையே மோதல்கள் நடைபெறுவதால் தமிழ்ப் பொது மக்களுக்கு ஏற்பட்டுள்ள இடர்பாடுகளையும் துன்ப துயரங்களையும் எமது சார்பில் பிரதிநிதிகள் விபரமாக எடுத்துரைத்தனர். அதனைச் செவிமடுத்த திரு.டிக்சிற் அவர்கள் இந்திய அரசு இலங்கைத் தமிழ் மக்களுக்கும் அரசுக்கும் இடையே ஏற்பட்டுள்ள மோதல்களை முடிவுக்குக் கொண்டுவரவும் தமிழ் மக்களின் அரசியல் பிரச்சனையை தமிழ் மக்களுக்கு ஆறுதல் அளிக்கும் முறையில் ஓர் அரசியல் தீர்வை நடைமுறைப்படுத்துவதற்கும் உதவிபுரியும் நோக்கோடுதான் இந்திய ராணுவம் இலங்கைக்கு வருகை தந்தது. ஆனால் நாம் எதிர்பாராத வகையில் விடுதலைப்புலிகள் எம்முடன் முரண்பட்டதால் எம்மிடையே மோதல்கள் உருவாகின என்பதை இலங்கைத் தமிழ் பொதுமக்கள் தெளிவாக விளங்கிக் கொள்ள வேண்டும்." என்றார்.

அவரின் கூற்றுச் சார்பாக எமது பிரதிநிதிகள் கருத்து தெரிவிக்கையில் "புலிகளுக்கும் இந்திய அரசுக்கும் இடையே ஏற்பட்ட முரண்பாடுகள் பற்றி தெளிவாகவும் திட்டவட்டமாகவும் எங்களுக்கு எதுவும் தெரியவில்லை" என்று தெரிவித்ததோடு "இந்நிலையில் இலங்கைத் தமிழ்ப் பொதுமக்களுக்கு ஏற்பட்டுள்ள துன்ப துயரங்களை நிவர்த்தி செய்யும் வகையில் இந்திய அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே ஓர் சமரச நிலையை ஏற்படுத்தி ஓர் அமைதிச் சூழ்நிலையை உருவாக்க தாங்கள் உதவவேண்டும். என்பதே எங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோரிக்கை" ஆகும் என்று எடுத்துரைத்தனர். அத்துடன் "இந்திய அரசுடன் பேச்சு வார்த்தைக்கு வருமாறு தங்கள் தரப்பால் ஓர் அழைப்புக் கடிதம் அனுப்பப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. ஆனால் புலிகள் தரப்பு அவ்வாறான கடிதம் எதுவும் கிடைக்கவில்லை என தெரிவித்தது. அதனால் தங்களால் அனுப்பப்பட்ட அழைப்புக் கடிதத்தின் பிரதியொன்றை எம்மிடம் கையளித்தால் அதனை புலிகள் தரப்பிற்கு சமர்ப்பித்து ஓர் சமரச பேச்சு வார்த்தையை ஆரம்பிக்க ஆவன செய்யலாம்" என பிரதிநிதிகள் தலைவர் Dr.நச்சினார்க்கினியர் எடுத்துரைத்தார். அதனை ஏற்றுக் கொண்ட டிக்சிற் அவர்கள் அழைப்புக் கடித பிரதியொன்றைத் தயார் செய்து எம்மிடம் கையளித்தார். அத்துடன் பிரஜைகள் குழு ஒன்றிய பிரதிநிதிகளுக்கு ஓர் தேனீர் விருந்தளித்தார். எம்மை கொழும்புக்கு ஏற்றி வந்த உலங்கு வானூர்தி மூலம் யாழ்ப்பாணம் சென்றடைந்த ஒன்றியப் பிரதிநிதிகள் Dr.நச்சினார்க்கனியர் தலைமையில் புலிகளின் பிரதித்தலைவர் மாத்தையா என்பவரிடம் கடிதத்தைக் கையளிக்க முயற்சித்தோம்.

முதலில் அவர் முல்லைத்தீவு பிரதேசத்தில் தங்கியிருப்பதாக அறிந்து அங்கு சென்று சில தினங்கள் தங்கியிருந்து அவரைக் காண்பதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டது. ஆனால் அங்கு அவரைச் சந்திக்க முடியவில்லை. அவர் அங்கிருந்து வட்டக்கச்சிப் பகுதிக்குச் சென்று விட்டார் என்று செய்தி கிடைத்தது. அதனால் அவரை அங்கு சந்திக்கச் சென்று கிளிநொச்சிக்கு வந்து அங்கு தங்கியிருந்து அவரைக் காண்பதற்கு முயற்சித்தோம். ஓர் குறிப்பிட்ட தினத்தில் வட்டக்கச்சியில் அவரைச் சந்திக்க முடியுமென செய்தி கிடைத்தது. அவரின் செய்திப்படி வட்டக்கட்சி சென்றோம். நாங்கள் அங்கு சென்ற சமயத்தில் வட்டக்கச்சி பிரதேசம் முழுவதிலும் இந்திய ராணுவத்தின் சுற்றி வளைப்புத் தேடுதல் நடைபெற்றது. அதனால் வட்டக்கச்சியில் அவரைச் சந்திக்க முடியாத நிலையேற்பட்டது. அவ்வாறான நிலையில் உண்ணாவிரதம் இருந்த திரு.திலிபன் மரணமடைந்ததால் இந்திய ராணுவத்திற்கும் புலிப்போராளிகளுக்கும் இடையே உக்கிர மோதல் உருவாகியது. அதனால் நாம் மேற்கொண்டு இருந்த சமரச முயற்சி கைநழுவிப்போனது. அத்துடன் பிரஜைகள் குழுக்களின் முயற்சிகளிலும் தளர்வு ஏற்பட்டது.

************



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 24. ஈரோஸ் இயக்கம் சார்பில்பொதுத்தேர்தலில் சுயேட்சை குழுவில் ஈடுபாடு.

1988ஆம் ஆண்டில் நடைபெற்ற பொதுத்தேர்தலின் போது வடமாகாணத்தில் ஈரோஸ் இயக்கத்தின் சார்பில் சுயேட்சை குழுக்கள் ஆக தேர்தலில் போட்டியிடும் முயற்சிகளை ஈரோஸ் அமைப்பு மேற்கொண்டது. வன்னித் தேர்தல் மாவட்டத்தில் எனது தலைமையில் ஒரு சுயேட்சைக்குழுவை நிறுத்துவது பற்றி ஈரோஸ் அமைப்பினர் என்னை அழைத்துப் பேச்சு வார்த்தை நடத்தினர். அக் காலகட்டத்தில் தமிழ் மக்களின் விடுதலைக்காக பலபோராட்டக்குழுக்கள் ஈடுபட்டு இருந்தன. அக் குழுக்களுக்கு இடையேயும் பலவித முரண்பாடுகளும் இடையிடையே மோதல்களும் நடந்து கொண்டு இருந்தன. அதனால் பொதுத்தேர்தலில் ஈடுபட்டு வெற்றி பெற்று பொதுமக்களுக்குத் தொண்டு செய்யும் அமைதிச் சூழ்நிலை அரிதாகவே இருந்தது.

இக்கருத்தின் அடிப்படையில் ஈரோஸ் அமைப்பின் தலைமைப்பீடத்துடன் தேர்தலைப்பற்றி உரையாடிய பொழுது, "விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு இருக்கும் அனைத்துக்குழுக்களின் அனுமதியோடு தான் இவ்வாறு சுயேட்சைக்குழுவாக போட்டியிடத் தீர்மானித்து இருக்கின்றீர்களா?" என்று கேட்டேன். அதற்கு தலைமைப்பீடம் "ஏனைய போராட்டக்குழுக்களோடு தொடர்பு கொண்டு உரையாடியதாகவும் அவ்வாறு தாங்கள் மேற்கொண்டிருக்கும் தேர்தல் முயற்சியை அனுமதிப்பதாகவும் ஆதரவு அளிப்பதாகவும் தெரிவித்து இருக்கின்றார்கள்" என்று கூறினார்கள்.

நான் மேலும், "இயக்கங்கள் அனைத்திலும் ஒருமைப்பாடு இல்லாமல் நாம் தேர்தலில் ஈடுபட்டால் ஒரு காலகட்டத்தில் இயக்கங்களிடையே முரண்பாடுகள் ஏற்பட்டால் தேர்தலில் ஈடுபடுபவர்கள் பலவித இடர்பாடுகளுக்கு இலக்காக வேண்டி வரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது என்னுடைய அறிவுறுத்தலாகும்'' என்று கூறினேன். ''நாம் தேர்தலுக்கு வேட்புமனுதாக்கல் செய்த பின் தேர்தல் சார்பில் ஏதாவது இயக்கங்கள் முரண்பட்டால் எம்மால் தாக்கல் செய்யப்படும் வேட்புமனுக்களை வாபஸ் பெறுவதற்குரிய முயற்சியை மேற்கொள்ளலாம். என தாங்கள் திட்டவட்டமாக தீர்மானித்தால் மாத்திரம் நான் வன்னி மாவட்ட தேர்தலில் ஈடுபடும் சுயேட்சைக்குழுவிற்கு தலைமைதாங்கி வேட்பு மனுவைத்தாக்கல் செய்வேன்'' என்றும் கூறினேன். எனது கோரிக்கையையும் முடிவையும் ஈரோஸ் அமைப்புத்தலைவர் திரு. பாலகுமார் அவர்கள் ஏற்றுக்கொள்வதாக உறுதியளித்தார்.அதனடிப்படையில் எனது தலைமையில் ஒரு சுயேட்சைக்குழு வேட்புமனு வவுனியா கச்சேரியில் தாக்கல் செய்யப்பட்டது. மேற்கூறியவாறு வேட்புமனுதாக்கல் செய்து விட்டு எனது முக்கியமான கமத்தொழில் முயற்சிகளில் ஈபட்டிருந்தேன்.

ஏறக்குறைய இரண்டு கிழமைகள் கடந்த நிலையில் ஈரோஸ் இயக்கம் தேர்தலில் ஈடுபடுவதை மாற்று இயக்கங்கள் கடுமையாகக் கண்டிப்பதாக செய்திகள் வெளிவந்தன. அதனால் உடனடியாக ஈரோஸ் தலைவர் திரு.பாலகுமார் அவர்களை நேரில் சந்தித்து மாற்று இயக்கங்கள் ஈரோஸ் தேர்தலில் ஈடுபடுதை எதிர்ப்பதான செய்திபற்றி கலந்துரையாடினேன். அவ்வாறான ஒரு நிலை ஏற்பட்டிருப்பதாகவே திரு.பாலகுமார் ஒப்புக்கொண்டடார். அதனால் தேர்தல் பற்றி வேட்புமனு தாக்கல் செய்யமுன் திரு.பாலகுமார் ஒப்புக்கொண்டபடி வேட்பு மனுக்களை வாபஸ் பெறுமாறு திரு. பாலகுமார் அவர்களிடம் கேட்டுக்கொண்டேன். வேட்புமனுவை வாபஸ் பெறும் கால எல்லை கடந்து விட்டதால் வேட்புமனுவை வாபஸ் பெறமுடியாத நிலை ஏற்பட்டிருப்பதாக கூறினார்.அப்படியானால் நாம் தேர்தலில் ஈடுபடுவதை விலக்கிக்கொண்டுள்ளோம் என்ற மாதிரியான ஓர் துண்டுப்பிரசுரத்தை அச்சிட்டு வாக்காளர் மத்தியில் விநியோகிக்குமாறு வற்புறுத்தினேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனை ஏற்று அவ்வாறான ஓர் துண்டுப்பிரசுரம் அச்சிடப்பட்டு வன்னிமாவட்டத்தில் விநியோகிப்பதற்கான ஒருபகுதி துண்டுப்பிரசுரங்கள் என்னிடம் தரப்பட்டன. அத்துண்டுப்பிரசுரங்களோடு நானும் தேர்தலில் ஈடுபடுவதில் இருந்து விலகிக்கொண்டுள்ளேன். அதனால் வாக்காளர்கள் எவரும் எனக்கு வாக்களிக்கவேண்டாம் எனத்தெரிவிக்கும் ஓர் துண்டுப்பிரசுரத்தை வன்னிமாவட்டத்தில் விநியோகித்துவிட்டு அமைதியாக இருந்தேன்.

ஈரோஸ் அமைப்பாளர்கள் ஏனைய மாவட்டங்களில் அவ்வாறான துண்டுப்பிரசுரங்களை வாக்காளர் மத்தியில் விநியோகிக்கவில்லை. அந்நிலையில் தேர்தல் பிரசாரங்கள் எதுவுமே நடைபெறாத நிலையில் ஆங்காங்கு தேர்தலில் ஈடுபடுபவர்களுக்கு மக்கள் வாக்களித்தார்கள். அவ்வாறு வாக்களிக்கப்பட்டு பெற்றி பெற்ற வேட்பாளர்களுள் பாராளு மன்றத்துக்குச் சென்ற ஒருவர் பதவிவிலகியதால் அவரின் இடத்திற்கு அடுத்த படியில் இருந்த என்னை பாராளுமன்ற உறுப்பினராக தெரிவுசெய்து நியமித்திருப்பதாக தேர்தல் ஆணையாளர் வர்த்தமானி மூலம் பகிரங்கப்படுத்தியிருந்தார். அத்துடன் வவுனியா அரசாங்க அதிபரும் என்னை பதவியேற்குமாறு கடிதமனுப்பியிருந்தார். இயக்கங்களிடையே தேர்தல் பற்றி ஒருமைப்பாடு இல்லையெனில் தேர்தலில் ஈடுபடுவதில்லையென்று ஆரம்பத்தில் நான் எடுத்தமுடிவின் படி பாராளுமன்றத்துக்குச் சென்று பதவியேற்பதைத் தவிர்த்துக்கொண்டேன். இயக்கங்களின் கருத்துமுரண்பாட்டினால் குறுகிய காலத்துக்குள் பாராளுமன்றம் சென்று பதவியேற்ற உறுப்பினர்களும் விலகிச்செல்லும் நிலை ஏற்பட்டது.

**********



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

දුරකථන අංක / தொலைபேசி இல / Telephone No.

| | | | |
|---|---|---|---|
| දිසාපති / அரசாங்க அதிபர் / Govt Agent | 2235 | | මගේ අංකය / எனது இல. / My No. |
| අතිරේක දිසාපති / மேலதிக அரசாங்க அதிபர் / Add. Govt Agent | 2230 | | ඔබේ අංකය / உமது இல. / Your No. |
| කාර්යාල සහකාර / காரியாலய உதவியாளர் / Office Assistant | 2106 | | |
| පොදු කාර්යාලය / பொது அலுவலகம் / General Office | 2233 / 2234 | | |

දිසාපති කාර්යාලය, වවුනියාව.
அரசாங்க அதிபர் அலுவலகம், வவுனியா.
THE KACHCHERI, VAVUNIYA.

1991.03.07.

கௌரவ பொ. சந்திரசேகரம்,
பாராளுமன்ற உறுப்பினர்,
வன்னி.

அன்புடையீர்,

நீங்கள் வன்னிப் பாராளுமன்ற உறுப்பினராக நியமனம் செய்திருப்பதை வர்த்தமானிப் பிரசுரம் மூலம் அறிந்துள்ளேன். எனது மனப்பூர்வமான வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன். வன்னித் தேர்தல் தொகுதியில் பின்தங்கிய நிலையில் உள்ள வவுனியா மாவட்டத்தினைச் சகல துறைகளிலும் அபிவிருத்தியடையச் செய்வது எங்கள் இரு பகுதியினரதும் தலையாய கடமையாகும். எனவே இவ் விடயத்தில் நல்ல புரிந்துணர்வுடனும், ஒற்றுமையுடனும் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையுடனும் சகல நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும் என்பதனையும் தங்களிற்கு அறியத்தருகின்றேன்.

வவுனியா மாவட்டத்தை ஏனைய அபிவிருத்தியடைந்த மாவட்டங்களின் தரத்திற்கு ஏற்ப உயர்த்துவதற்கு செயலூக்கியாக நாங்கள் பாடுபட வேண்டும். இந்த அபிலாசைகளை நிறைவேற்றுவதற்கு நீங்கள் எடுக்கும் சகல முயற்சிகட்கும் எங்களுடைய பூரண ஆதரவும் உண்டு.

நான் விரைவில் தங்களைச் சந்திப்பதற்கு விரும்புகின்றேன். இம்மாவட்டத்திற்கு நீண்ட காலம் சேவை செய்ய எல்லாம் வல்ல இறைவன் அருள்பாலிக்க வேண்டுமென்று வேண்டுகின்றேன்.

தங்கள் உண்மையுள்ள,

சி. ந. மார்க்கண்டு,
அரசாங்க அதிபரும்,
மாவட்ட ஆணையாளரும்,
வவுனியா மாவட்டம்.

மம/.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශේෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 649/5—1991 පෙබරවාරි 11 වැනි සඳුදා—1991.02.11

649/5 ஆம் இலக்கம்—1991 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 11 ந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) — பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 99 ஆம் உறுப்புரையின் 13 (ஆ) என்னும் பந்தியின் கீழ் வெற்றிடமொன்றை நிரப்புதல்**

இல. 11 - வன்னி தேர்தல் மாவட்டத்திற்கான, 1988 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான, 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 60 (2) ஆம் பிரிவின் கீழ், பாராளுமன்ற உறுப்பினர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட்ட திரு. இராமசாமி சுப்பிரமணியம் பாராளுமன்றத்தின் அனுமதியின்றி தொடர்ந்து மூன்று மாதங்களுக்கு பாராளுமன்றக் கூட்டங்களுக்கு சமுகமளிக்கத் தவறியதன் காரணமாக, இரண்டாம் பாராளுமன்றத்தின் உறுப்பாண்மையில் வெற்றிடமொன்று ஏற்பட்டுள்ளதென்று, மேற்கூறப்பட்ட சட்டத்தின் 64 (1) ஆம் பிரிவின் கீழ் பாராளுமன்றச் செயலாளர் நாயகம் எனக்கு அறிவித்துள்ளார் ஆதலாலும்,

அரசியலமைப்பின் 99 ஆம் உறுப்புரையின் 13 (ஆ) என்னும் பந்தியின்கீழ் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறாக, இவ்வெற்றிடத்தை நிரப்புமாறு மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 64 (1) என்னும் பிரிவின் கீழ் அவ்வுறுப்பினர் தேர்ந்தெடுக்கப்பட்ட மேற்கூறப்பட்ட தேர்தல் மாவட்டத்தின் தெரிவத்தாட்சி அலுவலர் என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும்;

தெரிவத்தாட்சி அலுவலர், மேற்கூறப்பட்ட சட்டத்தின் 64 (2) ஆம் பிரிவின் கீழ் செயற்பட்டு, அத்தேர்தல் மாவட்டத்திற்கான உறுப்பினர் ஒருவராகத் திரு. பொன்னம்பலம் சந்திரசேகரி என்பவர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் என வெளிப்படுத்தி, மேற்கூறப்பட்ட சட்டத்திற்கான முதலாம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள "க" என்னும் படிவத்திலான விபரத்திரட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளாராதலாலும்,

ஆகவே இப்பொழுது தேர்தல்கள் ஆணையாளரான ராஜபக்ஷ கங்கானம்கே சந்திரானந்த த சில்வா ஆகிய யான், மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 64 (2) ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைப் பிரயோகித்து, மேற்கூறப்பட்ட திரு. இராமசாமி சுப்பிரமணியம் பாராளுமன்றத்தின் அனுமதியின்றி தொடர்ந்து மூன்று மாதங்களுக்கு பாராளுமன்ற கூட்டங்களுக்கு சமுகமளிக்கத் தவறியதன் காரணமாக ஏற்பட்டுள்ள வெற்றிடத்தை நிரப்புவதற்காக இல. 11 - வன்னி தேர்தல் மாவட்டத்திற்கான இரண்டாம் பாராளுமன்றத்தின் உறுப்பினர் ஒருவராகத் திரு. பொன்னம்பலம் சந்திரசேகரி என்பவர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரென இத்தால் பொதுமக்களுக்கு அறிவிக்கின்றேன்.

ஆர். கே. சந்திரானந்த த சில்வா,
தேர்தல்கள் ஆணையாளர்.

கொழும்பு,
1991 பெப்ரவரி மாதம் 11 ஆந் திகதி

89—17

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# The Gazette of the Democratic Socialist Republic of Sri Lanka

EXTRAORDINARY

අංක 649/5—1991 පෙබරවාරි 11 වැනි සඳුදා—1991.02.11

No. 649/5—MONDAY, FEBRUARY 11, 1991

(Published by Authority)


## PART I: SECTION (I)—GENERAL

### Government Notifications

THE CONSTITUTION OF THE DEMOCRATIC SOCIALIST REPUBLIC OF SRI LANKA

Filling of a Vancancy under paragraph 13 (b) of Article 99

WHEREAS the Secretary-General of Parliament has informed me, under section 64 (1) of the Parliamentary Elections, Act No. 1 of 1981, as amended by Act No. 15 of 1988, that a vacancy has occurred in the membership of the Second Parliament by reason of being absent from the sittings of Parliament during a continuous period of three months without the leave of Parliament first obtained of Mr. Ramasamy Subramaniam who was declared elected as a Member of Parliament for the Electoral District No. 11 — Vanni under section 60 (2) of the aforesaid Act :

And Whereas the Returning Officer, for the electoral district which returned the said member was directed by me under Section 64 (1) of the aforesaid Act to fill this vacancy as provided for under paragraph 13 (b) of Article 99 of the Constitution:

And Whereas the said Returning Officer acting under section 64 (2) of the aforesaid Act has made a return in form 'M' set out in the First Schedule to the aforesaid Act, to the effect that Mr. Ponnampalam Chandrasegari was declared elected as a Member of Parliament for the said electoral district :

Now therefore, I Rahubadde Kankanamge Chandrananda de Silva, Commissioner of Elections, in the exercise of the powers vested in me by section 64 (2) of the aforesaid Act, do hereby notify the general public that Mr. Ponnampalam Chandrasegari has been declared elected as a member of the Second Parliament for the Electoral District No. 11—Vanni to fill the vacancy caused by reason of being absent from the sittings of Parliament during a continuous period of three months without the leave of Parliament first obtained of the aforesaid Mr. Ramasamy Subramaniam.

R. K. CHANDRANANDA DE SILVA,
Commissioner of Elections.

Colombo, February 11, 1991.
03-17

PRINTED AT THE DEPARTMENT OF GOVERNMENT PRINTING, SRI LANKA



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 25. இந்திய இராணுவ கட்டளைத் தளபதியுடன் நேர்காணல்

வெலியோயா பிரதேசத்தின் எல்லைப்புறமாக அமைந்துள்ள பெரியகுளம் என்னும் கிராமத்தில் உள்ள எனது பண்ணையில் குடியிருந்த நான் இலங்கை ராணுவ அச்சுறுத்தல் நடவடிக்கையினால் பண்ணையில் இருந்து வெளியேறி 83,84 காலப்பகுதியில் நெடுங்கேணியில் அகதியாகத் தங்கியிருந்தேன். சில வருடங்களின் பின் இலங்கைத் தமிழர்களின் அரசியல் பிரச்சினைகளைத் தீர்க்கும் முகமாக இலங்கை இந்திய அரசுக்கு இடையே மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையை அடுத்து சமாதானப்படை என்ற கோசத்தோடு இந்திய ராணுவ படைப்பிரிவு இலங்கையை வந்தடைந்தது. அதனையடுத்து அவ்வேளை இயங்கிக்கொண்டிருந்த இலங்கை ராணுவப் படைகளை அவர்களுடைய முகாம்களுள் முடக்கி வைத்துவிட்டு இந்திய ராணுவப் படைகளே பொதுமக்கள் பிரச்சினைகளைக் கையாளத் தொடங்கியது. அந் நிலையில் பரந்து பட்ட தமிழ்ப் பிரதேசம் முழுவதிலும் இந்தியப்படைகள் ஆங்காங்கு முகாமிட்டு செயற்பட ஆரம்பித்தன. இந்தியப்படை வருகையின் பின் மிகக் குறுகியகால எல்லையின் போது இந்தியப்படைகளுக்கும் புலிகளுக்கும் இடையே முரண்பாடு ஏற்பட்டு மோதல்கள் உருவாகின.

அவ்வாறு மோதல்கள் உருவாகியபின் இந்தியப் படையினர் புலிகளுக்குச் சார்பானவர்கள் என்று அவர்களால் சந்தேகிக்கப்பட்ட தமிழ்ப் பொதுமக்களைக் கைது செய்து தண்டனை வழங்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டனர். அவ்வாறான நிலையில் நெடுங்கேணி கிராமத்திலும் ஓர் இந்திய படைப்பிரிவு நிலைகொண்டு இருந்தது. அப்படைப்பிரிவின் கட்டளைத் தளபதி சர்மா மிக மூர்க்கமான செயல்களில் ஈடுபடுபவராக பொதுமக்களால் அடையாளம் காணப்பட்டார். புலிகளின் ஆதரவாளர்கள் என இனம்காணப்பட்டு இராணுவ முகாமுக்கு அழைக்கப்பட்ட பொதுமக்கள் சிலர் காணமல் போயுள்ளதாயும் பேசிக்கொண்டனர்.

இந்நிலையில் நெடுங்கேணிக் கிராமத்தில் ஓர் தனியார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்தியசாலையை நடாத்திக்கொண்டிருந்த வைத்தியர் ஒருவர் ஒருநாள் மதியவேளை என்னைச் சந்தித்து "உங்களை நாளை காலை 8 மணியளவில் நெடுங்கேணியில் நிலை கொண்டிருக்கும் இந்திய கட்டளைத் தளபதி தன்னைச் சந்திக்க வருமாறு உங்களிடம் தெரிவிக்கும்படி என்னைப் பணித்துள்ளார்" எனக் கூறினார். அவ்வாறு கட்டளைத் தளபதி என்னை அழைத்த செய்தியைக் கேள்வியுற்ற நெடுங்கேணி மக்கள் பலர் என்னைச் சந்தித்து, கட்டளைத் தளபதியின் அழைப்பை ஏற்று முகாமுக்குப் போகவேண்டாம் எனத் தடுத்தனர். கட்டளைத் தளபதி ஓர் மூர்க்கமானவர் என்றும் அதனால் உங்களுக்கு ஏதாவது ஆபத்து ஏற்படவும் கூடுமென்றும் அச்சுறுத்தினார். அதனால் என்னை நெடுங்கேணியில் இருந்து தலைமறைவாகி எங்காவது போய் விடுங்கள் என்றும் அறிவுரை கூறினர். அவ்வாறு மக்கள் கூறிய அனைத்தையும் சிந்தனைக்கு எடுத்த நான் அன்று மாலை வரை பலவாறு சிந்தனைக்கு எடுத்துக்கொண்டேன். முடிவில் எவ்வாறான குற்றச் செயல்களிலும் ஈடுபடாத நான் கட்டளைத் தளபதியைச் சந்திப்பதை ஏன் தவிர்க்கவேண்டும் எனச் சிந்தித்து மறுநாட் காலை தளபதியைச் சந்திப்பதை உறுதிப்படுத்திக் கொண்டேன்.

வைத்தியர் மூலம் எனக்கு அனுப்பிய செய்தி கிடைத்திருக்குமா? கிடைத்தாலும் நான் வருவேனா? என்ற சந்தேகங்களால் குளப்பமடைந்த கட்டளைத்தளபதி மறுநாள் அதிகாலையில் தனது படைப்பிரிவு ஒன்றை பெரியகுளம் கிராமத்திற்கு அனுப்பி எப்படியாவது என்னைக் கைது செய்து முகாமிற்கு அழைத்து வரும்படி கட்டளையிட்டுள்ளார். ஆனால் நான் அதிகாலையிலேயே புறப்பட்டு கட்டளைத் தளபதி குறிப்பிட்ட நேரத்திற்கே அவரைச் சந்திக்க ராணுவ முகாமிற்குச் சென்றேன்.

முகாம் வாசலில் காவலுக்கு நின்ற சிப்பாயிடம் கட்டளைத் தளபதி அழைத்த செய்தியைக் கூறி என்னை அவரிடம் அழைத்துச் செல்லுமாறு கேட்டேன். அதேநேரம் ஓர் உலங்கு வானூர்தி கட்டளைத் தளபதியின் முகாமில் வந்து இறங்கியது. நான் வந்திருக்கும் செய்தியைத் தளபதியிடம் தெரிவிக்கச் சென்ற சிப்பாய் திரும்பிவந்து ஓர் மேலதிகாரி கட்டளைத் தளபதியைச் சந்திக்க வந்திருப்பதாகவும் அதனால் என்னை மறுநாள் காலை வரும்படியும் கூறினார். சிறிது நேரத்தில் உலங்கு வானூர்தியில் வந்திருந்தவர் திரும்பச் செல்வதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவதானித்த நான் அதே சிப்பாயிடம் ஓர் முக்கிய பிரச்சனை சார்பாக கொழும்புக்குப் போகவேண்டி இருப்பதால் நாளை காலை வரமுடியாதெனவும், ஒரு சில நாட்களின் பின்பு தான் வரமுடியும் எனவும் அவரிடம் கூறுமாறு தெரிவித்தேன். திரும்பிச் சென்ற சிப்பாய் அவரைக் கண்டு திரும்பி வந்து ஓர் அரை மணித்தியாலத்தில் சந்திக்கலாம் என தளபதி கூறியதாகத் தெரிவித்தார். அந்நிலையில் மீண்டும் சிப்பாய் வந்து என்னை கட்டளைத் தளபதியிடம் அழைத்துச் சென்றார். கட்டளைத்தளபதி அவர்கள் ஒரு மாமரநிழலின் கீழ் ஓர் கதிரையில் அமர்ந்திருந்தார். அவரின் முன்னால் ஒரு சிறிய மேசை போடப்பட்டிருந்தது. அம் மேசை மீது தளபதியின் கைத்துப்பாக்கி வைக்கப்பட்டு இருந்தது. அவருக்கு அண்மையில் நான் சென்று கொண்டிருந்தபொழுது கட்டளைத்தளபதி அவர்கள் என்னை நோக்கி தனது கையை நீட்டி "நீங்கள் அனைவரும் சர்வமுட்டாள்கள். புலிகளின் தீவிர ஆதரவாளர்கள். அதனால் உங்களைச் சுட்டுத்தள்ள வேண்டும்." என்று உரத்தகுரலில் கூறி அச்சுறுத்தினார். நான் எவ்வித சலனமும் அடையாமல் அவர் முன் சென்றேன். அங்கு போடப்பட்டிருந்த கதிரையில் அமருமாறு சைகை காட்டினார்.

கதிரையில் அமர்ந்த நான் கட்டளைத் தளபதி அவர்களைப்பார்த்து "என்னைப் புலிகளின் ஆதரவாளர் என்று தாங்கள் குறிப்பிட்டதை முற்றுமுழுதாக மறுக்கிறேன்." என்று கூறினேன். தொடர்ந்து "வயதான நாங்கள் புலிகளின் செயற்பாட்டிற்கு ஆதரவு அளிப்பதாகக் கூறுவது சிறந்த கல்விமானான உங்களுக்கு பொருத்தம் அற்றதெனக் கருதுகிறேன். ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராக அகிம்சை அடிப்படையில் போராட்டம் நடத்தி சுதந்திர வாழ்வைப் பெற்ற நீங்கள், இலங்கையில் சிங்கள பேரினவாத ஆட்சியின் கீழ் சிங்கள மக்கள் பெற்று வாழ்கின்ற உரிமைகள் அனைத்தையும் தமிழர்களாகிய நாமும் பெற்று வாழவேண்டும் என்பதற்காக உங்களுக்கு விடுதலை பெற்றுத்தந்த மகாத்மா காந்தியின் அகிம்சைக் கொள்கை அடிப்படையில் முயற்சித்தமையை நீங்கள் தெளிவாக அறிந்திருப்பீர்கள். ஆகவே வயதான தமிழனாகிய என்னை ஒரு தீவிரவாதியென்று கருதுவது பொருத்தமற்றது என்பது எனது பணிவான கருத்தாகும்.

அத்துடன் அகிம்சை அடிப்படையில் நாம் மேற்கொண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயற்சிகளில் தோல்வி கண்ட நிலையில் இளைஞர்கள் மேற்கொண்ட தீவிரவாத முயற்சிகளை எம்மால் தடுக்கமுடியவில்லை என்பதை நீங்கள் ஒப்புக்கொள்வீர்கள் என்று கருதுகிறேன்." என்று கூறினேன். நான் கூறியவற்றைச் செவிமடுத்த தளபதி அவர்கள் "இப்போதுநீர் என்ன செய்கிறீர்" என்று கேட்டார். "நான் சாதாரணமாக கமத்தொழில் முயற்சிகளிலேயே ஈடுபடுகிறேன்." என்று கூறினேன். அவர் மீண்டும் "எவ்வாறான பொது முயற்சிகளில் ஈடுபடுகிறீர்கள்." என்று கேட்டார். அக் காலத்தில் நான் முல்லைத்தீவு மாவட்ட பிரஜைகள் குழுவின் தலைவராகச் செயற்பட்டுக் கொண்டிருந்தமையை அவருக்குத் தெரிவித்தேன். அத்துடன் வெலியோயா பிரதேசத்தில் சிங்கள அரசு தமிழர்களின் பூர்வீக நிலப்பரப்பில் சிங்கள மக்களை அத்துமீறிக் குடியேற்றியமை பற்றி இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி அவர்களுக்கு முறைப்பாடு செய்து அனுப்பிய ஓர் மகஜர்ப்பிரதியை அவரிடம் கையளித்தேன்.

அம் மகஜரைக் கவனமாக வாசித்து முடித்த தளபதி அவர்கள் "நீங்கள் மிகப் பெரிய நல்ல விடயங்களில் ஈடுபட்டு செயற்பட்டுவருகிறீர்கள்." என்று எனக்கு வாழ்த்துத்தெரிவித்தார். அத்துடன் ஓர் தேனீர் விருந்தும் அளித்தார். நான் விடைபெற்று வெளியேறி எனது பண்ணைக்குப் போனேன். நான் முன்பு குறிப்பிட்டது போல் என்னைக் கைது செய்வதற்காகத் தளபதி அவர்களால் அனுப்பப்பட்ட இந்தியப் படைச்சிப்பாய்கள் பண்ணைக்குள் வந்தனர். எனக்கு அண்மையில் வந்த அவர்கள் "உங்களைக் கைது செய்வதற்காகவே நாங்கள் அனுப்பப்பட்டு இருந்தோம். ஆனால் உங்களைக் கைது செய்ய வேண்டாம் என கட்டளைத்தளபதி அவர்கள் எம்மைப் பணித்துள்ளார். அதனால் நாங்கள் சென்று வருகிறோம்." என மகிழ்ச்சி தெரிவித்து பண்ணையில் இருந்து வெளியேறிச் சென்றார்கள். என்னை முகாமிற்குப் போகவேண்டாம் எனத்தடுத்த அன்பர்கள் மீண்டும் என்னைச் சந்தித்த பொழுது வாழ்த்துத் தெரிவித்தனர். இந்நிலையில் 1989இல் இந்திய ராணுவம் நாட்டைவிட்டு வெளியேறியது.

*************



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 26. இராணுவ நடவடிக்கையும் இடம்பெயர்வும்

1997ம் ஆண்டு வைகாசி மாதத்தில் வன்னிப்பகுதியை நோக்கி இலங்கை இராணுவம் முன்னேறும் முயற்சி ஆரம்பிக்கப் போகிறது என்று ஒரு சில தினங்களுக்கு முன்பே மக்கள் மத்தியில் கருத்துப்பரிமாற்றங்கள் நடைபெற்றன. அந்நிலையில் ஒரு நாள் மதியவேளையில் மணலாற்றுப் பிரதேசத்தில் இருந்து ராணுவம் நெடுங்கேணி நோக்கி செல் அடிக்கத் தொடங்கியது. எனது தோட்ட வாடிக்கு அண்மையில் சில செல்கள் வீழ்ந்து வெடித்தன. அந்த நேரத்தில் 15 பேர் வரையான தொழிலாளர் வாடியில் புகையிலை தொழில் வேலைகள் செய்து கொண்டு நின்றனர். அவ்வாறு தொழில் செய்து கொண்டு நின்றவர்களை அவர் அவர் இடங்களுக்கே பாதுகாப்பாக செல்லுமாறு கூறினேன். வாடியில் பாடம் போட்டு இருந்த புகையிலையில் ஒரு பகுதியையாவது ஏற்றி பாதுகாப்பதற்காக ஓர் உழவு இயந்திரத்தைக் கொண்டு வருமாறு ஒருவரிடம் கேட்டேன். அவர் உழவு இயந்திரத்தைக் கொண்டு வந்து வாடியில் நிறுத்தினார்.

அந்த நேரத்தில் செல் வீச்சு அதிகரித்ததால் புகையிலை உலர்வதற்கு அமைக்கப்பட்ட கிடங்கு ஒன்றினுள் ஒரு மணித்தியாலம் பாதுகாப்பாகத் தங்கியிருந்தேன். தொடர்ந்தும் செல்வீச்சு நடந்து கொண்டே இருந்தது. இராணுவம் நெடுங்கேணியை நோக்கி முன்னேறி வருகிறது என்று மக்கள் கூறிக்கொண்டே கிராமத்தில் இருந்து வெளியேற ஆரம்பித்தனர். வாடியில் அடுக்கப்பட்டிருந்த ஏறக்குறைய 25 இலட்சம் ரூபா பெறுமதியான புகையிலைப் பாடங்களையும் ஏனைய தளபாடங்களையும் அப்படியே விட்டு விட்டு மோட்டார் வண்டியில் மனைவியை குடியமர்த்தி இருந்த பண்டாரக்குளம் கிராமத்துக்குச் சென்றேன். மாலைப்பொழுது ஆகிய நேரம் பண்டாரக்குளத்திலும் இராணுவத்தால் ஏவப்பட்ட செல்கள் வீழ்ந்து வெடிக்கத் தொடங்கின. அதனால் அக் கிராமத்தில் இருந்தும் மக்கள் வெளியேறத் தொடங்கினர். சுகவீனமுற்று நடக்க முடியாத நிலையில் படுக்கையில் இருந்த மனைவியை பாதுகாப்பான இடம் ஒன்றுக்கு அழைத்துச் செல்வதற்கு எந்த வாகன வசதிகளும் கிடைக்கவில்லை. அதனால் மனைவி தங்கியிருந்த வீட்டிலேயே அவருடன் நானும் அன்று இரவு தங்கியிருந்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நானும் மனைவியும் தங்கியிருந்த வீட்டிற்கு அண்மையில் அன்று இரவு முழுவதும் இடையிடையே செல்கள் வீழ்ந்து வெடித்த வண்ணமே இருந்தன. ஏதோ இறைவன் அருளால் போலும் நாம் இருந்த வீட்டில் செல் எதுவும் விழவில்லை. அந்நிலையில் விடியப்புறம் ஐந்து மணியளவில் நண்பர் ஒருவர் மோட்டார் வண்டியில் நான் இருந்த இடத்திற்கு வந்தார். நடக்கமுடியாத நிலையில் இருந்த எனது மனைவியை சிரமப்பட்டு ஏற்றி குழவி சுட்டான் எனும் கிராமத்திற்குக் கொண்டு சென்றார். எமது உடுபுடவைகள் அடுக்கியிருந்த மூன்று நாலு பொதிகளை (சூட்கேஸ்) அப்படியே விட்டுவிட்டு நானும் கால்நடையாக நடந்து குழவிசுட்டானுக்குப் போனேன்.

நெடுங்கேணியில் இருந்த எனது மகனும் அவரது குடும்பமும் இடம் பெயர்ந்து குழவி சுட்டானில் உள்ள எமது உறவினர் ஒருவரின் வீட்டிற்கே வந்திருந்தனர்.அங்கேயே எனது மனைவியும் சென்றிருந்தார். நானும் அவர்களுடனேயே தங்கியிருந்தேன். ஆனால் இராணுவத்தால் ஏவப்பட்ட செல்கள் அடுத்தநாள் காலை குழவி சுட்டானிலும் வீழ்ந்து வெடிக்க ஆரம்பித்தன. அந்நிலையில் பண்டாரக்குளத்தில் விட்டுச்சென்ற உடுப்புப் பெட்டிகளை எடுத்து வருவதற்கு இன்னுமொரு நண்பரையும் அழைத்துக்கொண்டு துவிச்சக்கரவண்டியில் பண்டாரக்குளம்போனோம். உடுப்புப் பெட்டிகளை எடுத்துச் சைக்கிளில் கட்டிக்கொண்டு குழவிசுட்டான் நோக்கிச் சென்றுகொண்டிருந்த பொழுது மாறா இலுப்பை எனும் இடத்தில் பாதையில் செல்வீழ்ந்து வெடித்தது. செல் சத்தம் கேட்டவுடன் சைக்கிளை நிலத்தில் போட்டு விட்டு நாம் இருவரும் ஒருமதவுக்குப்பக்கத்தில் பதுங்கிக்கொண்டோம். தொடர்ந்து செல் வீச்சு நடந்து கொண்டே இருந்தது. செல் வீச்சு இடைநிறுத்தப்படும் வேளைகளை அவதானித்து மெதுவாக சைக்கிளில் நகர்ந்து நகர்ந்து குழவிசுட்டானுக்குச் சென்றடைந்தோம். குழவிசுட்டானிலிருந்து மறுநாள் காலை காட்டுப்பாதையூடாக உழவு இயந்திரத்தில் கனகராயன் குளம் ஊடாக மாலைவேளை வவுனிக்குளம் சென்று நண்பனின் வீட்டில் தஞ்சமடைந்தோம். அவர் எனது மகனோடு மிகநெருக்கமாக பழகியிருந்த நிலையில் எம்மை அன்போடு ஆதரித்து உதவிகள் புரிந்தார்.

வவுனிக்குளம் போகும் போதே சுகயீனமடைந்திருந்த மனைவியின் சுகநிலை மேலும் மேலும் மோசமடைந்தது. உயர்வான வைத்திய வசதிகள் இல்லாத நிலையில் அங்குள்ள ஒர் தனியார் வைத்தியசாலையில் மருந்து எடுத்து அவரைப் பராமரித்து வந்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில நாட்கள் கழிந்த பின் ஒரு நாள் அதிகாலையில் காலைக்கடன் கழிப்பதற்காக மருமகளின் உதவியோடு வீட்டிற்கு வெளியே போய் வந்து கட்டிலில் அமர்ந்து இருந்தார். அதேவேளை நானும் நித்திரைவிட்டு எழுந்து சென்று அவரின் பக்கத்தில் நின்றேன். அவர் தன்னை கட்டிலில் ஒருபக்கமாக நகர்த்தி இருத்துமாறு கேட்டார். நான் அவரைத் தூக்கி நகர்த்தி இருத்தினேன். அந்நேரம் எனது முகத்தை உற்றுப்பார்த்தார். அந்தநேரம் அவருக்கு ஒரு விக்கல் ஏற்பட்டது. பக்கத்தில் சுடுதண்ணிப்போத்தலில் இருந்த சுடுநீரை எடுத்து அவருக்குப் பருக்கினேன். அந்நிலையில் அவருடைய கண் மூடப்பட்டது. அவரின் ஆத்மா பிரிந்து இறைவனடி சேர்ந்து விட்டது என்பது உறுதியானது. பக்கத்தில் இருந்தவர்கள் அழுகுரல் எழுப்பினார்கள். அதனால் அதிர்ச்சியடைந்த நான் சிறிது நேரம் மயக்கமடைந்திருந்தேன். சிறிது நேரத்துள் மனதை திடப்படுத்திக்கொண்டு அவரின் ஈமக்கிரிகைகளை அன்று பிற்பகலே நடத்தவேண்டும் என முடிவுசெய்தேன். என் மூத்தமகன் தமிழ்வாசன் என்பவர் வவுனிக்குளத்தில் கிராமசேவையாளராகக் கடமையாற்றியிருந்தமையால் அங்குள்ள மக்கள் பேருதவி புரிந்தார்கள்.

இராணுவ நடவடிக்கை காரணமாக வவுனிக்குளத்திலிருந்து எங்குமே பிரயாணம் செய்யமுடியாத அவல நிலையில் வெளிநாட்டிலுள்ள பிள்ளைகளுக்கே தாயாரின் மரணச்செய்தியைக் கூட உடனடியாகத் தெரிவிக்க முடியவில்லை. மரணச்சடங்கை எனது மனதிற்குத் திருப்தியளிக்கும் வகையில் சிறப்பாகச் செய்யவேண்டும் என்றே அவாப்பட்டேன். ஆனால் அதற்கான வசதிகள் வாய்ப்புக்கள் கிடைக்குமா? என சஞ்சலப்பட்டேன். ஆனால் அங்குள்ளவர்கள் யாவற்றையும் சிறப்பாக நடத்தலாம். எதற்கும் சஞ்சலப்படவேண்டாம் என ஆறுதலளித்தனர். முன்பு யாழ்ப்பாண குடாநாட்டில் நடைபெற்ற இராணுவநடவடிக்கையின் போது தீவுப்பகுதியில் மண்டான் என்ற இடத்தில் வசித்த பறைமேளகார குடும்பம் ஒன்று இடம்பெயர்ந்து வவுனிக்குளத்தில் வந்து தங்கியிருந்தது. அவர்கள் மேளகாரர்கள் என்பதோடு பிரேதத்தை எடுத்துச்செல்வதற்குரிய அலங்கார தண்டிகைகளோடு தேவையான அனைத்தையும் வாடகை அடிப்படையில் கொடுத்து உதவினார்கள். வீதியோரம் தோரணம் கட்டுதல் மரணச்சடங்கை நிறைவேற்றுவதற்கு வேண்டிய பொருட்களை சேகரித்தல் போன்ற அனைத்து முயற்சிகளையும் அங்குள்ள பொது மக்கள் மிக ஆர்வத்துடன் நிறைவு செய்தார்கள். பிற்பகல் மூன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணியளவில் மரணச்சடங்கு கிரிகைகள் நிறைவேற்றப்பட்டு தண்டிகையில் சுடலை நோக்கி பிரேதம் எடுத்துச்செல்லப்பட்டது. சுடலையில் தாயாரின் சிதைக்கு அவரின் மூத்த மகன் தமிழ்வாசன் தீமூட்டினார்.

அதனைத் தொடர்ந்து மூன்றாம் சடங்கு எட்டாம் சடங்கு அந்தியேட்டி போன்ற கிரிகைகள் அனைத்தும் சிறப்பாகச் செய்து நிறைவேற்றப்பட்டன. அதன் பின் சில மாதங்கள் வவுனிக்குளத்திலேயே மகனின் குடும்பத்துடன் தங்கியிருந்தேன். அதன் பின் மன்னார் உயிலங்குளம் பாதையூடாக வன்னி மக்கள் வவுனியாவிற்கு பிரயாணம் செய்யக்கூடிய வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டது. நானும் அவ்வழிஊடாக வவுனியாவிற்கு வந்து ஓர் அறை வாடகைக்கு அமர்த்தி தங்கியிருந்தேன். அவ்வேளையில்தான் தாயின் மரணம் பற்றி வெளிநாட்டிலிருந்த பிள்ளைகளோடு கலந்துரையாடினேன். அத்துடன் நான் செய்த புகையிலை வியாபாரம் சார்பில் கொழும்பிலும் ஏனைய இடங்களிலும் எனக்கு வருமதியாக இருந்த பணங்களைச் சேகரித்துக் கொள்வதில் ஈடுபட்டேன். அதேநேரம் நான் கொடுக்கவேண்டிய பணப் பிரச்சினைகளையும் நிறைவு செய்தேன். இவ்வாறு ஒரு வருட காலம் இடையிடையே வவுனிக்குளத்தில் தங்கியிருந்த எனது மகனின் குடும்பத்தைச் சந்திப்பதற்குப் போய் வந்தேன்.

எனது மகன் ஒரு நீரிழிவு நோயாளியாக இருந்ததால் வைத்திய வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்காகவும் பிள்ளைகளின் படிப்பு விடயத்தை சிறப்பாக செயற்படுத்தவும் வவுனியாவுக்கு வரவேண்டிய நிலை ஏற்பட்டது. 1998ம் ஆண்டு தை மாதத்தில் மகன் குடும்பத்தோடு வவுனியாவுக்கு வருகை தந்தார். வவுனியா வைரவபுளியங்குளத்தில் ஒரு வீடு வாடகைக்கு எடுத்து தங்கியிருந்தோம். மகனின் நோய் மேலும் மேலும் அதிகரிப்பதாகவே இருந்தது. அதனால் அவரை இடையிடையே கொழும்புக்கு அழைத்துச் செல்ல வேண்டி இருந்தது. ஏறக்குறைய 4-5 வருடங்களாக அவருடைய நோய்க்கான சிகிச்சைப் பிரச்சினையிலேயே பொழுது கழிந்து கொண்டு இருந்தது. இந் நிலையில் கனடாவில் இருந்த எனது மகள் தமிழ் வாணி என்பவர் என்னை கனடாவுக்கு நிரந்தர குடியிருப்பாளராக அழைப்பதற்கு முயற்சி செய்து கொண்டிருந்தார்.

************



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 27. வெளிநாட்டுப்பயணம்

என்னைக் கனடாவுக்கு அழைப்பதற்கு மேற்கொண்ட முயற்சியின் பயனாக 2002ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் அளவில் கனடாவுக்குச் செல்வதற்கான விசாஅனுமதி கிடைத்தது. நிரந்தர வதிவிடவிசா கிடைத்திருந்த போதும் கனடாவிலேயே நிரந்தரமாகத் தங்கியிருக்கும் மனநிலையோடு நான் செல்லவில்லை. கனடாசெல்வதற்கான ஆயத்தங்களைச் செய்தேன். வெளிநாட்டுக்குச் செல்பவர்கள் அங்குள்ளவர்களை மகிழ்விப்பதற்காக இங்குள்ள சில உணவுப்பொருட்களை எடுத்துச்செல்வது வழக்கமாகும். நானும் அவ்வாறே சேகரித்து எடுத்துச்சென்றேன். அத்துடன் வெளிநாட்டுக்குச் செல்பவர்கள் அந் நாட்டு சுவாத்தியநிலைக்கு ஏற்ப தாக்குப்பிடிக்கக்கூடிய உடுப்புவகைகளை எடுத்துச் செல்லவேண்டும். நான் செல்லவிருந்த ஐப்பசி மாதத்தில் கனடாவில் கடும்குளிர்காலம். அதனால் குளிரைத்தாக்குப்பிடிக்கக் கூடிய உடுப்புவகைகள் சிலதை எடுத்துச்சென்றேன். நான் படிக்கும் காலத்தில் இருந்தே வெள்ளைவேட்டியும் வெள்ளைச்சேட்டும் தான் அணிவதை வழமையாகக்கொண்டிருந்தேன். நான் வெளிநாட்டுக்கு புறப்படும் பொழுது அந்தநாட்டு சுவாத்திய நிலைக்கேற்ப நீளக்காற்சட்டை அணிந்து செல்லவேண்டும் என நண்பர்கள் வற்புறுத்தினார்கள். ஆனால் அதனை நான் ஏற்றுக்கொள்ளவில்லை. வழமை போல் வெள்ளைவேட்டியும் வெள்ளைச்சேட்டும் அணிந்தே பிரயாணம் செய்தேன். இதுவே என்னுடைய கனடா நாட்டு முதல்பயணமாகும். அதனால் சிறிது பதட்டமாகவே இருந்தது.

சகல ஆயத்தங்களோடும் கட்டுநாயக்கா விமானநிலையத்தைச் சென்றடைந்தேன். என்னை வழியனுப்புவதற்கு உறவினர் சிலர் என்னுடன் வந்திருந்தனர். நான் கொண்டு சென்ற பொதிகள் பரிசோதிக்கப்பட்டு அப்பால் விசா பரிசீலனை செய்யும் அதிகாரியிடம் சென்றேன். விசா பரிசோதிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டேன். அந் நிலையில் என்னை வழியனுப்புவதற்கு வந்தவர்களுக்குக் கையசைத்து நன்றி தெரிவித்துவிட்டு பிரயாணிகள் தங்கும் மண்டபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கிப்போனேன். பயணிகள் தங்கும் அறைக்குச்செல்வதற்கு தளத்தில் இருந்து நகரும் படிக்கட்டுகள் மூலமே சென்றடைய வேண்டும். முன் அனுபவம் இல்லாத காரணத்தால் நகரும் படிக்கட்டில் செல்வதில் சிறிது தயக்கம் ஏற்பட்டது. ஏனையோர் அந் நகரும் படிக்கட்டு மூலம் செல்வதை சிறிது நேரம் நின்று அவதானித்தேன். அதன் பின் துணிவோடு அவர்கள் போல் நானும் நகரும் படிக்கட்டு மூலம் பிரயாணிகள் தங்கியிருக்கும் அறையை அடைந்தேன். அங்கு தங்கியிருந்தவர்கள் மத்தியில் நான் அணிந்திருந்த உடை என்னைத் தனிமைப்படுத்தி ஒரு காட்சிப்பொருளாக்கியது. இலங்கை விமான நிலையத்தில் என் நிலை இவ்வாறு இருந்தால் கனடா நாட்டிலே மக்களால் நான் எவ்வாறு நோக்கப்படுவேன். என்ற ஆதங்கம் ஏற்பட்டது.

எமது பிரயாணத்துக்குரிய விமானம் தயாராகிய உடன் எமது பிரயாணச்சீட்டுகளை பரிசோதித்து விமானத்துக்கு அனுப்பிவைத்தார்கள். விமானத்தில் சென்று எனது பிரயாணச்சீட்டில் குறிக்கப்பட்டிருந்த இலக்கப்படி உரிய இருக்கையில் அமர்ந்தேன். விமானம் புறப்படுவதற்கு ஆயத்தமாகும் பொழுது இருக்கையில் உள்ள பாதுகாப்புப்பட்டியை எல்லோரும் அணிந்தார்கள். நானும் அப்பட்டியை அணிவதற்கு சிறிது தடுமாற்றம் அடைந்தேன். அந்நேரம் பக்கத்திலிருந்த ஓர் வெள்ளையினப் பெண் "இது உங்களுடைய முதற்பயணமா?" என ஆங்கிலத்தில் கேட்டார். அதற்கு "இது முதற் பயணம்தான்" எனப்பதிலளித்தேன். உடனே அவர் அந்தப்பட்டியை அணிவதற்கு உதவினார். விமானப் பயணத்தின் பொழுது விமானப்பணிப்பெண்கள் எமது விருப்பத்துக்கு ஏற்ற உணவு வகைகளையும் குடிபானங்களையும் வினியோகித்தார்கள். எமது பிரயாண ஒழுங்குப்படி விமானம் சூரிச் விமான நிலையம் சென்றடைந்தது. அங்கு சிலமணித்தியாலங்கள் தங்கி கனடா செல்லும் விமானத்தின் மூலம் தான் கனடா செல்லவேண்டும். அதன்படி கனடா விமானநிலையத்தைச் சென்றடைந்த நான் எடுத்துச்சென்ற பொதிகளையும் தள்ளுவண்டியில் ஏற்றிக்கொண்டு வெளியேறும் பாதைஊடாக வெளியே சென்றேன். அங்கு என்னை வரவேற்று அழைத்துச்செல்வதற்காக எனது மருமகனும் மகளும் பிள்ளைகள் சகிதம் வந்திருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்நேரத்தில் தான் கனடாவில் குளிர்கால நிலை எவ்வாறு இருக்கும் என்ற உண்மை நிலையைபுரிந்து கொண்டேன். அத்துடன் கட்டுநாயக்காவில் இருந்து கனடா செல்லும் வரை என்னைப் பார்த்தவர்கள் அனைவருக்கும் நான் ஒரு காட்சிப்பொருளாக இருந்தது மனதுக்கு மகிழ்ச்சியாகவே இருந்தது. அத்துடன் விமானத்தில் செல்லும் போது எனக்குப் பக்கத்து இருக்கையில் இருந்த வெள்ளை இனப் பெண் எனது உடையைப்பற்றி ஆச்சரியம் அடைந்து ஏன் அந்தமாதிரியான உடை அணிந்திருக்கிறீர்கள் என்று கேட்டுவிட்டார். “இவ்வாறான உடை எமது தேசிய உடை” என்று அவருக்கு விளக்கம் அளித்தேன். எனது தேசிய உணர்வை அவர் மெச்சிப்பாராட்டினார்.

மகளின் குடும்பம் கனடாவில் ரொரண்டோ மாநிலத்தில் ஓர் தொடர்மாடிக் குடியிருப்பில் ஒன்பதாவது மாடியில்தான் குடியிருந்தது. விமானநிலையத்தில் இருந்து மகளின் வீடுநோக்கிச் சென்று கொண்டிருந்த பொழுது பனி மழை பொழிந்துகொண்டே இருந்தது. வீட்டிற்குப் போய்ச்சேர்ந்த நான் இரண்டு மூன்று நாட்களாக வெளியே செல்லவில்லை. இரவு நேரங்களில் படுக்கையில் படுத்திருக்கும் பொழுது தடித்த கம்பளிப்போர்வையால் போர்த்துக்கொண்டே படுக்க வேண்டும். அதே நேரத்தில் கால்கள் இரண்டிலும் கால்மேஸ் அணிந்து கொண்டே படுக்கவேண்டும். காலையில் எழுந்து வெளிப்புறத் தோற்றங்களைப் பார்க்கவிரும்பி ஜன்னலைத் திறந்தால் தாங்கமுடியாத குளிர்காற்று குபீரென வீட்டிற்குள் வரும். அதனால் பனிமூட்டம் அதிகமாக இருக்கும் நேரங்களில் யன்னலைத்திறந்து அதிகமாக வெளித்தோற்றத்தைப் பார்த்தால் எங்கும் ஒரே வெள்ளைநிறமாகவே காட்சியளிக்கும். வீடுகள் மரங்கள் வாகனங்கள் அனைத்திலும் பனிமூட்டம் படிந்திருக்கும். இராப்பொழுதில் பனிப்பொழிவால் பாதைகள் அனைத்திலும் அரையடிக்கு மேற்பட்டபனிப்படலம் படிந்து இருக்கும். அவ்வாறு பனிப்படலம் படிந்திருப்பதால் வாகனங்களை ஓட்டிச்செல்லமுடியாமல் அவலப்படுவார்கள். அதனால் அரசு இயந்திர சாதனங்களைப்பாவித்து பாதையில் படிந்திருக்கும் பனிப்படலங்களை வழித்தெடுத்து பாதையோரங்களில் போடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில தினங்கள் கழிந்தபின் நான் அங்குசென்றிருப்பதை அறிந்த அங்கிருக்கும் எமது உறவினர்கள் நண்பர்கள் இடையிடையே வருகைதந்து மகிழ்வித்தார்கள். அத்துடன் சில வாரங்களின் பின் அங்குள்ள எனது நண்பர்கள் உறவினர் வீடுகளுக்கு மகள் குடும்பசகிதம் என்னை அழைத்துச்செல்வார்கள். அங்குள்ள எம்மவர் மகிழ்வாக எம்மை வரவேற்று உபசரிப்பார்கள். எனது 43வது வயதுவரை இடையிடையே மதுபானம் பாவிக்கும் பழக்கம் இருந்தது. ஆனால் 68வது வயதுவரை எவ்வித மது வகைகளையும் தொடுவதில்லை என உறுதிகொண்டு இருந்தேன். 2002ஆம் ஆண்டில் கனடாவிற்குப் போனபொழுது அங்கு நிலவியகடும் குளிர் காரணமாக மதுபானம் அருந்தத் தொடங்கினேன். அங்குள்ள எம்மவர்கள் மதியவேளையிலும், இரவுவேளையிலும் சாப்பாட்டுக்கு முன் சிறிதளவு மதுபானம் பாவிப்பதை காணக்கூடியதாக இருந்தது.

நெடுங்கேணி பண்டாரக்குளம் கிராமத்தில் வசித்த அருமை என்பவர் பிள்ளைகளோடு கனடாவில் தங்கியிருந்தார். ஒரு நாள் என்னைக்காண்பதற்காக முற்பகல் நேரத்தில் நான் தங்கியிருந்த வீட்டிற்கு வந்தார். என்னை அன்று மதியபோசனத்திற்கு வரவேண்டும் என்றும் மதியபோசனத்தை முடித்துக்கொண்டு என்னை நைகறா நீர்வீழ்ச்சியைப் பார்வையிட அழைத்துச்செல்லப் போவதாகவும் கூறி அழைத்துச் சென்றார். அவருடைய வீட்டில் மதியபோசனத்தை முடித்துக்கொண்டு நைகறா நீர்வீழ்ச்சி நோக்கிப் பயணமானோம். நைகறா நீர்வீழ்ச்சியைப் பார்வையிடுவதற்காக ஆயிரக்கணக்கான சுற்றுலாப்பயணிகள் நீர்வீழ்ச்சிமையத்தில் தினமும் குவிந்திருப்பார்கள். எந்நேரமும் சன சமுத்திரம் பகல் இரவு நேரங்களில் அங்கு அங்கு அலைமோதிக்கொண்டே இருக்கும். அங்கு சென்ற நாம் வாகனங்கள் நிறுத்துவதற்கென அடையாளம் இட்டு ஒதுக்கப்பட்ட ஓர் இடத்தில் நாம் சென்ற வாகனத்தை நிறுத்திவிட்டு நீர் வீழ்ச்சி மையத்தை நோக்கிப் போனோம். மக்கள் கூட்டம் நீர்வீழ்ச்சியை நின்று பார்ப்பதற்கென அமைக்கப்பட்டிருந்த மிக விஸ்தாரமான மேடையைச் சென்றடைந்தோம். றொக்சி மலைத்தொடரில் ஊற்றெடுத்து ஓடிவரும் தண்ணீர் ஓர் மலைமுகட்டில் இருந்து கீழ் நோக்கி குதிக்கும் அக்காட்சி உண்மையாகவே பார்ப்பவர்கள் மனதை பிரமிக்கச்செய்யும் என்பதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வித சந்தேகமும் இல்லை. அந் நீர்வீழ்ச்சியில் இருந்து எழும்பும் நீர்த்திவலைகள் படிந்த குளிர்காற்று மேடையை நோக்கி ஜில் ஜில் என்று தவழ்ந்து கொண்டே இருக்கும். அதனால் அக்காட்சியைப் பார்க்கச் செல்பவர்கள் குளிர் தாக்காத வகையில் அதற்கேற்ற உடைகளை அணிந்து வருவார்கள்.

அவ்வாறு மலைத்தொடரில் இருந்து ஓடிவரும் நீர் இரண்டு முனைகளால் பள்ளத்தாக்கில் வீழ்கின்றது. அவ்வாறு தண்ணீர் குதிக்கும் பள்ளத்தாக்கு ஒரு சிறு கடல் போலவே காட்சியளிக்கின்றது. காட்சியைப்பார்க்கப்போகும் மக்கள் நீர் வீழ்ச்சி விழும் மையத்துக்கு அண்மையில் சென்று பார்ப்பதற்கு அழைத்துச்செல்வதற்கு வாடகைப் படகுகள் மக்களை அழைத்துச்செல்லும். அதிகமான மக்கள் அவ்வாறு படகுகளில் சென்று திரும்புவதை அவதானித்தேன். அவ்வாறு விழும் நீர்வீழ்ச்சித்தண்ணீர் ரொரண்டோ வாவியைத்தான் நிரப்பி நிற்கிறது. அவ்வாவியினுடைய காட்சியும் குட்டிக்கடலாகவே காணமுடிகிறது. உலகில் உள்ள நீர்வீழ்ச்சிகளில் மிகப் பிரமாண்டமான நீர்வீழ்ச்சியாக நைகறா நீர்வீழ்ச்சி அமைந்திருக்கின்றது. மாலை நேரம் ஆகும்போது அங்கு வீசும் காற்று அதிகமாக குளிர் அடைந்து இருக்கும். ஏறக்குறைய மாலை நேரம் வரை அக்காட்சிகளை எல்லாம் பார்த்து மகிழ்ந்துகொண்டு வீடு திரும்பினோம். என்னை அழைத்துச்சென்றவர் நேரடியாக எனது மகள் வீட்டில் சேர்த்துவிட்டுச் சென்றார்.

அங்கு தங்கியிருந்த நாட்களில் மருமகனுக்கும் மகளுக்கும் வேலை இல்லாத நாட்களில் ரொரண்டோ நகரத்தைச் சுற்றிப்பார்ப்பதற்கும் நண்பர்கள் உறவினர்கள் வீடுகளுக்குப் போவதற்கும் மோட்டார் காரில் அழைத்துச் செல்வார்கள். அப்பிரதேசத்தின் வீதி அமைப்புகள் மிகப் பிரமாதமானவையாகும். அனேகமான வீதிகள் யாவும் நேருக்கு நேராகவே அமைக்கப்பட்டிருக்கின்றன. குறுக்கு வீதிகள் கூட நேர்கோட்டில் தான் அமைக்கப்பட்டிருக்கின்றன. வளைவுப் பாதைகளை அங்குகாண்பது அரிதாகவே இருந்தது. கடைத்தொகுதிகளும் குறிப்பிட்ட ஒவ்வொரு வட்டத்துக்குள் அமைந்திருப்பதை அவதானிக்கலாம். பிரதானவீதிகள் அனைத்தும் மிக அகன்ற இரு வழிப்பாதைகளாகவே அமைக்கப்பட்டிருக்கின்றன. வீதி ஓரங்களிலோ கடைத்தொகுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்திருக்கும் இடங்களிலோ வீட்டு தொகுதிகள் அமைந்திருக்கும் இடங்களிலோ குப்பைகூழங்கள் தேங்கியிருப்பதைக் காணவே முடியாது. சகல இடங்களையும் துப்பரவு செய்யும் வேலையாட்கள் நாள் முழுவதும் செயற்படுவதைக் காணக்கூடியதாக இருக்கும். வீட்டுப்பாவனையின் போது சேரும் கழிவுப்பொருட்கள் பொதியிடப்பட்டு வீட்டுக்கு முன்புறமாக உள்ள வீதியோரத்தில் வைக்கப்படும். தினமும் நகரசபை ஊழியர்கள் அவற்றை வாகனங்களில் அப்புறப்படுத்துவார்கள். அதனால் சகல பிரதேசமும் அழகாகவே காட்சியளிக்கும்.

பாரிய தொழிற்சாலைகள் அனைத்தும் இரவு பகல் தொடர்ந்து இயங்கிக்கொண்டே இருக்கும். பணம் உழைக்கவேண்டும் என்று தொழிலாளர்கள் நாளாந்தம் இரண்டு தொழில்மையங்களில் வேலை செய்து கூடிய ஊதியம் பெறுவார்கள். அங்குள்ள தொழிலாளர்களின் ஓய்வு நேரம் என்பது அவர்களின் உறங்கும் நேரம்தான். அங்குள்ள சகல மக்களும் மிகச்சுறுசுறுப்பாக இயங்குவதைக் காணலாம். நடந்து செல்பவர்கள் எல்லாம் ஏதோ அவசரதேவைக்காக வேகமாகச் செல்வதுபோல் நடந்துசெல்வது வழக்கமாகும். கணவன் மனைவி இருவரும் வேலைசெய்யும் குடும்பங்கள் தங்கள் சிறிய குழந்தைகளை பிள்ளைப்பராமரிப்பு நிலையங்களில் விட்டுச்செல்வார்கள். கணவன் காலையில் வேலைக்குச் சென்றால் மனைவி பிற்பகலில் வேலைக்குச் செல்வார். அனேகமாக கணவனும் மனைவியும் தொழில் செய்தால்தான் குடும்பச்செலவை சமாளிக்க முடியும். மொத்தமாகக் கூறுவதானால் மக்கள் செயற்படும் தன்மை ஓர் இயந்திரமயமானதாகவே காணப்படுகிறது.

மக்கள் குடியிருப்பு பிரதேசங்கள் யாவும் ஏறக்குறைய சமதரைதோற்றம் உடையதாகவே தென்படுகிறது. வீதிகளில் ஏற்ற இறக்கங்கள் அரிதாகவே காணப்படுகின்றன. மக்கள் குடியிருப்பு பிரதேசங்களை அடுத்து உயர்ந்து வளரும் மரங்கள் உள்ள காட்டுப்பகுதிகள் இடையிடையே காணப்படுகின்றன. விடுமுறை நாட்களில் மக்கள் ஒன்று கூடி மகிழ்வதற்கு ஆங்காங்கு பூங்காக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவ்வாறு ஒன்று கூடும் மக்கள் உண்டுமகிழ்வதற்கென உணவுப்பண்டங்கள் தயாரித்து விநியோகிக்கும் தற்காலிக நிலையங்கள் அமைந்திருப்பதையும் காணலாம். அங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கியிருந்த ஒரு நாள் கடுமையான பனிப்பொழிவு நிகழ்ந்தது. நான் தங்கியிருந்த வீட்டில் எம் மாடியில் இருந்து வெளிப்புறத்தை நோக்கிய போது கண்ணுக்குள் தெரிந்த அனைத்துமே வெள்ளைநிறமாகவே காட்சியளித்தன. அக் காட்சியை நேரடியாகப்பார்த்து ரசிப்பதற்காக என்னை அழைத்துச்செல்லுமாறு மருமகனிடம் கேட்டேன். குளிருக்கு தாக்குப்பிடிக்கக்கூடிய உடுப்புக்களை அணிந்துகொண்டு புறப்படுமாறு கூறினார்.

அவ்வாறு புறப்படும் பொழுது பத்து வயதான ஒரு பேரனும் எங்களுடன் வரப்போவதாக அடம்பிடித்தார். அவரையும் அழைத்துக்கொண்டு மோட்டார் காரில் புறப்பட்டோம் பாதைகளில் படிந்திருந்த பனிப்பாளங்கள் பாதைசுத்திகரிப்பாளர்களால் சுத்திகரிக்கப்பட்டு இருந்தது. அதனால் வாகனத்தை ஓட்டிச்செல்வதில் சிரமம் இருக்கவில்லை. ஆனால் பாதையில் இருமருங்கின் நிலப்பரப்பு பனிப்படலாமாகவே காட்சியளித்தன. அவ்வாறு நாம் போய்க்கொண்டு இருக்கும் பொழுது பேரன் படிக்கும் பாடசாலைக்கு முன்பாக உள்ள விளையாட்டு மைதானத்தைக் கடந்து செல்ல நேரிட்டபொழுது. அந்த மைதானத்தில் நிறைந்திருந்த பனிப்படலத்தை காரில் இருந்து இறங்கிப் பார்க்கவிரும்பினேன். அவ்வாறு நான் இறங்கிப் பார்க்கவிரும்பிய பொழுது என்னோடு பேரனும் கீழே இறங்கி பனிப்படலம் நிறைந்திருந்த அந்த விளையாட்டு மைதானத்துக்குள் ஓடிச்சென்றான். துள்ளிகுதித்து விளையாடத்தொடங்கினான். அத்துடன் வீழ்ந்து உருண்டு பிரண்டு விளையாடினான். அத்துடன் கையில் அகப்பட்ட பனிக்கட்டி குண்டுகளை எடுத்து எறிந்து மகிழ்ந்தான். அக் காட்சியைக்கண்ட போது எமது நாட்டில் மழைக்காலத்தில் ஏற்படும் சிறு வெள்ளப்பெருக்கில் எமது நாட்டுக் குழந்தைகள் துள்ளிக் குதித்து விளையாடுவது ஞாபகத்துக்கு வந்தது.

சில நாட்களின் பின், சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்திழுக்கும் கனடாவின் தேசியக்கோபுரத்தைப் பார்வை இடுவதற்கு மகள் குடும்பசமீதராக என்னை அழைத்துச்சென்றார் அக் கோபுரத்தை வெளியே நின்று பார்க்கும் பொழுது வட்டவடிவில் அமைக்கப்பட்ட மணிக்கூட்டு கோபுரம் போலவே காட்சியளிக்கின்றது. உள்ளே சென்று பார்க்கும் பொழுதுதான் அது ஓர் பலமாடிகளைக்கொண்ட கட்டிடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனபதைத் தெரிந்துகொள்ளலாம். ஒவ்வொரு மாடியிலும் வெவ்வேறு வகையான கடைத்தொகுதிகள் அமைந்திருக்கின்றன. கோபுரத்துக்குள் நாங்கள் பிரவேசிக்கும் பொழுது நுழைவாயிலில் வைத்து எம்மைப்புகைப்படம் எடுப்பார்கள். நாம் வெளியேறும் பொழுது எமது புகைப்படத்தோடு அத் தேசிய கோபுரபட அமைப்புகளையும் இணைத்துத் தருவார்கள். மாடிக்கடைப்பகுதிகளில் நானாவிதமான பொருட்களையும் கொள்வனவு செய்யலாம். கோபுரத்தின் உக்கட்டமைப்புக்களைப் பார்த்து ரசிப்பதைவிட ஒவ்வொரு மாடியிலும் சுற்றுகின்ற பொழுது பார்க்கின்ற வெளிப்புறக்காட்சிகள் மிகவும் மனதைக்கவரும். அப்படியே ஒவ்வொருமாடியிலும் நின்று வெளிப்புறக்காட்சிகளைப் பார்த்துக்கொண்டு உச்ச மாடிக்குப்போனால் ரொரண்டோ நகரம் முழுவதையுமே அங்கு நின்று பார்க்கமுடியுமென்றால் கோபுரத்தின் உயரத்தை கற்பனை செய்து கொள்ளலாம். கோபுரத்தின் உச்சியில் நின்று கொண்டு ரொரண்டோ வாவி அமைந்திருக்கும் காட்சியைக் காணலாம். இவ்வாறு மூன்று மாதங்கள் வரை கனடாவில் தங்கியிருந்து ரொரண்டோ மானிலத்தின் நகரப்பகுதிகளைச் சுற்றிப் பார்வையிட்டுள்ளேன்.

கனடாவில் நிரந்தரமாக வாழும் உரிமை பெறக்கூடிய விசா அனுமதியோடு (அதாவது ஐந்து வருடகால எல்லைக்குள் 730 நாட்கள் கனடாவில் தங்கியிருந்ததாக அத்தாட்சி படுத்தப்படும் நிலையில் நிரந்தர வதிவிட உரிமைவழங்கப்படும்) நான் கனடாவிற்குச் சென்றிருந்த பொழுது வெளிநாட்டில் எனது வாழ்வை முடித்துக்கொள்வதற்கு ஏதோ ஓர் உள்ளுணர்வு தடையாகவே இருந்தது. அது சில வேளை எனது நாட்டுப்பற்று உணர்வாக இருக்கலாம். வெளிநாட்டில் வாழ்கின்ற ஆறு பிள்ளைகளில் எவருடனும் மிக உல்லாசமாகத் தங்கியிருந்து மனோரம்மியமாக வாழக்கூடிய வாய்ப்பு இருந்தும் அதில் மனம் லயிக்கவில்லை.

கனடாவில் தங்கியிருந்த மூன்று மாத முடிவில் லண்டன் செல்வதற்கான விசா பெறுவதற்கு மருமகனோடு ரொரண்டோவில் இருந்து மோட்டார்க்காரில் ஒட்டோவா நோக்கிப்புறப்பட்டோம். ரொரண்டோவிற்கும் ஒட்டோவாவிற்கும் இடையே மிகநீண்ட தூரம் பிரயாணம் செய்யவேண்டும். அவ்வாறு சென்ற பொழுது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரொரண்டோவிற்கும் ஒட்டோவாவிற்கும் இடையே பாதையின் இரு மருங்கிலும் இடையிடையே சிறிய மலைத்தொடர்கள் உள்ள காட்டுப்பிரதேசம் அமைந்திருந்ததைப் பார்க்கக் கூடியதாக இருந்தது. ஒட்டோவாவில்தான் பிரித்தானியா உயர்ஸ்தானிகர் அலுவலகம் அமைந்திருந்தது. அங்கு சென்று லண்டன் விசா அனுமதியைப் பெற்றுக்கொண்டு ஒட்டோவா நகரின் மத்திய பகுதியைச் சுற்றிபார்வையிட்டுக்கொண்டு ரொரண்டோவிற்கு திரும்பினோம். இரண்டொரு தினங்களில் லண்டனுக்குப் புறப்பட்டுச் சென்றேன்.

எனது தேசிய உடை காரணமாக விமானத்திலும் செல்லும் இடங்களிலும் ஆங்கிலேயருக்கு நான் ஓர் காட்சிப்பொருளாகவே காட்சியளிக்கும் நிலையே தொடர்ந்தது. லண்டன் செல்வதற்குப் புறப்பட்ட பொழுது எனது மகள் தமிழ்வாணியும் மருமகனும் பேரப்பிள்ளைகளும் நண்பர்களும் என்னை கனடா விமானநிலையத்தில்வைத்து வழியனுப்பி வைத்தனர். லண்டன் விமானநிலையத்தைச் சென்றடைந்த பொழுது மகள் தமிழரசியும் மகன் தமிழ்ஞானனும் என்னை வரவேற்று அழைத்துச்சென்றனர். முதலில் ஞானன்வீட்டில் தங்கியிருந்த நான் லண்டனில் தங்கியிருக்கும் பிள்ளைகளின் வீடுகளில் மூன்று மாதங்களாக மாறி மாறி தங்கியிருந்தேன். அங்கு தங்கியிருந்த நாட்களில் லண்டனில் தங்கியிருக்கும் எனது நண்பர்களும் நான் தங்கியிருந்த இடங்களுக்கு வருகை தந்து என்னை மகிழ்வித்தனர். அங்குதங்கியிருந்த காலத்தில் ஓய்வு நாட்களில் லண்டன் மாநகரிலுள்ள முக்கிய இடங்களைப்பார்வையிட மகளும் மருமகனும் அழைத்துச்செல்வார்கள். லண்டன் மாநகரிலுள்ள ராணிமாளிகையைச் சுற்றிப்பார்வையிட அழைத்துச்சென்றனர். ராணிமாளிகை சுற்றுவட்டத்துக்குள் யாருமே உட்புக முடியாது. ராணிமாளிகை வாசலில் காவலுக்கு நின்ற ஓர் பெண் பாதுகாவலரை அணுகி அவரோடு நானும் எனது பேரப்பிள்ளைகளும் சேர்ந்து நின்று ஒரு புகைப்படம் எடுக்க அனுமதி கோரினோம். அவர் அனுமதித்ததன் பேரில் அவரோடு நின்று ஒரு புகைப்படம் எடுத்துக்கொண்டோம்.

அன்றையசுற்றுலாவின் போது பிக்மென் மணிக்கூட்டுக்கோபுரம் லண்டன் பாராளுமன்ற கட்டிட தொகுதி என்பவற்றையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்வையிட்டேன். அத்துடன் லண்டன் மாநகருக்குச் செல்லும் உல்லாசப்பயணிகள் அனைவரும் தவறாது பார்வையிடும் தேம்ஸ் நதியைப்பார்வையிட்டோம்.அங்கு செல்லும் உல்லாசப்பயணிகள் அனேகமாக தேம்ஸ் நதியில் படகுகளில் சென்று மகிழ்ச்சியடைவார்கள். தேம்ஸ் நதியின் கரையோரங்களில் பலவகையான நிழல் மரங்கள் நாட்டப்பட்டு இருக்கும் காட்சி மனதுக்குரம்மியமானது. தேம்ஸ் நதியில் வருடம்முழுவதும் நீர் நிறைந்தோடுவது மகிழ்ச்சிக்குரிய காட்சியே ஆகும். பிறிதொரு நாள் லண்டன் மாநகரின் முக்கிய இடங்களைப் பார்வையிட அழைத்துச்சென்றனர். அன்றைய தினம் மெழுகுசிலை அருங்காட்சியகத்துக்குச் சென்றேன். உண்மையாகவே உலகளாவிய நிலையில் புகழ் பெற்று விளங்கிய பெரியார்கள் அனைவரும் சிலை ரூபத்தில் அங்கு நிறைந்திருப்பதைப் பார்த்த பொழுது பெருமகிழ்ச்சி அடைந்தேன். அத்துடன் மகாத்மா காந்தி, நெல்சன் மண்டேலோ , நேருஜி ஆகிய பிரமுகர்களின் சிலைகளோடு நின்று புகைப்படம் எடுத்துக்கொண்டோம். பிறிதொரு நாள் லண்டன் மாநகரிலுள்ள இந்து ஆலயங்களைச் சுற்றிப் பார்வையிட்டேன். அங்கு நான் தங்கியிருந்த நாட்களில் எனது மைத்துனர் ஒருவரின் மனைவி சிவபதம் அடைந்தார். அவருடைய மரணச்சடங்கில் பங்குகொண்டு இரங்கல் உரையாற்றினேன். அத்துடன் இறந்தவர்களின் உடல்களை மின்சாரத்தின் மூலம் தகனம் செய்யும் முறையையும் கண்டு கொண்டேன்.

லண்டன் மாநகரைப்பொறுத்த வரையில் ஆங்காங்கு அமைந்துள்ள பாரிய கட்டிடங்களும் இடையிடையே அமைந்திருக்கும் பூங்காக்களும் வீதி யோரங்களில் நாட்டப்பட்டிருக்கும் நிழல் மரங்களும் ஆங்காங்கு அமைந்துள்ள தொழிற்சாலைகளும் தொடராக அமைக்கப்பட்டு இருக்கும் வியாபார நிலையங்களும் ஏனைய தொடர் மாடிக் கட்டிடங்களும் நகரத்தின் அழகை வெளிப்படுத்துவனவாக அமைந்திருக்கின்றன.

*********



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 28. இந்திய சுற்றுப்பயணம்

லண்டன் பயணத்தை முடித்துக்கொண்டு இலங்கைதிரும்பிய நான் சில நாட்கள் இலங்கையில் தங்கிஇருந்துவிட்டு நோய்வாய்ப்பட்டிருந்த எனதுமகன் தமிழ்வாசனுக்கு இந்தியாவில் சிகிச்சை பெறவேண்டி இருந்தமையால் அவரை அழைத்துக்கொண்டு சென்னைமாநகரிற்கு போய்இருந்தேன். சென்னையில் மயிலாப்பூர் என்னும்இடத்தில் தங்கியிருந்து தேவகிவைத்தியசாலையில் ஏறக்குறைய இரண்டு மூன்று மாதங்கள் சிகிச்சைபெறப்பட்டது. அவர் சுகமடைந்ததும் அவரை இலங்கைக்கு அனுப்பிவைத்துவிட்டு எனது மகன் தமிழ்ஞானன் என்பவரின்பிள்ளையின் நேர்த்திக்கடனை நிறைவுசெய்வதற்காக இந்தியாவில் தங்கியிருந்தேன். தமிழ்ஞானன் தனது மகனையும் அழைத்துக்கொண்டு லண்டனில் இருந்து இந்தியாவிற்கு வருகைதந்தார். அப்பிள்ளையின் நேர்த்திக்கடனை நிறைவுசெய்வதற்காக இந்தியாவில் உள்ள முக்கிய ஆலயங்கள் அனைத்திற்கும் செல்வதற்காக ஓர் மோட்டார் வாகனத்தில் புறப்பட்டோம்.

முதலில்ஆறுபடைவீடுகளில் ஒன்றான திருத்தணிகைக்குச் சென்றிருந்தோம். கோவில் வளாகத்தைச் சுற்றிப்பார்த்து ஆலயம் அமைந்திருந்த புறச்சூழல் காட்சிகளைப் பார்த்துமகிழ்ந்து கொண்டு ஆலயத்துள் பிரவேசித்து முருகப்பெருமானைத் தரிசித்து காணிக்கை செலுத்தி நேர்த்திக்கடனை நிறைவுசெய்தோம். அதனைத்தொடர்ந்து ஆறுபடைவீடுகளில் ஒன்றான திருச்செந்தூர் தவிர்ந்த பழமுதிர்ச்சோலை, திருப்பரங்குன்றம், பழனி, திருக்கழுக்குன்றம் ஆகிய ஆலயங்களுக்கும் தஞ்சைப்பெருங்கோயில், ஸ்ரீரங்கம், சிதம்பரம், மதுரை மீனாட்சி அம்மன் கோவில், திருப்பதி ஆகிய அனைத்து ஆலயங்களுக்கும் விஜயம் செய்து காணிக்கை செலுத்தி நேர்த்திக்கடனை நிறைவுசெய்தோம். இவ்வாலயங்களின் கட்டிட அமைப்புக்களை விபரித்துக்கூறுவதானால் அது ஓர் பெரிய வரலாற்றுப்புத்தகம் ஆகிவிடும். அதனால் ஆலயக்கட்டிடஅமைப்பு நுட்பங்களை பொதுவாக குறிப்பிட விரும்புகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தஞ்சைப்பெருங்கோவில், ஸ்ரீரங்கம், சிதம்பரம், மதுரை மீனாட்சிஅம்மன் கோவில் ஆகிய ஆலயங்களின் கட்டிட அமைப்புக்கள் கோபுரஅமைப்புகள் பெரும்வியப்பூட்டுவதாகவே அமைந்திருக்கின்றன. கட்டிடஅமைப்பு முழுவதும் பொழிந்தெடுக்கப்பட்ட கருங்கற்களாலேயே கட்டப்பட்டு இருக்கின்றன. அவ்வாறு பொழிந்தெடுக்கப்பட்ட கற் தூண்கள் சகல ஆலயங்களிலும் வியப்புக்குரியதாய் அமைந்திருக்கின்றன. தள அமைப்புக்கள் முழுவதும் பொழிந்தகருங்கற்களாலேயே அமைக்கப்பட்டு இருக்கின்றன. அது மாத்திரம் அல்ல ஆலயங்களின் கூரைப்பகுதிகள் சில கூட பொழிந்தெடுக்கப்பட்ட கருங்கல் சிலாகைகளாலேயே அமைக்கப்பட்டு இருக்கின்றன. பல ஆண்டுகளுக்குமுன்பு உருவாக்கப்பட்ட இவ்வாலயங்களின் கட்டிடஅமைப்பில் பாவிக்கப்பட்டிருக்கும் கற்சிலாகைகளை ஆலயங்களின் உயர்மட்டத்துக்கு எவ்வாறு எடுத்துச்சென்று பொருத்தி அமைத்திருக்கிறார்கள் என்பதைப்பார்க்கும் போது உண்மையாகவே பேர்ஆச்சரியமாகவே இருக்கின்றது. அத்துடன் ஒவ்வொருகோவிலும் பலஏக்கர் விஸ்தீரணமான நிலப்பரப்பினை உடையதாக அமைந்திருக்கிறது. அத்துடன் கோவிற் கோபுரங்களைப் பார்க்கின்றபோது அச்சிகரங்களில் அமைந்துள்ள சிற்ப அமைப்புகள் கண்கொள்ளாக்காட்சியாகவே காட்சிதருகின்றன.

ஆறுபடைவீடுகள் அநேகமாக மலைச்சாரல்களிலேயே அமைந்திருக்கின்றன. ஆலயங்களின் அழகிற்கு மேலும் அழகூட்டும் நிலையில் கோயில்களின் புறமலைச்சூழல் அமைந்திருக்கின்றது. ஒவ்வொரு ஆலயமும் அமைந்துள்ள வித்தியாசமான அழகூட்டும் கலைவடிவங்களைக் கொண்டதாகவே காட்சிதருகிறது. இவ்வாறாக கோவில்தரிசனங்களின் போது திருப்பதியில் மகன் ஞானனும் பேரனும் தலைமுடி இறக்கி நேர்த்திக்கடனை நிறைவுசெய்தனர். பழனி ஆலயத்தில் பேரனுக்கு காதுகுத்தப்பட்டது. இவ்வாறு மூன்று நான்கு தினங்களாக சுற்றித்திரிந்து ஆலயதரிசனங்களை முடித்துக்கொண்டு சென்னைக்குத் திரும்பினோம். அங்கிருந்து மகனையும் பேரனையும் லண்டனுக்கு அனுப்பிவிட்டு அன்றே நானும் சென்னையில் இருந்து இலங்கைக்கு வந்திறங்கினேன்.

***********



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மகள் தமிழ்வாணி, கணவர் பாலச்சந்திரன் பிள்ளைகளுடன்



மெழுகுச் சிலை மண்டேலாவுடன்



மெழுகுச்சிலை மகாத்மாகாந்தி, தலாய்லாமாவுடன்



மெழுகுச்சிலை இந்திராகாந்தியுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவளி

*பொன்னம்பலம் + *மீனாட்சி

↓

*சிவசிதம்பரம் | சந்திரசேகரி | *சிவராசா

*வேலுப்பிள்ளை | *வள்ளிப்பிள்ளை | *நாகமுத்து | சின்னத்த

சந்திரசேகரி +

↓

தமிழரசி
+
அன்பழகன்
↓
தமிழ்ச்செல்வன்
மயிலோன்
நயனி

*தமிழ்வாசன்
+
சாந்தநாயகி
↓
நாவேந்தன்
*நிவேதனா

* தமிழ் அழகன்

*தமிழ்ச்செல்வன்


தமிழ்ச்செல்வி
+
தில்லைநாதன்
↓

- விசிதா + றஞ்சன் ↓ சங்கீத், உதர்சன்
- வவா + சதீஸ்குமார் ↓ சயன், சயனி, சயீனா, சுயித்தா
- செந்தமிழ்ச்செல்வன்
- சுபா + நேரு

தமிழ்வாணன்
+
சுகந்தி
↓
தமிழினி
கபிலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவளி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூலும் நூலாசிரியரும் ..

- சுயசரிதையை எழுதுவதற்குரிய தகுதி இவருக்கு உண்டு என்பதை நான் அறிவேன். இவரது சுயசரிதை இவரது மண்ணோடும், மக்களோடும் பின்னிப் பிணைந்தது என்பதையும் நான் நன்கு அறிந்திருந்தேன்.

- வன்னிமண் ஆக்கிரமிக்கப்பட்டு அபகரிக்கப்படுகின்ற அவலநிலை, ஆதாரங்களோடு இந்நூலில் காட்டப்பட்டுள்ளது. மணலாறும், அதைச் சூழ்ந்த பகுதிகளும் தமிழர் வாழ்விடங்கள் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

- இவரது தமிழ்ப் பற்று இவரது பிள்ளைகளின் பெயர்களில் தெரிகிறது. இவரது தமிழ்க் கலாசாரப் பற்று இவரது உடையில் தெரிகிறது.

- வன்னி மக்கள் கல்வியிலும், பொருளாதார நிலையிலும், பின்தங் கியமைக்கான காரணிகளை ஆராய்ந்து சீர்செய்ய இவர் அரும்பாடுபட் டிருக்கிறார்.

- நல்ல ஆசிரியராக, நல்ல அதிபராக, நல்ல தொழிற்சங்க வாதியாக, நல்ல விவசாயியாக, நல்ல சமூக சேவகனாக, நல்ல அரசியல் வாதியாக இவர் செயற்பட்ட விதம் இங்கே விரிந்து செல்கின்றது.

- எதிர்காலச் சந்ததிக்கு இந்நூல் ஒரு வரப்பிரசாதம், சமகாலத்தவர்களுக்கு இந்நூல் ஒரு நினைவூட்டற் சுரங்கம், வன் னியை முன்னேற்ற வேண்டுமென்று உறுதியாக நினைப்பவர்களுக்கு இந்நூல் ஒரு சிறந்த வழிகாட்டி ஆதாரம். வரலாற்று ஆய்வாளர்களுக் கு இந்நூல் ஒரு வரலாற்றுப் பொக்கிசம்.

**கலாநிதி அகளங்கன்**

வாணி கணினிப் பதிப்பகம் - வவுனியா. தொ.பே : 024 2223658.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org